
கல்கி



KALKI மே 25, 1952 **4** அணா

"லக்ஸ் டாய்லட் சோப்

என்
சருமத்திற்கு
விசேஷ
நன்மையளி-
க்கிறது"

என்று சொல்கிறார்

பி.எஸ்.ஸரோஜா



இனிய மணத்துடன் கூடிய
இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான
சோப் உங்கள் சருமத்தை
வசீகரமாகச் செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 324-X30 TM


கல்கி பொருளடக்கம்

மலர் 11
இதழ் 43

1952 மே 25

நந்தன ௵
வைகாசி 12

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


De Soto
DIPLOMAT
UTILITY
DELIVERIES
SURVEYORS
ENGINEERS
CONTRACTORS
HOTELS
TOURIST AGENCIES
PLEASURE
TRIPS
HERE'S A STYLISH
TWO - PURPOSE VEHICLE
MEANT FOR BUSINESS
As a delivery vehicle or a passenger coach, the De Soto Utility is unmatched in usefulness. Well-dimensioned and sturdy with all-steel body, it's there to give you many miles of good service.
MEANT FOR THE FAMILY
The De Soto's smart lines and delightful colouring ooze style. Plus generous leg-room, comfortable seats and luggage room make it a prime favourite as a family car.
THE PREMIER AUTOMOBILES LTD.
Factory : AGRA ROAD, KURLA
H. O. Construction ouse :
BALLARD ESTATE, BOMBAY
DEALERS :
ANAND AUTOMOBILES
Nawaz Mansions, 36-B, Mount Road, MADRAS

கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 43

மழையும் பிரார்த்தனையும்

இம்மாதம் முதல் வாரத்தில் சென்னைக் கடற்கரையில் கூடிய காங்கிரஸ் எதிர்ப்புக் கூட்டம் ஒன்றில் திரு ஈ. வெ. ராமசாமிப் பெரியார் பின்வருமாறு கூறினார்:— ''மழைக்காகப் பிரார்த்தனை செய்யும்படி ராஜாஜி சொல்கிறார். பிரார்த்தனையினால் மழை வந்து விடுமா? நாங்கள் தான் நாஸ்திகர்கள், எங்களுடைய வீட்டில் மழை பெய்யாமலிருக்கட்டும். ஆஸ்திகராயிருந்து பிரார்த்தனை செய்யும் இவருடைய வீட்டிலாவது மழை பெய்வதுதானே?'' என்றார்.

இதைக் கேட்ட பெரியாரின் சீடர்கள் சிரித்து ஆரவாரம் செய்தது இயல்புதான். மேலும் ஸ்ரீ ஈ. வெ. ரா. ''பத்திரிகையிலே பஜகோவிந்தம் பிரசாரம் செய்தாகிவிட்டது. அது போதாது என்று முதன் மந்திரி பதவியிலிருந்து பஜகோவிந்தம் பிரசாரம் செய்ய ராஜாஜி முன் வந்திருக்கிறார்!'' என்று கூறியதாக அறிகிறோம்.

பெரியாரின் 'ஸவா'லுக்குப் பதில் கூறியதே போல், இந்த மே மாதம் 19உ காலையில் ஆஸ்திகரும் பிரார்த்தனையில் நம்பிக்கையுள்ளவருமான ராஜாஜியின் வீட்டில் நல்ல மழை பெய்தது! ''நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யுமழை'' என்னும் தமிழ் முது மொழியை மெய்ப் படுத்துவதற்காகச் சென்னை நகரமெங்கும் அந்த மழை பரவியே பெய்தது. மேலும் தொடர்ந்து 20உ யன்று சென்னையிலும் சுற்றுப்புற மெங்கும் நல்ல மழை பெய்தது.

ஆனால் ராஜாஜியின் பிரார்த்தனைக்காக மட்டும் இந்த மழை பெய்ததாக நாம் சொல்வதற்கில்லை. ஏனெனில் ராஜாஜி தமக்காக மட்டும் மழை பெய்ய வேண்டும் என்று பிரார்த்திக்கவில்லை. தம்முடைய வீட்டிலே மட்டும் மழை பெய்ய வேண்டும் என்றும் கோரவில்லை. திரு ராமசாமிப் பெரியாரும் அவருடைய சீடர்களும் உள்ளிட்ட சென்னை மக்கள் அனைவருடைய நன்மைக்காகவும் இம்மாகாணத்தில் மழை பெய்ய வேண்டும் என்றுதான் பிரார்த்திக்கிறார். தம்முடன் சேர்ந்து அனைவரும் மனப் பூர்வமாகப் பிரார்த்திக்க வேண்டும் என்றும் கோருகிறார். அப்படிப் பிரார்த்தித்தால் கடவுள் கருணை புரிவார், வானமும் மழை பொழியும் என்று நம்புகிறார்.

ஆகையால், ராஜாஜி இருக்குமிடத்தில் அன்று விசேஷமாக மழை பெய்ததற்குக் காரணம் திரு ராமசாமிப் பெரியாரின் பிரசங்கமாகவே இருக்கலாம் என்று கருதுகிறோம். ஏதோ ராஜாஜியின் குருட்டு பக்தியைக் கண்டிப்பதற் காகவாவது 'பஜ கோவிந்தம்' என்று இரண்டு மூன்று தடவை பெரியார் சொன்னார் அல்லவா? அதன் பலனாக மழை பெய்திருக்கலாம்!


'ஆஸ்திகர் வீட்டில் மழை பெய்யட்டும்' என்று பெரியார் பிரார்த்தித்தார் அல்லவா? அதன் பலனாகவும் இந்த மழை பெய்திருக்கலாம். ஆகையால் திரு ராமசாமிப் பெரியார் தமது மனதை மாற்றிக் கொண்டு கடவுளுடைய திருநாமங்களைக்

ஆனால் ராஜாஜியின் பிரார்த்தனைக்காக மட்டும் இந்த மழை பெய்ததாக நாம் சொல்வதற்கில்லை. ஏனெனில் ராஜாஜி தமக்காக மட்டும் மழை பெய்ய வேண்டும் என்று பிரார்த்திக்கவில்லை. தம்முடைய வீட்டிலே மட்டும் மழை பெய்ய வேண்டும் என்றும் கோரவில்லை. திரு ராமசாமிப் பெரியாரும் அவருடைய சீடர்களும் உள்ளிட்ட சென்னை மக்கள் அனைவருடைய நன்மைக்காகவும் இம்மாகாணத்தில் மழை பெய்ய வேண்டும் என்றுதான் பிரார்த்திக்கிறார். தம்முடன் சேர்ந்து அனைவரும் மனப் பூர்வமாகப் பிரார்த்திக்க வேண்டும் என்றும் கோருகிறார். அப்படிப் பிரார்த்தித்தால் கடவுள் கருணை புரிவார், வானமும் மழை பொழியும் என்று நம்புகிறார்.

ஆகையால், ராஜாஜி இருக்குமிடத்தில் அன்று விசேஷமாக மழை பெய்ததற்குக் காரணம் திரு ராமசாமிப் பெரியாரின் பிரசங்கமாகவே இருக்கலாம் என்று கருதுகிறோம். ஏதோ ராஜாஜியின் குருட்டு பக்தியைக் கண்டிப்பதற் காகவாவது 'பஜ கோவிந்தம்' என்று இரண்டு மூன்று தடவை பெரியார் சொன்னார் அல்லவா? அதன் பலனாக மழை பெய்திருக்கலாம்!

'ஆஸ்திகர் வீட்டில் மழை பெய்யட்டும்' என்று பெரியார் பிரார்த்தித்தார் அல்லவா? அதன் பலனாகவும் இந்த மழை பெய்திருக்கலாம். ஆகையால் திரு ராமசாமிப் பெரியார் தமது மனதை மாற்றிக் கொண்டு கடவுளுடைய திருநாமங்களைச்
சொல்லி மழைக்காக உண்மையாகவே பிரார்த்தனை செய்தால், நிச்சயமாகவே மழை பொழிந்து தள்ளிவிடும் என்று கருதுகிறோம்.

மாமழை போற்றுதும்!



வறண்ட பூமிக்கு மாமழைபோல் ராஜாஜியின் நேர்மையான அரசாங்க நிர்வாகம், சென்னை மக்களுக்குக் குதூகலம் அளித்திருக்கிறது!

காயத்ரி மந்திரத்தில் புராணக் கடவுள் பெயர் எதுவும் இல்லை. அதைப் பாரதியார் பின்வருமாறு மொழி பெயர்த்திருக்கிறார் :—

'செங்கதிர்த் தேவன் சிறந்த ஒளியினைத்
தேர்கின்றோம்—அவன்
எங்கள் அறிவினைத் தூண்டி நடத்துக!'

அதாவது, 'ஒளி மயமாயுள்ள தெய்வத்தை வேண்டுகிறோம்; அத் தெய்வம் எங்கள் அறிவைத் தூண்டி வளர்க்குமாக!' என்பதுதான்.

இந்த மந்திரத்தை எல்லாருக்கும் தெரிந்த தமிழில் பகுத்தறிவாளர் பிரசாரம் செய்வது மிகப் பொருத்தமா யிருக்குமல்லவா!

ஆகையால், "ஒளி" என்ற பெயரினாலோ "அறிவு" "பகுத்தறிவு" "சுய அறிவு" என்ற பெயரினாலோ கடவுளை அழைத்து மழைக்காகப் பிரார்த்தனை செய்யும்படி திரு ஈ. வெ. ரா. பெரியார் முதலிய பகுத்தறிவாளரைக் கேட்டுக் கொள்கிறோம். அதற்கும் விருப்பமில்லா விட்டால், "பிரார்த்தனையினால் மழை வந்துவிடுமா!" "பஜ கோவிந்தம் பாடினால் பஞ்சம் தீர்ந்து விடுமா!" என்றாவது அவர்கள் அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கட்டும். அந்த வரைக்கும் அவர்களுடைய உள்ளங்கள் பிரார்த்தனையிலும் பகவானுடைய திருநாமத்திலும் நின்றதாகு மல்லவா!

* * *

நீங்களை "நாஸ்திகர்கள்' என்று பெருமையுடன் சொல்லிக் கொள்கிறவர்களும், "வேத புராணங்களில் நம்பிக்கை யில்லை" என்று சொல்லிக் கொள்கிறவர்களும், மழைக்காகப் பிரார்த்தனை செய்யும் கொள்கையைக் கேலி செய்வதில் வியப்பு ஒன்றுமில்லை. அது அவர்களிடம் நாம் எதிர்பார்க்கக் கூடியதுதான்.

ஆனால் வேத சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஆஸ்திக சிரோ ரத்தின சூடாமணிகளும் அதே தோரணையில் பேசுவதும் எழுதுவதும் விந்தையிலும் விந்தையான விஷயம் அல்லவா!

பேராசிரியர் நாகராஜ சர்மா என்பவர் அத்தகைய ஆஸ்திக சிரோ ரத்தின சூடாமணிகளில் ஒருவர். ராஜாஜி மழைக்காகப் பிரார்த்தனை செய்யும்படி கூறியதைக் கேலி செய்தும் கண்டித்தும் மேற்படி பேராசிரியர் பத்திரிகைகளுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். "கடவுள் அப்படியெல்லாம் பிரார்த்தனைக்கு மசிந்து விடுவாரா? தண்ணீருக்காகக் கிணறு தோண்ட வேண்டும். அதை விட்டு மழைக்குப் பிரார்த்தனை செய்யச் சொல்கிறாரே இந்த முதன் மந்திரி!" என்று அந்தப் பேராசிரியர் எழுதியிருந்தார்.

தண்ணீருக்குக் கிணறு தோண்ட வேண்டும் என்பது பேராசிரியர்களுக்குத்தான் தெரியும் என்பதில்லை. எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்குக் கூடத் தெரியும். சென்னை இராஜ்யத்தில் கிணறுகள் தோண்டப்பட்டுத்தான் வருகின்றன. அதிலும், இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் வந்து பஞ்சப் பிரதேசங்களில் கிணறு தோண்டிக் கொடுக்கிறார்கள்; வறண்டு போன கிணறுகளை ஆழமாக்கிக் கொடுக்கிறார்கள்.

ஆனால் எவ்வளவு கிணறுகள் தோண்டினால் என்ன! ஆழமாக்கினால்தான் என்ன! நெடுங்காலம் மழை பெய்யாமலிருந்தால், கிணற்றைத் தோண்டத் தோண்டத் தண்ணீர் பாதாளத்தில் போய்க் கொண்டுதா னிருக்கும். அத்தகைய பாதாளக்

கிணறுகள் மூலம் குடிக்கத் தண்ணீர் கிடைத்தால் பெரிய காரியம். பஞ்சமும் பட்டினியும் தீருமா!

மகானுகிய திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கூறினர்:

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி!"

வானம் பொய்த்தால் மக்கள் பசியால் வருந்தியே தீர வேண்டும் என்னும் திருவள்ளுவர் வாக்கை யாரும் பொய்க்கச் செய்ய முடியாது. கிணறு தோண்டுதல், ஏரி வெட்டுதல், கஞ்சித் தொட்டி வைத்தல், தானியக் கட்டுப்பாடு செய்தல், கட்டுப்பாட்டை எடுத்தல், — இவையெல்லாம் ஓரளவுதான் உதவி செய்யும்.

முயற்சியினுலும் அறிவினுலும் மற்ற எந்தக் காரியத்தையும் மனிதன் சாதிக்கலாம். ஆனல் மழை பெய்யச் செய்யும் முறையை இன்னும் மனிதன் கண்டு பிடிக்கவில்லை. "மனிதனுக்கும் அவனுடைய அறிவுக்கும் ஆற்றலுக்கும் மேற்பட்ட தெய்வ சக்தி ஒன்று உண்டு" என்பதை மழையும் மழையின்மையுந்தான் நமக்கு நினைவூட்டி வருகின்றன.

வேதரிஷிகள் முதல் மகாத்மா காந்தி வரையில் பிரார்த்தனையின் சக்தியை நமக்கு உணர்த்தியிருக்கிறார்கள்.

"பிரார்த்தனையினுல் மழை வராது" என்று ஆசிரியர் நாகராஜ சர்மா சொல்வது உண்மையானுல், வேதங்களில் வருணனைப் பிரார்த்திக்கும் மந்திரங்களெல்லாம் பொருளற்றவையா!

"வீழ்க தண்புனல்!" என்றும்,

"மாமழை போற்றுதும்!" என்றும் பிரார்த்தனை செய்த தமிழ் நாட்டு முனிவர்கள் வெற்றுரையாளர்களா!

உண்மை உள்ளத்துடனும் முழு நம்பிக்கையுடனும் பெருந் திரளான மக்கள் பிரார்த்தனை செய்தால், அதற்கு நிச்சயம் பலன் கிட்டியே தீரும். மழை பெய்யும்; நாடும் செழிக்கும்!

உலகம் கவனிக்கிறது!

இலங்கையில் இந்தியத் தலைவர்கள் நடத்தி வரும் சத்தியாக்கிரஹ இயக்கம் எவ்வளவு தூரம் வெற்றி அடையும், எப்போது வெற்றி அடையும் என்று யாரும் சொல்வதற்கில்லை.

ஆனல் ஓரளவு அதற்குப் பலன் கிட்டியிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

இலங்கை இந்தியர் நிலைமையை உலகம் கவனிக்கும்படி அது செய்திருக்கிறது.

இந்தியா தேசத்தின் கவனத்தை முழுக்க முழுக்கக் கவர்ந்திருக்கிறது.

இப்போதெல்லாம் அகில இந்திய ரேடியோவில் செய்தி சொல்லும் சமயத்தில் பெட்டியைத் திறந்தால், இலங்கை இந்தியரைப் பற்றிய செய்தி ஏதேனும் சொல்லப்படாமல் இருப்பதில்லை.

இந்தியப் பார்லிமெண்டிலே ஜனுதிபதி பாபு ராஜேந்திரர் நிகழ்த்திய முதல் பிரசங்கத்தில், இலங்கை இந்தியர்களின் ஜீவாதார உரிமை பறிக்கப்பட்டிருப்பதைக் குறித்துத் தமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார். எந்த நாட்டின் முன்னேற்றமும் அதன் மக்களுக்கு அளிக்கப்படும் உரிமைகளைப் பொறுத்திருக்கிறதே யன்றி, உரிமை மறுக்கப்படுவதைப் பொறுத்ததல்ல என்பதையும் ஜனுதிபதி சுட்டிக் காட்டினர்.

சென்னைச் சட்ட சபையின் தற்போதைய அமைப்பு அனைவரும் அறிந்ததே. அதில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். முற்றும் மாறுபட்ட கொள்கைகளை உடையவர்கள் இருக்கிறார்கள். ஆயினும் அனைவரும் சேர்ந்து ஒருமுகமாக இலங்கையில் உள்ள இந்தியர்கள் நடத்தும் உரிமைப் போராட்டத்தில் அநுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

இலங்கை சர்க்காரின் முரண்பட்ட கூற்றுக்களுக்கு அவ்வப்போது இந்திய சர்க்கார் பதில் விடுத்து வருகிறார்கள்.

ஆகவே இலங்கை இந்தியரின் சத்தியாக்கிரஹம் ஓரளவு பலன் தந்திருக்கிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

சில தினங்களுக்கு முன் இந்தியாவின் பிரதம மந்திரி ஜவாஹர்லால்ஜி பேசிய போது இலங்கையை இந்தியாவின் இளைய சகோதரன் என்று வர்ணித்தார். மேற்படி வர்ணனை முற்றிலும் சரி என்பதை இலங்கைப் பிரதமர் டட்லி சேனநாயகா உலகத்துக்கு நிரூபித்து வருகிறார்!

இலங்கை இளைய சகோதரர் என்றால் இந்தியா மூத்த சகோதரர் என்று ஆகிறது அல்லவா! மூத்தவர் இளையவருடன் சமாதானமாகப் போக வேண்டும் என்கிறார். இளையவர் விஷயத்தில் பலாத்காரத்தை உபயோகிக்கக் கூடாது என்று கூறுகிறார். சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் வட்ட மேஜையைச் சுற்றி உட்கார்ந்து பேசி இலங்கை இந்தியர் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்.

ஆனல் இளையவரோ இந்தியர்கள் சகோதரர்கள் அல்ல, அன்னியர்கள் என்று சாதிக்கிறார். இந்தியர்கள் தங்களை நசுக்கி ஆதிக்கம் செலுத்தப் பார்க்கிறார்கள் என்று தவிக்கிறார். தாங்கள் கொண்டுள்ள கோலத்தைக் கைவிட முடியாது என்று பிடிவாதம் செய்கிறார்.

நிறவெறி பிடித்த தென்னப்பிரிக்கப் பிரதமர் டாக்டர் மலான்கூட இந்தியர்களுக்கும் மற்ற சுதேசிகளுக்கும் வாக்காளர் ஜாபிதாவைத் தனியாகத் தயாரிக்க முடிவு செய்திருக்கிறாரேயன்றிப் பிரஜா உரிமை வழங்க அடியோடு மறுக்கவில்லை. அந்தக் கொள்கையே ஜனநாயக தர்மத்துக்கும் உலக நீதிக்கும் முரணுனது என்று உலக ஜனநாயக வாதிகள் கண்டிக்கின்றனர்.

அப்படியிருக்க, பல நூற்றாண்டுகளாக இலங்கையைத் தாயகமாகக் கொண்டுள்ள இலங்கை இந்தியர்களுக்கு வோட்டுரிமை வழங்க மறுப்பதை யார்தான் ஒத்துக் கொள்ள முடியும்!

ஒன்று பழைய வாக்காளர் ஜாபிதாவை அடிப்படையாகக் கொண்டு தேர்தலை நடத்த முற்பட்டிருக்க வேண்டும்; அல்லது புதிய ஜாபிதா உருவாகும் வரையில் தேர்தலைத் தள்ளிப் போட்டிருக்க வேண்டும். அவ்விதமின்றி இந்தியர்களுடைய பெயர்களை மாத்திரம் அகற்றிவிட்டுத் தேர்தலை நடத்த முற்படுவதை நியாய புத்தி படைத்த யார்தான் ஒப்புக் கொள்ள முடியும்!

இலங்கை சர்க்கார் உலகத்தின் முன்னுல் தங்கள் நற்பெயரையும் இந்தியாவுடன் சகோதர பாவத்தையும் நிலைநாட்டிக் கொள்ள விரும்பினுல் இந்தியர்களுக்குப் பிரஜா உரிமையும் வாக்குரிமையும் அளித்தே தீர வேண்டும்.

வீர சிப்பாய்களின் சீரிய தொண்டு

பாரத நாட்டிலே இப்போது பயங்கரமான ஒரு போர் நடந்து வருகிறது. ராயலசீமைப் பிரதேசத்தில், கர்நூல், கடப்பை, சித்தூர் முதலிய ஜில்லாக்களில் படையெடுத்து வந்துள்ள விரோதியை எதிர்த்து வீர இந்தியச் சிப்பாய்கள் போர் புரிந்து வருகிறார்கள். அந்தப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள தண்ணீர்ப் பஞ்சக் கொடுமையைத் தணிக்கும் உத்தமமான கைங்கர்யத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

உயிரினுமினிய சுதந்திரத்தின் விரோதியிடமிருந்து தேசத்தைப் பாதுகாக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ அதுபோலவே, ஜனங்களின் சுபிட்ச வாழ்வைக் கெடுக்கும் விரோதிகளிடமிருந்தும் தேச மக்களை ரட்சிக்க வேண்டியது அவசியம் அல்லவா! சுதந்திரத்தின் லட்சியமே மக்களின் சுபிட்ச வாழ்வுதானே!

எனவே, சுதந்திரத்துக்காக உயிரைத் தியாகம் செய்யத் தயங்காத நமது வீர சிப்பாய்கள், சுபிட்சத்தின் சத்துருவான பஞ்சத்தை விரட்டியடிக்க இப்போது தங்களுடைய உழைப்பை அர்ப்பணம் செய்து வருகிறார்கள்.

அவர்கள் பழைய கிணறுகளை ஆழமாகத் தோண்டி வருகின்றனர்; புதிய கிணறுகள் வெட்டித் தருகின்றனர்; நதிக் கரைகளில் ஆழத் தோண்டி ஊற்றுக்கள் அமைக்கின்றனர். லாரிகளில் தண்ணீரை நிரப்பிக் கொண்டு ஊர் ஊராக, கிராமம் கிராமமாகச் சென்று ஜனங்களுக்கு விநியோகித்து வருகிறார்கள். மற்றும் பல விதத்திலும் அவர்களுடைய சேவை ஜனங்களுக்குப் பேருதவியாக இருந்து வருகிறது.

யுத்த காலத்தில் மாத்திரமல்ல, சமாதான காலத்திலும் இராணுவத்தினால் தேச மக்களுக்கு எவ்வளவு உதவி கிடைக்கக் கூடும் என்பதை மேற்படி சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

பஞ்சம் உக்கிரமாக இருந்து வரும் பிரதேசங்களுக்கு இந்தியாவின் பிரதம தளபதி மேஜர் ஜெனரல் கரியப்பா விஜயம் செய்து, சிப்பாய்களின் கடமையை வற்புறுத்தி, அவர்களை உற்சாகப் படுத்தினார். பஞ்சத்தில் அகப்பட்டுக் கொண்ட ஜனங்களுக்கு ஆறுதல் கூறினார்.

பாரத நாட்டிலே ஒரு காலத்தில் ஜன சமூகம் வேறு, இராணுவ சமூகம் வேறு என்ற மனோபாவம் இருந்து வந்தது. இந்தியா சுதந்திரம் பெற்ற பின் அத்தகைய மனோபாவம் மறையலாயிற்று. இப்போது ராயலசீமைப் பிரதேசத்தில் நமது இராணுவத்தினர் செய்து வரும் சீரிய தொண்டின் பலனாக அவர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் பரஸ்பரம் நீடித்த அன்பும் மதிப்பும் நெருங்கிய தொடர்பும் உண்டாகும் அல்லவா!

சக்கரம் சுழல்கின்றது

சரித்திரத்தின் சக்கரங்கள் சுழன்று சுழன்று வருகின்றன; சரித்திர சம்பவங்கள் திரும்பத் திரும்ப நிகழ்கின்றன என்று சொல்லுவார்கள். இந்தப் பழமொழி, சுதந்திரத்தை இழந்துள்ள நாடுகளின் விஷயத்தில் நூறு சதவிகிதம் உண்மையாக இருக்கிறது.

உலகத்திலே இது வரையில் எத்தனையோ நாடுகள் சுதந்திரத்தை இழந்து, அன்னியரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தன; இன்றும் உட்பட்டிருக்கின்றன. அன்னியரின் ஆதிக்கத்தைத் தகர்ப்பதற்காக அந்த நாடுகளில் உள்ள ஜனங்கள் போராடுவார்கள்; அந்த ஜனங்கள் சுதந்திரம் பெறத் தகுதியற்றவர்கள் என்று அதிகார வர்க்கத்தினர் சிறிது காலம் நாளைக் கடத்துவார்கள். சுதந்திரப் போராட்டத்தின் தீவிரத்துக்குத் தகுந்தவாறு அடக்குமுறைகளின் உக்கிரம் அதிகமாகும். அதிகார வர்க்கத்தின் ஆணவமும் சூழ்ச்சியும் சிகரத்தை எட்டும்! எனினும் இறுதியில் அதிகார வர்க்கம் இயற்கைக்கு அடிபணிய நேரும். அதாவது குறிப்பிட்ட தேசத்தின் நிர்வாகத்தைத் தேச மக்களிடம் வேண்டா வெறுப்புடன் ஒப்படைத்து விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியிராமற் போகும்.

இது சுதந்திரத்தை இழந்திருந்த ஒவ்வொரு நாட்டிலும் நிகழ்ந்த நாடகம்தான்! இன்றும் பல இடங்களில் அதே நாடகங்கள் நடக்கத்தான் செய்கின்றன. சரித்திர சம்பவங்கள் திரும்பத் திரும்ப நிகழும் என்பதற்கு இன்று டூனிசியா என்ற சிறிய தேசத்தில் நடந்துவரும் காரியங்களை உதாரணமாக எடுத்துக் கூறலாம்.

டூனிசியா சம்பந்தமான விவரங்கள் ஏற்கெனவே "கல்கி"யில் பிரசுரமான மத்திய கேந்திரக் கட்டுரைத் தொடரில் வெளியாகியிருந்தது ஞாபகம் இருக்கலாம். ஆப்பிரிக்காவின் வடகோடியில் உள்ள அந்த நாடு வெகு காலமாக பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் இருந்து வருகிறது. சமீப காலமாக டூனிசியா மக்கள் தீவிரமான சுதந்திரப் போரில் ஈடுபட்டிருக்கிறார்கள். மேற்படி சுதந்திரப் போரை ஒடுக்குவதற்காகப் பிரெஞ்சு அதிகாரிகள் கோர அடக்குமுறைகளைக் கைக்கொண்டனர். தேசியத் தலைவர்களான மந்திரிகளைச் சிறைப்படுத்தினர். தேச பக்தியினால் கொதித்தெழுந்த ஜனங்களைச் சுட்டுத் தள்ளினர்.

எனினும் டூனிசிய சுதந்திரப் போரின் உக்கிரம் தணியவில்லை. அவ்விஷயம் இப்போது ஐக்கிய நாடுகள் சபையையும் எட்டியிருக்கிறது. மேற்படி சுதந்திரப் போர் நியாயமானது என்று ஜவாஹர்லால்ஜி அபிப்பிராயம் கூறியிருக்கிறார். தற்போதுள்ள நிலைமையில் ஜவாஹர்லால்ஜியின் கருத்தை அலட்சியம் செய்வதற்கில்லை என்று அமெரிக்க சர்க்கார் கருதுவதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

எனவே டூனிசியாவில் மாத்திரமல்ல, இந்தியாவில் உள்ள சில பிரதேசங்கள், இந்தோ சீனா முதலிய பல இடங்களிலும் பிரெஞ்சு சர்க்கார் தங்களுடைய ஆதிக்கத்தைக் கைவிட்டாலன்றி, அவர்கள் உலகத்தின் நன் மதிப்பைப் பெற முடியாது. அந்தந்த நாட்டின் நிர்வாகப் பொறுப்பை அந்தந்த தேச மக்களிடம் ஒப்புவிக்க வேண்டும் என்பதுதான் அரசியல் நீதி, ஜனநாயக தர்மம், இயற்கையின் கட்டளையுமாகும்.



அத்தியாயம் 28

ஒற்றனுக்கு ஒற்றன்

மௌனமாயிருந்த அரசிளங் குமரியைப் பார்த்து முதன் மந்திரி அநிருத்தர் "தாயே! ஏன் பேசாமலிருக்கிறாய்? வந்தியத் தேவனை இன்னமும் நீ நம்புகிறாயா?" என்று கேட்டார்.

"ஐயா! அமைச்சர் திலகமே! நான் என்ன சொல்லட்டும்? இன்னும் சற்று நேரம் தாங்கள் பேசிக் கொண்டே போனால் என்னை நானே சந்தேகிக்கும்படி செய்து விடுவீர்கள் போலிருக்கிறதே!" என்றாள் இளவரசி.

"காலம் அப்படி இருக்கிறது, அம்மா! யாரை நம்பலாம், யாரை நம்பக் கூடாது என்று தீர்மானிப்பது இந்த நாளில் அவ்வளவு சுலபமில்லைதான். நாலாபுறமும் அவ்வளவு விரோதிகள் சூழ்ந்திருக்கிறார்கள்; அவ்வளவு மர்மமான சூழ்ச்சிகள் நடந்து வருகின்றன!" என்றார் முதன் மந்திரி அநிருத்தர்.

"ஆனாலும் தங்களுக்குத் தெரியாத மர்மமும் தாங்கள் அறியாத சூழ்ச்சியும் இராது என்று தோன்றுகிறது. நான் அனுப்பிய தூதனைப் பற்றிய அவ்வளவு விவரங்களையும் எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?" என்று கேட்டாள் குந்தவை தேவி.

"அம்மணி! நான் ஆயிரம் கண்களும் இரண்டாயிரம் செவிகளும் படைத்தவன். நாடெங்கும் அவை பரவியிருக்கின்றன. பழுவூர் அரண்மனையில் என் ஆட்கள் இருக்கிறார்கள். பழுவூர் இளைய ராணியின் மெய்க்காவலர்களிலே எனக்குச் செய்தி அனுப்புகிறவன் ஒருவன் இருக்கிறான். ஆழ்வார்க்கடியானைப் போல் ஊர் ஊராக அலைந்து திரிந்து செய்தி கொண்டு வருகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். சோழ நாட்டிலோ, சுற்றுப்புற நாடுகளிலோ நான் அறியாமல் எந்தக் காரியமும் நடைபெற முடியாது என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். ஆயினும், யார் கண்டது? என்னையும் ஏமாற்றக் கூடியவர்கள் இருக்கலாம். நான் அறியாத மர்மங்களும் நடைபெறலாம்!"


இவ்வாறு முதன் மந்திரி சொன்னபோது, பொன்னியின் செல்வன் இப்போது சூடாமணி விகாரத்தில் இருப்பதும் இந்தப் பொல்லாத மனிதருக்குத் தெரியுமோ என்ற எண்ணம் குந்தவைக்கு உண்டாயிற்று. அதை அவள் வெளியிடாமல் மிகுந்த சிரமத்துடன் அடக்கிக் கொண்டாள்.

கல்கி

"ஐயா! நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கலாம். ஆனாலும் அந்த வாணர்குல வீரன் பழுவூர் ராணியின் ஒற்றனாகி யிருப்பான் என்று மட்டும் என்னால் நம்ப முடியவில்லை. அவனைத் தயவுசெய்து விடுதலை செய்து விடுங்கள்!" என்றாள்.

"நன்றாக யோசித்துப் பார், அம்மா! அந்தப் பெண் நந்தினியிடம் மாயமந்திர சக்தி ஏதோ இருக்கிறது. சிவ பக்தன் மதுராந்தகன் அவளுடைய வலையில் விழுந்து இராஜ்யத்தில் ஆசை கொண்டான். சம்புவரையரின் மகன் கந்த





மாறன் அவனுடைய ஓலையை எடுத்துக் கொண்டு ஆதித்த கரிகாலனிடம் போயிருக்கிறான். பழுவேட்டரையர்களின் பரம விரோதியா யிருந்த பார்த்திபேந்திரன் இன்று பழுவூர் ராணியின் அடிமையாகி விட்டான். சோழ ராஜ்யத்தை இரண்டாகப் பிரித்து மதுராந்தகனுக்கு ஒரு பகுதியும் ஆதித்த கரிகாலனுக்கு ஒரு பகுதியும் கொடுத்து ராஜி செய்து வைக்கவும் அவன் முன் வந்திருக்கிறான்......"

"இது என்ன அக்கிரமம்? இராஜ்யத்தை இரண்டாகப் பிரிக்கவாவது? எங்கள் குலத்து முன்னோர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு ஒன்று சேர்த்துப் பெரிதாக்கிய மகா இராஜ்யம் இது?"

"இராஜ்யத்தைப் பிரிப்பதை நீ விரும்ப மாட்டாய்; நானும் விரும்பவில்லை, தாயே! பத்து நாட்களுக்கு முன் இந்த யோசனையைச் சொல்லியிருந்தால் பார்த்திபேந்திரனும் பொங்கி எழுந்திருப்பான். இப்போது அவனே இந்த ஏற்பாட்டுக்கு முதன்மையாக நிற்கிறான்..."

"இது என்ன விந்தை! அந்தப் பழுவூர் ராணியிடம் அப்படிப்பட்ட மாய சக்தி என்னதான் இருக்கும்?"

"இளவரசி! அதை நான் உன்னிடம் கேட்க வேண்டும் என்றிருந்தேன். நீ என்னைக் கேட்கிறாய். போகட்டும்; வந்தியத்தேவன் மட்டும் அவளுடைய மாய சக்திக்கு உட்பட மாட்டான் என்று எதனால் நீ அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறாய்?"

"ஐயா! காரணங் கேட்டால் எனக்குச் சொல்லத் தெரியாது. மனதுக்கு மனதே சாட்சி என்பார்கள். வாணர்குல வீரன் அத்தகைய துரோகம் செய்ய மாட்டான் என்று என் மனத்தில் ஏனோ நிச்சயமாகத் தோன்றுகிறது."

"அப்படியானால், அதைப் பரீட்சித்துப் பார்த்து விடலாம், அம்மா!"

"எப்படி? என்ன பரீட்சை?"

"காஞ்சிக்கு ஒரு தூதனை நாம் உடனே அனுப்பியாக வேண்டும். ஆதித்த கரி



காலனுக்கு மிக நம்பிக்கையான ஆளிடம் அவசரமாக ஓலை கொடுத்து அனுப்ப வேண்டும்."

"என்ன விஷயம் பற்றி?"

"சற்று முன்னால், நந்தினியை விஷநாகம் என்று நீ சொல்லி விட்டு அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டாய். உண்மையில் விஷநாகத்தை விட அவள் பன் மடங்கு கொடியவள். இந்தச் சோழ குலத்தை அடியோடு நாசம் செய்து பூண்டோடு ஒழித்து விட அவள் திட்டமிட்டிருக்கிறாள்!..."

"கடவுளே! என்ன பயங்கரம்!" என்று குந்தவை கூறிய போது அவளுடைய உள்ளக்கடல் பற்பல எண்ண அலைகளினால் கொந்தளித்தது.

"உன் தமையன் ஆதித்த கரிகாலனைக் கடம்பூர் அரண்மனைக்கு அழைக்கும்படி அவள் சம்புவரையர்களைத் தூண்டியிருக்கிறாள். சம்புவரையர் மகள் ஒருத்தியையும் பழுவேட்டரையர் குமாரி ஒருத்தியையும் கரிகாலனுக்கு மணம் செய்விப்பது பற்றிப் பேசி வருகிறாள். இராஜ்யத்தை இரண்டாகப் பிரித்து ராஜி செய்விக்கும் விஷயத்தையும் அங்கே முடிவு செய்யப் போகிறாளாம். இவையெல்லாம் வெளிப்படையான பேச்சு. ஆனால் அவளுடைய அந்தரங்கத்தில் என்ன நோக்கம் வைத்திருக்கிறாளோ அது யாருக்கும் தெரியாது. எல்லாம் அறிந்தவன் என்று கர்வங் கொண்டிருக்கும் என்னால் கூட அவள் நோக்கத்தை அறிய முடியவில்லை."

"அதைப் பற்றி நாம் என்ன செய்ய வேண்டும், ஐயா!"

"ஆதித்த கரிகாலன் கடம்பூர் மாளிகைக்குப் போகாமல் எப்படியாவது தடை செய்ய வேண்டும். அதற்குத்தான் நீயும் நானும் ஓலை கொடுத்து வந்தியத் தேவனிடம் அனுப்ப வேண்டும். நம்முடைய விருப்பத்தை மீறிக் கரிகாலன் கடம்பூர் மாளிகைக்குப் புறப்படும் பட்சத்தில் வந்தியத் தேவனும் அவனுடன் போக வேண்டும். உடம்பைப் பிரியாத நிழலைப் போல் அவன் உன் தமையனைத் தொடர்ந்து காவல் புரிய வேண்டும். நந்தினியைத் தனியாகச் சந்திப்பதற்குக் கூட அவன் இடந் தரக்கூடாது..."

குந்தவை பெருமூச்சு விட்டாள். முதன் மந்திரி கூறுவது எவ்வளவு முக்கியமான காரியம் என்பதை அவள் உணர்ந்தாள். எல்லா விவரங்களும் அறிந்து அவர் சொல்கிறாரா, அல்லது இராஜாங்க நோக்கத்தை மட்டும் வைத்துக் கொண்டு சொல்கிறாரா என்று அவளால் ஊகிக்க முடியவில்லை.

"ஐயா! அவர்களுடைய சந்திப்பைத் தடுப்பது அவ்வளவு முக்கியமான காரியம் என்று ஏன் கருதுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"அம்மணி! வீரபாண்டியனுடைய ஆபத்துதவிகள் சிலர் சோழகுலத்தைப் பூண்டோடு அழிக்கச் சபதம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பெரிய பழுவேட்டரையருடைய பொக்கிஷத்திலிருந்து புதிய தங்கக் காசுகள் போய்க் கொண்டிருக்கின்றன. இதைக் காட்டி



லும் இன்னும் ஏதேனும் நான் இதைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?"

"வேண்டாம்" என்று முனு முனுத்தாள் குந்தவை. சூடாமணி விஹாரத்தில் சுரத்துடன் படுத்திருக்கும் இளவரசனின் நினைவு அவளுக்கு வந்தது. பொன்னியின் செல்வனையும் அபாயங்கள் சூழ்ந்திருக்கலாம் அல்லவா?

"ஐயா! சோழநாட்டுக்கு விபத்துக்கு மேல் விபத்தாக வந்து கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் தாங்கள் முதன் மந்திரியாயிருப்பது அதிர்ஷ்டவசந்தான்! என் தம்பியின் விஷயமாக என்ன ஏற்பாடு செய்தீர்கள்?" என்று கேட்டாள்.

"சோழ நாட்டிலுள்ள எல்லாச் சிவாலயங்களிலும் விஷ்ணு ஆலயங்களிலும் இளவரசருடைய சுக க்ஷேமத்தைக் கோரிப் பிரார்த்தனை செய்து அர்ச்சனை அபிஷேகம் நடத்தச் சொல்லியிருக்கிறேன். அப்படியே புத்த விஹாரங்களிலும் சமணப் பள்ளிகளிலும் பிரார்த்தனை செய்யப் போகிறார்கள். நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் புத்த பிக்ஷுக்கள் ஒரு மண்டலம் விசேஷ பிரார்த்தனை நடத்தப் போகிறார்கள். வேறு என்ன செய்யலாம் என்று நீ சொல்கிறாய்?"

சூடாமணி விஹாரத்தைப் பற்றிச் சொல்லும் போது முதன் மந்திரியின் முகத்தில் ஏதேனும் மாறுதல் ஏற்படுகிறதா என்று குந்தவை கவனித்தாள். ஒன்றுமே தெரியவில்லை.

"ஐயா! சூடாமணி விஹாரம் என்றதும் ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது. சூடாமணி விஹாரத்தின் மீது பெரிய பழுவேட்டரையர் ஏதோ கோபங் கொண்டிருக்கிறாராம். இலங்கையில் பிக்ஷுக்கள் இளவரசருக்கு முடி சூட்டுவதாகச் சொன்ன செய்தி வந்ததிலிருந்து அந்தக் கோபம் முற்றியிருக்கிறதாம். இளவரசர் காணமற் போனதற்குப் பழியைச் சூடாமணி விஹாரத்திலுள்ள பிக்ஷுக்களின் மீது சுமத்தினாலும் சுமத்துவார்கள். அதற்குத் தக்க பாதுகாப்பு தாங்கள்தான் செய்ய வேண்டும்" என்று சொன்னாள்.

"உடனே செய்கிறேன், அம்மா! சக்கரவர்த்தியின் கட்டளையுடன் சூடாமணி விஹாரத்தைப் பாதுகாக்க ஒரு சிறிய சைன்யத்தையே வேணுமானாலும் அனுப்பி வைக்கிறேன். வந்தியத்தேவனைக் காஞ்சிக்கு அனுப்புவது பற்றி என்ன சொல்லுகிறாய்?"

"ஐயா! அவ்வளவு முக்கியமான காரியத்துக்கு வேறு யாரையாவது அனுப்புவது நல்லதல்லவா?"

"உனக்கு மட்டும் அவனிடம் நம்பிக்கையிருந்தால் அவனையே அனுப்ப விரும்புகிறேன். அவனுடைய வீர சாகசச் செயல்களைப் பற்றியும் தெரிந்து கொண்டிருக்கிறேன். எதற்கும் அஞ்சாத அஸகாய சூரனையே இந்தக் காரியத்துக்கு நாம் அனுப்ப வேண்டும். இன்றைக்கு நான் அரண்மனை முற்றத்துக்கு வந்து கொண்டிருந்த போது என் கண்ணாலேயே பார்த்தேனே! அந்த வைத்தியனை என்ன பாடு படுத்தி விட்டான்? நான் குறுக்கிட்டுத் தடுத்திரா விட்டால் வைத்தியர் மகன் யமனுக்கு வைத்தியம் செய்யப் போயிருப்பான்..."

இளைய பிராட்டி இதைக் கேட்டுப் பூரிப்பு அடைந்தாள். ஆயினும் சிறிது தயக்கத்துடன், "வீரனாயிருந்தால் மட்டும் போதுமா? படபடப்புக்காரனாயிருக்கிறானே? எவ்வளவு விரைவில் சண்டை தொடங்கி விட்டான்!" என்றாள்.



"அதற்கு வேணுமானால் பின்னோடு என்னுடைய சீடன் திருமலையையும் அனுப்பி வைக்கிறேன். நிதானமான யோசனைக்குப்பெயர் போனவன் ஆழ்வார்க் கடியான்!" என்றார் அநிருத்தர். இளைய பிராட்டி தன் மனத்திற்குள், "இவருடைய உள்ளத்தில் இருப்பதைக் கடவுளும் அறிவாரோ, என்னமோ, தெரியவில்லை! ஒற்றனுக்குத் துணையாக ஒற்றன் ஒருவனையே அனுப்பி வைக்க விரும்புகிறார் போலும்!" என்று எண்ணிக் கொண்டாள்.

அத்தியாயம் 29

வானதியின் மாறுதல்

குந்தவை வந்தியத்தேவனைச் சிறையிலிருந்து மீட்டு மறுபடியும் பிரயாணம் அனுப்புவதற்காகப் புறப்பட்டபோது. வானதி எதிரே வந்தாள். இளைய பிராட்டியின் அடிபணிந்து நின்றாள்.

"என் கண்ணே! உன்னை விட்டு விட்டு வந்து விட்டேன். இன்னும் கொஞ்சம் முக்கியமான அலுவல் இருக்கிறது. அதை முடித்து விட்டு வந்து விடுகிறேன். சற்று நேரம் தோட்டத்தில் சென்றிரு! ஓடைப் பக்கம் மட்டும் போகாதே!" என்றாள்.

"அக்கா! தங்களுக்கு இனித் தொந்தரவு கொடுக்க மாட்டேன். கொடும்பாளூருக்குப்போக விரும்புகிறேன். அநுமதி கொடுங்கள்!" என்றாள் வானதி.

"இது என்ன, என் தலையில் நீயுமா இடியைப் போடுகிறாய்? உனக்கு என் பேரில் என்ன கோபம்? உன் பிறந்தகத்தின் மீது திடீரென்று என்ன பாசம்?"

"உங்கள் பேரில் நான் கோபங் கொண்டால் என்னைப் போல் நன்றி கெட்டவள் யாரும் இல்லை. என் பிறந்தகத்தின் பேரில் புதிதாகப் பாசம் ஒன்றும் பிறந்து விடவும் இல்லை. தாயும் தந்தையும் இல்லாத எனக்குப் பிறந்தகம் என்ன வந்தது? எங்கள் ஊருக்குப் பக்கத்தில் உள்ள காளி கோவிலுக்குப் பூசை போடுவதாக என் தாயார் ஒரு முறை வேண்டிக் கொண்டாளாம். அதை நிறைவேற்றுவதற்கு முன் அவள் கண்ணை மூடி விட்டாள். எனக்கு அடிக்கடி மயக்கம் வருகிறதல்லவா? ஒருவேளை அந்த வேண்டுதலை நிறைவேற்றாததால்தான் இப்படி என்னைப் படுத்துகிறதோ என்னமோ?"

"அதற்காக நீ அவ்வளவு தூரம் போக வேண்டியதில்லை. நானே சொல்லி அனுப்பி அந்த வேண்டுதலை நிறைவேற்றச் சொல்கிறேன்."

"அது மட்டுமல்ல, அக்கா! என் பெரிய தகப்பனார் இலங்கையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கிறாராம். அவர் தஞ்சையைத் தாண்டிப் பழையாறைக்கு வர மாட்டார். அவர் வரும் போது நான் கொடும்பாளூரிலிருக்க விரும்புகிறேன். அவரிடம் இலங்கையில் நடந்தவற்றையெல்லாம் நேரில் கேட்க ஆசைப்படுகிறேன்!"

"இலங்கையில் நடந்தவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வதில் உனக்கு என்ன அவ்வளவு ஆசை?"

"அது என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? என் தந்தை இலங்கைப் போரில் வீர சொர்க்கம் அடைந்ததை மறந்து விட்டீர்களா?"

"மறக்கவில்லை. அந்தப் பழி இப்போது நீங்கி விட்டது..."

"முழுதும் நீங்கியதாக எனக்குத் தோன்றவில்லை. யுத்தம் முடிவதற்குள்ளே அவசரப் பட்டுக் கொண்டு பெரிய வேளார் திரும்புகிறார்."

"அவரை மறுபடி இலங்கைக்குப் போய்ப் போர் நடத்தும்படி சொல்லப் போகிறாயா? அதற்காகவா கொடும்பாளூர் போக வேண்டும் என்கிறாய்?"

"அவ்வளவு பெரிய விஷயங்களைப் பற்றிச் சொல்வதற்கு நான் யார்? நடந்ததைப் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்ளவே விரும்புகிறேன்......"



"ஆகா! உன் மனது இப்போது எனக்குத் தெரிகிறது. பொன்னியின் செல்வன் இலங்கைப் போரில் புரிந்த வீரச் செயல்களைப் பற்றி உன் பெரிய தகப்பனாரிடம் கேட்க விரும்புகிறாய். இல்லையா?"

"அது ஒரு தவறா, அக்கா?"

"அது தவறில்லை. ஆனால் இத்தகைய சமயத்தில் என்னைத் தனியே விட்டு விட்டுப் போகிறேன் என்கிறாயே, அதுதான் பெரிய தவறு!"

"அக்கா! நானா தங்களைத் தனியே விட்டு விட்டுப் போகிறேன்? என்னைப் போல் தங்களுக்கு எத்தனையோ தோழிகள். தங்கள் கருத்தை அறிந்து காரியத்தில் நிறைவேற்ற எத்தனையோ பேர் காத்திருக்கிறார்கள்......"

"நீகூட இப்படிப் பேச ஆரம்பித்து விட்டாயா, வானதி? என் தம்பியைப் பற்றிய செய்தி கேட்டு உன் மனம் பேதலித்து விட்டதுபோலிருக்கிறது. அந்தச் செய்தியைப் பற்றி நீ அதிகமாய்க் கவலைப்பட வேண்டாம்......"

"தங்கள் தம்பியைப் பற்றித் தங்களுக்கு இல்லாத கவலை எனக்கு என்ன இருக்க முடியும், அக்கா!"

"உண்மையைச் சொல்! ஓடையில் நீயாக வேண்டுமென்று விழுந்தாயா? மயக்கம் வந்து விழுந்தாயா?"

"வேண்டுமென்று எதற்காக விழவேண்டும்? மயக்கம் வந்துதான் விழுந்தேன். தாங்களும் அந்த வாணர் குலத்து வீரருமாக என்னைக் காப்பாற்றினீர்கள்."

"காப்பாற்றியதற்கு நன்றி உள்ளவளாகத் தோன்றவில்லையே?"

"இந்த ஜன்மத்தில் மட்டுமல்ல; ஏழேழு ஜன்மத்திலும் நன்றியுள்ளவளாயிருப்பேன்."

"இந்த ஜன்மம் இத்துடன் முடிந்து போய் விட்டதுபோல் பேசுகிறாயே? நான் சொல்கிறேன் கேள், வானதி! வீணாக மனதை வருத்தப்படுத்திக் கொள்ளாதே! அருள்மொழி வர்மனுக்கு அபாயம் எதுவும் வந்திருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. சற்று முன் அரண்மனை முற்றத்தில் கூடியிருந்த ஜனங்களுக்குச் சொன்னதையே உனக்கும் சொல்லுகிறேன். அன்றொரு நாள் காவேரித் தாய் என் தம்பியைக் காப்பாற்றினாள். அது போல் சமுத்திர ராஜனும் அவனைக் காப்பாற்றியிருக்க வேண்டும். சீக்கிரத்தில் நல்ல செய்தியை நாம் கேள்விப்படுவோம்."

"எந்த ஆதாரத்தைக் கொண்டு இவ்வளவு உறுதியாகத் தைரியம் சொல்கிறீர்கள், அக்கா!"

"என் மனத்திற்குள் ஏதோ ஒன்று சொல்லுகிறது. என் அருமைத் தம்பிக்கு ஏதேனும் நேர்ந்திருந்தால் அது என் உள் மனத்திற்குத் தெரிந்திருக்கும். நான் இப்படிச் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருக்க மாட்டேன்..."

"மனது சொல்வதில் எனக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை, அக்கா! உள் மனத்திலும் நம்பிக்கை இல்லை; வெளி மனத்திலும் நம்பிக்கை இல்லை!"

"அது எப்படி நீ மட்டும் அவ்வளவு தீர்மானமாகச் சொல்லுகிறாய்?"

"என் உள் மனத்திலும் வெளி மனத்திலும் சில நாளாக ஒரு பிரமை தோன்றிக் கொண்டிருந்தது. தூக்கத்தில் கனவிலும் தோன்றியது; விழித்துக் கொண்டிருக்கும்போதும் சில சமயம் அப்படிப் பிரமை உண்டாயிற்று."

"அது என்ன, வானதி?"

"தண்ணீரில் தங்கள் தம்பியின் முகம் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. என்னை அழைப்பதுபோலவும் இருந்தது. கனவிலும் இந்தப் பிரமை அடிக்கடி ஏற்பட்டு வந்தது......"

"அதை ஏன் பிரமை என்று சொல்லுகிறாய்? நமக்கு வந்திருக்கும் செய்திக்கும் உன்னுடைய மனத் தோற்றத்துக்கும் பொருத்தமாக இருக்கிறதே!"

"இன்னும் முழுதும் கேட்டால் அது எவ்வளவு பைத்தியக்காரப் பிரமை என்பதை அறிவீர்கள். ஓடையில் மயக்கம் போட்டு விழுந்தேனல்லவா? அப்போது நான் நாக லோகத்துக்கே போய்விட்டேன். அங்கே ஒரு திருமண வைபவம் நடந்தது......"

"யாருக்கும் யாருக்கும் திருமணம்?"

"அதைச் சொல்ல விருப்பமில்லை, அக்கா! மொத்தத்தில் மனத்தில் தோன்றுவதிலும் கனவில் தோன்றுவதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. கண்ணால் காண்பதையும் காதால் கேட்பதையும் தான் இனிமேல் நம்புவது என்று தீர்மானித்திருக்கிறேன்......"

"வானதி! நீ சொல்லுவது முற்றும் தவறு. கண்ணால் காண்பதும் காதினால் கேட்பதும் சில சமயம் பொய்யாக இருக்கும். மனத்திற்குள் தோன்றுவதுதான் நிச்சயம் உண்மையாயிருக்கும். கதைகள், காவியங்களிலிருந்து இதற்கு எத்தனையோ உதாரணங்கள் நான் உனக்குச் சொல்லுவேன்......"

"பிறகு ஒரு சமயம் கேட்டுக் கொள்கிறேன், அக்கா! இப்போது எனக்கு விடை கொடுங்கள்!" என்றாள் வானதி.

இளவரசி குந்தவைக்கு ஒரே வியப்பாய்ப் போய் விட்டது. இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு தைரியமும் பிடிவாதமும் திடீரென்று எப்படி ஏற்பட்டன என்று ஆச்சரியப்பட்டாள்.

"வானதி! இது என்ன அவசரம்? அப்படியே நீ கட்டாயம் ஊருக்குப் போக வேண்டுமென்றாலும், சில நாள்

கழித்துப் புறப்படக் கூடாதா இப்போது நாடெங்கும் ஒரே குழப்பமாயிருக்குமே? உன்னைத் தக்க பாதுகாப்புடன் அனுப்பி வைக்க வேண்டாமா?''

''எனக்கு என்ன பயம், அக்கா! கொடும்பாளூரிலிருந்து என்னை அழைத்து வந்த பல்லக்குத் தூக்கிகளும் காவல் வீரர் நால்வரும் ஒரு வேலையுமின்றி இத்தனை காலம் இங்கே தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களே என்னைத் திரும்ப அழைத்துக் கொண்டு போய் விடுவார்கள்...''

''அழகாயிருக்கிறது! உன்னை அப்படி நான் அனுப்பி விடுவேன் என்று நினைக்கிறாய்?''

''உங்களை நான் ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன், அக்கா! எனக்குப் பயம் ஒன்றுமில்லை. கொடும்பாளூர் வானதியை இந்த நாட்டில் யாரும் எதுவும் செய்யத் துணிய மாட்டார்கள். அதிலும் இளைய பிராட்டியின் அன்புக்குகந்த தோழி நான் என்பது யாருக்குத் தெரியாது? ஒரே ஒரு காரியத்துக்கு மட்டும் அநுமதி கொடுங்கள். போகும் போது அந்தக் குடந்தை ஜோதிடரின் வீட்டுக்கு இன்னொரு தடவை போய் அவரைச் சில விஷயங்கள் கேட்க விரும்புகிறேன். அவ்விதம் செய்யலாமா?''


''அவரிடம் எனக்குக் கூட வர வேண்டும் என்று ஆசை தான். ஆனால் நீ இவ்வளவு அவசரப்படுகிறாயே?''

''இல்லை, அக்கா! இந்தத் தடவை அவரை நான் தனியாகப் பார்த்து ஜோதிடம் பார்க்க விரும்புகிறேன்...''

குந்தவை மூக்கின் மீது விரலை வைத்து அதிசயப்பட்டாள். இந்தப் பெண் ஒரு நாளில், ஒரு ஜாம நேரத்தில், இவ்வளவு பிடிவாதக்காரியாக மாறி விட்டது எப்படி என்று இளவரசிக்குப் புரியவேயில்லை. அவள் பிரயாணத்தைத் தடுத்து நிறுத்த முடியாது என்ற முடிவுக்கு வந்தாள்.

''சரி, வானதி! உன் விருப்பம் போலச் செய்யலாம். நீ பிரயாணத்துக்கு வேண்டிய ஆயத்தம் செய். அதற்குள் சிறையிலிருக்கும் அந்த வாணர் குலத்து வீர குமாரனை விடுதலை செய்து விட்டு வருகிறேன்'' என்றாள்.

அதிர்ச்சி வைத்தியம்!



கவர்னர் ஸ்ரீபிரகாசா சட்டசபையில் பிரசங்கம் செய்யத் தொடங்கியபோது ஐ. ஜ. முன்னணித் தலைவர் கவர்னரை இடைமறித்து தாக்கிப் பேசிவிட்டு வெளியேறினர். அதுபற்றி மேல் சபையில் நடந்த விவாதத்துக்குப் பிறகு மேற்படி கட்சியின் நிலைமை இவ்விதமாயிற்று!



ஜுபிடர்
தயாரிப்பு
காதல் போராட்டம்!
கயவனின் வெறியாட்டம்!!
இடையே சிக்கினாள்...
கட்டழகி!!!
ராணி
சென்னை
பாரகன் . ஸ்ரீ கிருஷ்ணா . சயானி
மற்றும் தென்னாடெங்கும் நடைபெறுகிறது
JUPITER PICTURES CIRCUIT
டைரக்ஷன்: பிரசாத்...ஸ்டுடியோ: சென்ட்ரல், நெப்ட்யூன்

வட்ட மேஜை

இனிச் செய்ய வேண்டியதென்ன?

எதிர்பாராததெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருக நடந்து விட்டது. தேர்தலில் பூரண வெற்றி பெருத காங்கிரஸ் இன்று ராஜாஜியின் தலைமையினுல் சென்னை அரசாங்கத்தை நடத்தி வருகிறது. அது ஸ்திரமான சர்க்காராக யிருக்க நமது தனிப்பெருந் தலைவர் ராஜாஜி தம்மாலானதை யெல்லாம் செய்து வருகிருர். அதே சமயத்தில் மக்களின் கடமை யென்ன!

ராஜாஜி கடமை புணர்ச்சியால் தூண்டப்பட்டு சர்க்கார் லகானைப் பிடித்ததிலிருந்து மக்களைப் பிடித்திருந்த பீதியும் அவநம்பிக்கையும் கொஞ்சங் கொஞ்சமாக விலகிக் கொண்டே போகிறது. அவர் முதன் முதலாக திருவல்லிக்கேணி கடற்கரையில் நிகழ்த்திய பிரசங்கமும், சமீபத்தில் சட்ட சபையில் நிகழ்த்திய பிரசங்கமும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை. பொன்னே போல் போற்றத் தகுந்தவை. அவை மின்சாரத்தைப் போல் வேலை செய்து சோர்ந்திருந்த மக்களின் மனத்தில் புதிய உத்வேகத்தைப் புகுத்தி யிருக்கின்றன. அவைகளையும், இன்னும் அவ்வப்போது ராஜாஜி சட்ட சபையிலும் வெளியிலும் ஆற்றும் சொற்பொழிவுகளையும் பத்தாயிரக் கணக்காக அச்சிட்டுக் கிராம மக்களின் காதில் விழும்படி செய்ய வேண்டும். காங்கிரஸ்காரர்கள் உடனடியாகச் செய்ய வேண்டிய வேலை இதுவே. மக்களுடன் நெருங்கிய தொடர்பை இவ்வகையில் மீண்டும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்னுமொரு காரியத்தையும் செய்து முடித்தால்தான் காரியம் பூர்த்தியானதாகச் சொல்ல முடியும். அதுதான் காங்கிரஸ் கமிட்டிகளைத் திருத்தி அமைப்பது. எண்ணிறந்த உண்மையான தேசிய ஊழியர்கள் மனம் வெதும்பி, சில ஆண்டுகளாக ஒதுங்கி யிருக்கின்றனர். அவர்களைத் தேடிப் பிடித்துக் காங்கிரஸ் கமிட்டிகளிலே சேர்க்க வேண்டும். கிராம காங்கிரஸ் கமிட்டி முதல் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி வரையில் அத்தகையவர்களைக் கொண்டதா யிருக்க வேண்டும். இது மட்டும் போதாது. அவ்வப்போது மக்களின் குறைகளை அறிந்து அவற்றைப் போக்க ஊழியர்கள் உண்மையாக உழைக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு செய்து ராஜாஜி சர்க்காருக்கும் மக்களுக்கும் இடையே உறுதியான தொடர்பெனும் பலம் பொருந்திய பாலத்தை அமைப்பதிலே காங்கிரஸ்காரர்கள் கண்ணுங் கருத்துமா யிருக்க வேண்டும். அவ்வாறு செய்வதே நம் மாகாணத்தில் சுபிட்சம் ஏற்படுவதற்குச் சரியான வழி.

நமக்கு வழி காட்டக் காந்திஜியின் குரலையும் படேலின் உறுதியையும் கொண்ட ராஜாஜி நம்மிடையே இருக்கிருர். ராஜாஜி தலைமையில் முன்பு விடுதலைப் போரில் ஈடுபட்ட வீரர்களாகிய நாம் தற்போது மீண்டுமோர் முறை அன்னாரது தலைமையிலேயே பஞ்சத்தை விரட்டும் போரில்—தீமையை ஒழிக்கும் போரில்—உற்சாகத்துடன் ஈடுபட்டுக் காந்தியக் கொள்கையைக் கடைப்பிடித்துத் தேசத்தில் சாந்தியையும் சுபிட்சத்தையும் நிலை நாட்டுவோம்!

தியாகராய நகர்
14—5—52

ஆக்கூர் அனந்தாச்சாரி

★

சர்வம் காலி மயம்!

படாதிபதி சண்டுலால் ஷா சமீபத்தில் சென்னையில் இந்தியப் படாதிபதிகளின் தலைவர் என்ற முறையில் வெளியிட்டுள்ள அறிக்கையைக் கொண்டு ஒரு விஷயம் புலனுகின்றது. அதாவது அவர்கள் படத்தயாரிப்பைக் காட்டிலும் காலிகள் தயாரிப்பையே பிரதானமாகக் கருதித்தான் மட்டரகப் படத்தைத் தயாரிக்கிருர்கள் போலும்!

தற்பொழுது வரும் இந்தியப் படங்களைப் பார்க்கும் பொழுது நாமும் மேற்கண்ட காலிகளை அதிகமாகச் சந்திக்கின்ருேம். நமது பணம் காலி. கொஞ்சம் ஏமாந்தால் 'பர்ஸ்'ம் காலி. அதிக நீளமான படங்களாதலால், அதிக நேரம் அடைபட்டுக்கிடக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் கண்களும் காலி; ஆரோக்கியமும் காலி. படங்களைப் பற்றிப் புரிந்து கொள்ளப் பார்த்தால் நமது மூளையும் காலி. அதிக நாள் இவ்வாறே பார்க்க நேரிடின் ஆளும் கூடக் காலி யாகலாம். ஸ்ரீமான் சண்டுலால் ஷா இத்தகைய படங்களையே தயாரித்துக் கொண்டிருந்தால் அவருடைய ஆதிபத்தியமும் காலி யாவதைக் காண நேரிடலாம்!

அவர் தலைமையின் கீழ் உள்ள மற்றப் படாதிபதிகள் அவரைப் பின்பற்ற முயல மாட்டார்கள் என்றே கருதுகிறேன்.

கோவை
17—5—52

சி. என். ஜகந்நாதன்

படாதிபதிகளுக்கு !

சமீபத்தில் நான் இந்த ஊரில் "ராஜா ஹரிச்சந்திரா" என்ற படத்தைப் பார்க்க நேர்ந்தது. காதிலேயே விழாத ஒலிப்பதிவு, கழுத்தில் காற்றடிக்கக் கூட இடமில்லாமல் ரத்தின ஹாரங்களையும், பவழ மாலைகளையும் அணிந்து உறங்கும் ஹரிச்சந்திரன், அழுவதென்றால் என்னவென்றறியாத சந்திரமதி, எல்லாம் சேர்ந்து பார்க்கப் பரிதாபமாயிருந்தது! படத்தின் மொத்த நீளம் 13,000 அடிகளுக்கு மேல்!

இதையெல்லாம் பார்க்கும்போது ஹாலிவுட் புகழ்பெற்ற ஸெஸில்டிமில் தயாரித்த ஸாம்ஸனும் டிலைலாவும் நினைவுக்கு வந்தது. அதுவும் புராண இதிகாசத்திலிருந்து எடுத்த கதைதான். அதிலும் தற்காலத்து ஜனங்களுக்கு நம்ப முடியாத நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அப்படியிருந்த போதிலும் அந்தப் படம் அவ்வளவு பெயரையும், புகழையும் அடைவானேன்!

பார்க்கப்போனால் பரந்த நோக்கத்திற்கும், தியாகத்திற்கும், உன்னத லட்சியங்களுக்கும் ஒரு பெரிய எடுத்துக் காட்டு ஹரிச்சந்திரனின் சரித்திரம். அப்படியல்ல சாம்ஸன் படம்.

சமீபத்தில் இந் நாட்டிற்கு விஜயம் செய்த அமெரிக்கப் படாதிபதியான ஸ்ரீ பிராங்க் காப்ரா சொன்னார்:

"இந்தியப் படங்களுக்கு மேல் நாட்டில் தகுந்த இடம் கிடைக்கும். ஆனால் அப்படிக் கிடைப்பதும் கிடைக்காததும் இந்தியப்பட முதலாளிகளின் கையில் தானிருக்கிறது. இந்தியப் படங்கள் இந்தியப் படங்களாயிருக்க வேண்டும்; மேல் நாட்டுப் படங்களின் முத்திரைகளாக அவை இருக்கக் கூடாது" என்றார்.

"ஹரிச்சந்திரா" ரொம்பவும் பிரபலமான இந்தியக் கதைகளில் ஒன்று. அது தெரியாத குழந்தை இந் நாட்டில் கிடையாது. அவன் பெருமையைப் பாடாத கிராமம் கிடையாது; அவன் காட்டின வழியைப் பின்பற்ற வேண்டும் என்று பாடுபட்ட மகான்கள் எத்தனையோ பேர் உண்டு. நாட்டுக்காகவும், பொருளுக்காகவும், பட்டத்துக்காகவும், பதவிக்காகவும் ஈன வழிகளைக் கையாண்டு கூச்சலிடும் இவ்வுலகில், இந்தியாவின் ஆத்மீக ஞானமே மனிதனை மேன்மை அடையச் செய்யக் கூடும் என்று கற்றறிந்த மேல் நாட்டார் சொல்கிறார்கள். இத்துறையில்தான் நாம் வழி காட்ட முடியும் என்று அறிவுறுத்துகிறார்கள். இம்மாதிரிப் படங்களைத் தயாரிக்க வேண்டுமென்றுதான் பிராங்க் காப்ரா போன்றவர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். தக்க முறையில், முன்னுரையிலும், இடை யிடையே கதையின் போக்கையும், அக்காலத்துப் பழக்க வழக்கங்களையும் எடுத்துரைத்துக் கொண்டே, 9,000 அடியில் "ஹரிச்சந்திரா" படத்தை நல்ல 'டெம்போ'வுடன் எடுத்து மேல் நாட்டுக்கு அனுப்ப முடியாதா, என்ன!

பாட்டியாலா
13—5—52 எஸ். வெங்கடராமன்


★

அவர்களே பார்க்கட்டும்!

படாதிபதி சண்டுலால் ஷா "இந்தியாவின் சீர்திருத்தக்காரர்கள் சிலர் சினிமாத் தொழிலைத் துவேஷிக்கிறார்கள்" என்று தன் சொற்பொழிவில் கூறியிருக்கிறார். தாங்கள் செய்யும் வேலை போலீஸ் வேலை என்று பறைசாற்றுகிறார். அவருக்குப் போலீஸ் இலாகாவில் ஏதாவது ஒரு வேலை செய்ய வேண்டும் போல் அவா இருக்கிறது போலும். ஆபாசமான படங்களைக் காலாடிகளுக்காக எடுத்து உலகத்திலேயே உன்னத படம் என்று பறைசாற்றி மற்றப் பொது ஜனங்களையும் வந்து பார்க்கும்படி கூறிப் பல படாதிபதிகள் தொண்டு செய்கின்றனர். அப்பேர்ப்பட்ட படாதிபதிகளின் தலைவர்தானே இவர். காலிகளுக்காகத் தாங்கள் படம் எடுப்பதாகப் பெருமையுடன் கூறிக் கொள்ளும் இவருக்குச் சினிமா பார்ப்பவர்களின் சார்பாக "காலாடி அதிபதி" என்று பட்டம் சூட்டுகிறேன். அவர் பிடிக்கும் படத்தை அவரும் அவருடைய சகாக்களுமே பார்க்கட்டும்.

மதுரை
18—5—52 எஸ். ஆர். எஸ். ராகவன்

★ ★



பிரபல திருமணம்

டில்லி அகில இந்திய ரேடியோவின் உதவி - நிர்வாக டைரக்டர் ஸ்ரீ கே. ஏ. அய்யர் அவர்களின் புதல்வி சௌ. சத்தியபாமாவுக்கும், நாகப்பூர் அகௌண்ட்ஸ் ஆபீஸர் ஸ்ரீ பி. எஸ். ஹரிஹரன் அவர்கள் புதல்வன் ஸ்ரீ எச். சுப்பிரமணியன் (பாய்லர் இன்ஜினியர், கன்ஸ்ட்ரக்ஷன் அஸோஸியேட்ஸ் லிமிடெட், செகந்திராபாத்) அவர்களுக்கும் திருநெல்வேலியில் மே மாதம் 11-ம் தேதி வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் வந்தன. திருமண வைபவத்தன்று மதுரை மணி அவர்களின் இன்னிசை விருந்து நிகழ்ந்தது.

★ ★


பக்ஷிராஜாவின்
காஞ்சனை
இப்பொழுது சென்னை பிரபாத், வெலிங்டன்
இரு தியேட்டர்களிலும் மற்றும் தமிழ் நாடெங்கும்.....
திரள் திரளாகக் கண்டு களிக்கின்றனர்...


அவர் ஒரு அதிசய மனிதர்!

பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிறுவன் ஆரம்பப் பாடசாலையில் காலை வகுப்புகள் முடிந்த பிறகு வீட்டுக்குத் திரும்பிப் போய்க்கொண்டிருந்தான். வழியில் ஒரு விநோதமான காட்சியைக் கண்டான். கட்டை வண்டி ஒன்று சாலையில் போய்க்கொண்டிருந்தது. சாலை ஓரமாக ஒரு பெரியவர் விடுவிடு வென்று நடந்து கொண்டிருந்தார். அவர் இடுப்பில் ஒரு கந்தல் உடுத்தி, தோளிலும் ஒரு கந்தலைப் போட்டுக் கொண்டிருந்தார். பார்த்தால், அப்படி ஒன்றும் பெரிய மனுஷராகத் தோன்றாது; பரம ஏழை என்றுதான் தோன்றும். வண்டிக்காரன் வண்டியில் உட்கார்ந்து மாட்டை ஓட்டுவதற்குப் பதிலாக, வண்டியிலிருந்து இறங்கி, கையில் தார்க்குச்சியுடன். அந்த ஏழைப் பெரியவரைப் பின் தொடர்ந்தான். "சாமி! சாமி!" என்று அழைத்து ஏதோ சொல்லிக்கொண்டே போனான். அந்தப் பெரியவர் "போ! போ! முடியாது! மாட்டேன்" என்று அவனுக்குப் பதில் சொல்லிக் கொண்டு நடந்தார்.

இதையெல்லாம் கவனித்த சிறுவனுக்கு ஒரே வியப்பாய்ப் போய்விட்டது. வண்டிக்காரன் அந்தப் பெரியவரை ஏதோ தொந்தரவு செய்கிறான் என்று எண்ணினான். வண்டி வாடகை அதிமாகக் கேட்கிறானோ என்னமோ தெரியவில்லை. சிறுவனுக்கு வண்டிக்காரன் தெரிந்தவன். ஆகையால், அவனை நெருங்கிச் சென்று, "ஏனப்பா, முத்துச்சாமி! அந்தப் பெரியவரை என்ன தொந்தரவு செய்கிறாய்! வண்டி வாடகை கொடுக்கவில்லை என்றா! அல்லது அதிக வாடகை கேட்கிறாயா!" என்று சிறுவன் கேட்டான்.

"நன்றாயிருக்கிறதே, கதை! இவர்களிடத்திலே யாராவது வாடகை கேட்பார்களா! சும்மா ஏறிக்கொண்டு வரச் சொல்கிறேன். மாட்டேன் என்று சாமி பிடிவாதம் பிடிக்கிறார்!" என்றான்.

சிறுவனுடைய வியப்பு இன்னும் அதிகமாயிற்று. பெரியவரிடம் சென்று. "மாமா! மாமா! எங்கே போகிறீர்கள்!" என்று கேட்டான். அவர் அந்தச் சிறுவனுடைய தகப்பனாரின் வீட்டையே குறிப்பிட்டார். "ஏன் வண்டியில் ஏறிக்கொள்ள மாட்டேன் என்கிறீர்கள்! முத்துச்சாமி நல்லவன். நீங்கள் ஏறிக் கொண்டால் நானும் ஏறிக் கொள்கிறேன்" என்றான் சிறுவன். "இனிமேல் மாட்டை அடிக்கிறதில்லை, தார்க் குச்சியால் குத்துகிறதில்லை என்று இவனைப் பிரமாணம் பண்ணச் சொல்லு. பிறகு இவன் வண்டியில் ஏறிக் கொள்கிறேன்!" என்றார்.



அப்புறந்தான், சிறுவனுக்கு முழுக் கதையும் தெரிந்தது. பெரியவர் அந்த வண்டியில் ஏறிக்கொண்டு கொஞ்ச தூரம் வந்தார். வண்டிக்காரன் மாட்டை அடித்துத் தார்க்குச்சியால் குத்தி ஓட்டினான். (இது சோழ நாட்டில் மாட்டுவண்டிக்காரர்கள் சாதாரணமாய்க் கையாளும் வழக்கம்.) பெரியவர் "அடிக்காதே! குத்தாதே!" என்று சொல்லிப்பார்த்தார். வண்டிக்காரன் கேட்கவில்லை. ஆகையால் அவர் வண்டியிலிருந்து குதித்து நடக்கத் தொடங்கினார். பெரியவருக்கு அபசாரம் செய்து விட்டோம் என்ற பயம் வண்டிக்கார முத்துச்சாமிக்கு வந்து விட்டது. அவருடைய கோபத்தைத் தணிய வைத்து மறுபடி அவரை வண்டியில் ஏறச் செய்வதற்காகத்தான் அவ்விதம் அவரைப் பின் தொடர்ந்தான்.

பெரியவர் அந்தச் சிறுவனுடைய வீட்டில் அன்று மத்தியானம் சாப்பிட்டுவிட்டு, அரை நாழிகை வீட்டுத் திண்ணையில் படுத்திருந்துவிட்டு, கீழே விரித்திருந்த கந்தலை உதறித் தோளில் போட்டுக்கொண்டு புறப்பட்டார். வீட்டுக்காரர் அப்போது பெரியவரிடம் "அடியேன் என்ன கைங்கரியம் செய்ய வேண்டும்! சொல்லவில்லையே!" என்று கேட்டார். "நீ சம்சாரி; பிள்ளைகுட்டிக்காரன்; ஆறு மரக்கால் அரிசியும் மூன்று பூசினிக்காயும் அனுப்பு! போதும்!" என்று சொல்லிவிட்டுப் போனார் பெரியவர்.

அரிசியும் பூசினிக்காயும் எதற்கு என்று சிறுவன் பிறகு விசாரித்தான். சமீபத்தில் எங்கேயோ ஒரு பிரசித்தமான கோயிலைப் புதுப்பித்துக் கட்டிக் கும்பாபிஷேகம் நடப்பதற்கு இருந்தது. அந்தச் சமயத்தில் நடக்கப் போகும் சமாராதனைக்காக என்று சிறுவன் அறிந்தான்.

அந்தப் பெரியவர்தான் 'தேப் பெருமாள் நல்லூர் சிவன்' அல்லது 'அன்னதான சிவன்' என்ற பெயரால் அக்காலத்தில் சோழநாடெங்கும் பிரசித்தி பெற்றிருந்தவர்.

தேப்பெருமாள் நல்லூர் சிவன் பெரிய பணக்காரர் அல்ல; சின்னப் பணக்காரரும் அல்ல. பெரிய மிராசுதார் அல்ல; சிறிய மிராசுதார்கூட அல்ல. சொத்து, பதவி, அந்தஸ்து, எதுவும் இல்லாதவர். உலகில் பிறக்கும்போது எப்படித் தனக்கு என்று உடைமை எதுவுமின்றிப் பிறந்தாரோ, அது போலவே வாழ்நாள் எல்லாம் வாழ்ந்திருந்து விட்டுப் போனவர். மேலே ஆகாசம்; கீழே பூமி. சுற்றிலும் காற்று, தண்ணீர், பறவைகள், மனிதர்கள். இடுப்பில் ஒரு கந்தல்; தோளில் ஒரு சவுக்கம். வயதான பிறகு ஊன்றிக் கொள்வதற்குக் கையில்ஒரு தடி. இவ்வளவுதான் அவருடைய உடைமைகள்! சில அபூர்வ மனிதர்



நண்பர்:-வீட்டில் குழந்தை ஒன்று இருந்து விட்டால் வீடு எவ்வளவு பிரகாசமாக இருக்கிறது என்கிறீர்கள்?

புதிதாகத் தந்தையானவர்:—ஆமாம், என் வீட்டிலே குழந்தைக்காக என்றே இராத்திரி முழுவதும் ஒரு விளக்குப் போட்டு வைத்திருக்கிறேன்!

களைப்போல் முக வெட்டு, 'பெர்ஸனாலிடி' என்று சொல்வதற்கும் அவரிடம் ஒன்றுமில்லை. இந்தக் கட்டுரையுடன் வெளியாகியிருக்கும் படத்தைப் பார்த்தால் தெரியும்.

ஆயினும் அந்த அதிசய மனிதர் தமது வாழ் நாளில் லட்ச, லட்ச, லட்சம் மக்களுக்கு அறுசுவை உண்டி அளித்திருக்கிறார் என்றால், அந்த அற்புதத்தை என்னவென்று சொல்வது!

ஸ்ரீ சிவன் இளம் பிராயத்தில் ஒரு நாள் சோழ நாட்டு ஸ்தலம் ஒன்றில் நடந்த உற்சவத்துக்குப் போனார். அங்கே உற்சவம் பார்க்க வந்த ஜனங்கள் பலர் சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுவதைப் பார்த்தார். இரண்டொரு சத்திரங்களில் ஜனங்கள் கூட்டமாய் உள்ளே பிரவேசிக்க முயல்வதையும், சத்திர மணியக்காரர்கள் "இடமில்லை" என்று சொல்லி அவர்களைத் தடுத்து விரட்டியடிப்பதையும் கண்டார். அப்போது அந்தச் சின்னஞ்சிறு மனிதரின் உள்ளத்தில் ஒரு மகத்தான எண்ணம் உதயமாயிற்று. "வெளியூர்களிலிருந்து உற்சவம் பார்க்க வருகிறவர்களுக்குச் சாப்பாடு போட்டால் அது எவ்வளவு பெரிய தர்ம கைங்கரியமாகும்! எத்தனையோ தனவந்தர்கள் இருக்கிறார்களே! அவர்களில் யாராவது இதைச் செய்யக்கூடாதா!" என்று எண்ணினார். அந்த எண்ணம் அவர் மனதில் ஊறிக் கிடந்து முளைவிட்டுத் தளிர்த்துப் பெரிய விருட்சமாகி விட்டது. "வேறு யாரும் செய்யாவிட்டால் போகட்டும்; நாமே முயற்சி செய்து பார்க்கலாம்" என்று தோன்றியது. அடுத்த தடவை ஒரு முக்கிய க்ஷேத்திரத்தில் உற்சவம் வந்தபோது நாலு பெரிய மனிதர்களிடம் போய்க் கேட்டார். அவர்கள் "நீதான் ஏற்பாடு செய்யேன்; நாங்கள் உதவி செய்கிறோம்" என்றார்கள். அந்த உற்சவத்தில் சிவன் சமாராதனை நடந்தது. அசலூர்க்காரர்கள் ஐந்நூறு பேர் சாப்பிட்டார்கள். நாளடைவில் ஐந்நூறு, ஐயாயிரம் ஆயிற்று. ஐயாயிரம் ஐம்பதினாயிரம் ஆயிற்று. பெரிய கோயில் கும்பாபிஷேகங்களில் சிவன் சமாராதனைகளில் லட்சம் பேருக்கு மேல் சாப்பிட்டதுண்டு. சாப்பாடு என்றால், சாதாரண சாப்பாடு அன்று. சோழநாட்டில் கை தேர்ந்த சமையற்காரர்களைக் கொண்டு செய்த அறுசுவை உண்டி!

ஒரு க்ஷேத்திரத்தில் கும்பாபிஷேகம் அல்லது உற்சவம் என்றால் அங்கே 'சிவன் சமாராதனைக் கொட்டகை' முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாய் விளங்கும். ஆயிரக்கணக்கானவர்கள் ஒரே பந்தியில் உட்காரும்படியான பிரம்மாண்ட கொட்டகை. பக்கத்தில் சமைப்பதற்கும் அதற்குத் தகுந்த பெரிய இடம். நூற்றுக் கணக்கான சமையற்காரர்களும் பரிசாரகர்களும் ஓடி ஓடி வேலை செய்து கொண்டிருப்பார்கள். வண்டி வண்டியாக அரிசி மூட்டைகளும் காய் கறி சாமான்களும் வந்து இறங்கிக் கொண்டிருக்கும். கந்தல் துணி உடுத்திய அந்தச் சின்ன மனிதர் இவ்வளவையும் மேற்பார்வை செய்து கொண்டிருப்பார். அதிகாரம் செய்து கொண்டிருப்பார்; அதட்டிக் கொண்டிருப்பார்; நல்ல வார்த்தை சொல்லிக் கொண்டுமிருப்பார்.

ராயலஸீமைப் பஞ்சத்தைப் பற்றியும், இருபது பேருக்கு மேல் சாப்பாடு போடக்கூடாது என்னும் ரேஷன் விதி பற்றியும் ஓயாது கேள்விப்பட்டுக் கொண்டிருக்கும் நமக்குச் சிவன் சமாராதனைகளைப் பற்றிக் கற்பனை செய்வது கூட இயலாத காரியம்.

அந்த ஏழை மனிதர், சமூகத்தில் எந்தவிதமான அந்தஸ்துமில்லாதவர்,—எப்படி அவ்வளவு பெரிய காரியங்களைச் சாதிக்க முடிந்தது! அவரிடத்திலே ஏதோ ஒரு அற்புத சக்தி இருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அதுமட்டும் காரணமாகாது. நமது சமூகத்தில் பரம்பரையாக வந்து நம் உள்ளத்திலும் இரத்தத்திலும் கலந்து போயிருக்கும் தர்ம சிந்தனைதான் முக்கிய காரணம்.

ஸ்ரீ சிவன் தமக்கென்று ஒன்றையும் வைத்துக் கொள்வதில்லை. யாசித்துச் சேர்த்த பொருள்களையெல்லாம் அன்னதானத்துக்கே செலவிடுகிறார் என்பது வெளியான பிறகு, அவருடைய வேலை மிகவும் சுலபமாயிற்று. ஸ்ரீ சிவன் யாரேனும் ஒருவரிடம் ஒன்று கேட்டார், அவர் கொடுக்க மறுத்தார் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போய்விட்டது. நாளாக ஆக, சிவனுடைய கைங்கரியத்துக்கு உதவி செய்வதில் போட்டியே ஏற்பட்டு விட்டது. "நம்மிடம் ஒன்றும் கேட்கவில்லையே!" என்று முதலில் குறைப்பட்டார்கள். அப்புறம் கேட்காமலேயே கூட அவருடைய கைங்கரியத்துக்கு உதவி செய்ய ஜனங்கள் முன் வந்தார்கள்.

இவ்விதம் பல பல ஆண்டுகள் அன்னதான கைங்கரியம் செய்த பிறகு, சிவன் இந்த உலகில் பிறந்தபோது எப்படி வந்தாரோ, அப்படியே இறந்தும் போனார். அதாவது உலக உடைமை எதையும் தம்முடன் கொண்டு போகவும் இல்லை; உற்றார் உறவினருக்கு வைத்துப் போகவும் இல்லை. அவருடைய அதிசயமான அன்னதான கைங்கரியத்தை நினைவுபடுத்துவதற்கு ஸ்திர ஸ்தாபனம் எதையும் விட்டுப் போகவும் இல்லை.

அப்படி ஒரு அற்புத மனிதர் இருந்தார், கோடீச்வரர்களால் சாதிக்க முடியாத கைங்கரியத்தை அந்தப் பரம ஏழை சாதித்தார் என்பதை வருங் கால சந்ததிகள் அறிந்து கொள்ளுவதற்கே இட

மில்லாமற் போயிருக்கும். அப்படிப் போய்விடக் கூடாது என்பதற்காகச் சில கண்பர்கள் பெரு முயற்சி நடத்தி வருகிறார்கள். சிவன் ஞாபகார்த்த சங்கம் என்பதாக ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். வருஷம் ஒருமுறை தேப்பெருமாள் நல்லூரில் விழா நடத்துகிறார்கள். இந்த வருஷத்தில் மேமீ 24வ. 25வ.களில் அன்னதான சிவன் விழா நடைபெறுகிறது. நீதிபதி கனம் டி. எல். வெங்கட்ராமய்யர் விழாவை ஆரம்பித்து வைக்கிறார். தர்ம கைங்கரியத்துக்குப் பெயர் போன குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீ ட்ரோஜன் அண்ணாமலைச் செட்டியார் 24வ. யன்றும், ஹரிக்கு உதவி யாசிரியர் ஸ்ரீ என். ரகுநாதய்யர் 25வ. யன்றும் விழாவுக்குத் தலைமை வகிக்கிறார்கள். இன்னிசைக் கச்சேரிகளும், காலட்சேபங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

* * *

இந்த முயற்சிகளுக் கெல்லாம் காரணமாயும் செயலில் நடத்தி வைப்பவரு மாயுள்ள ஸ்ரீ டி. எஸ். ராமநாதன் என்பவரிடத்தில், ஸ்ரீ சிவனிடத்தில் இருந்த பண்புகளில் பல அம்சங்கள் இருக்கின்றன. கைங்கரிய ஆர்வம் நெடு நாளாக அவரிடம் இருந்து வருகிறது. நண்பர்களின் உதவி சில காலமாகக் கிடைக்கத் தொடங்கியிருக்கிறது. சென்னைக் குழாய்த் தண்ணீரைப் போல் இப்போது வரும் அந்த உதவியானது காவேரி வெள்ளத்தைப் போல் பெருகிவர வேண்டும்.

ஸ்ரீ ராமநாதனுடைய தனி முயற்சியினால் தேப்பெருமாள் நல்லூரில் சிவனுடைய ஞாபகார்த்த வாசகசாலை ஒன்று ஏற்பட்டிருக்கிறது. ஒரே ஒரு அலமாரிதான் வாசகசாலை; அலமாரியில் பாதி தான் புத்தகங்கள். சுமார் மூந்நூறு புத்தகங்கள் இருக்கும். இது போதாது என்று சொல்ல வேண்டியதில்லை. புத்தகசாலையில் குறைந்த பட்சம் இருபது அலமாரிகளும் அவை நிறைய ஆயிரக் கணக்கான புத்தகங்களும் இருக்கவேண்டும்.

தானதர்மங்கள் செய்வது பற்றி நமது அபிப்பிராயங்கள் இந்த நாளில் மாறுதலடைந்திருக்கின்றன. சிவன் செய்தது போன்ற அன்னதான கைங்கரியங்கள் இந்தக் காலத்தில் செய்ய முடியாது. செய்வது அவசிய மென்றும் நம்மில் பலர் ஒத்துக்கொள்ள மாட்டோம்.

அதே கைங்கரியத்தை வேறு முறைகளில் மேற்கொண்டு செய்ய வேண்டும்.

அன்னதான சிவன் பெயரினால் அநாதைகள் விடுதி ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்பது ஸ்ரீ டி. எஸ். ராமநாதனின் மனோரதம். அந்த மனோரதம் நிறைவேறுவதற்கு, தர்ம கைங்கரிய பரம்பரையில் வந்திருக்கும் சோழநாட்டுப் பிரமுகர்கள் உதவி செய்ய முன்வர வேண்டும். — ஆசிரியர்

கப்பல் காகம்



பீஷ்மன்

அவன் களைத்துப் போய், சோர்ந்த முகத்துடன் கடற்கரைக்கு வந்து உட்கார்ந்தான். பீச்சில் கூட்டம் சேர்ந்து கொண்டிருந்தது. கடலின் இடைவிடாத அலையோசை, கடலை விற்பவர்கள், ஐஸ் விற்பவர்கள் — ஆகியோரின் ஆலாபனைகள், பல குரல்கள் அங்கங்கே பேசுவதால் உண்டான உருவற்ற இரைச்சல், இவற்றினூடே ரேடியோவின் அலறல் எல்லாமாகச் சேர்ந்து, எந்த அமைதியை நாடி அவன் அங்கே வந்து சேர்ந்தானோ, அதை அவன் அடையவிடாமல் அடித்துத் துரத்தி விட்டன.

அந்த ஜனத்திரளில் கூட்டத்தோடு கூட்டமாகத்தான் அவனும் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தான். 'வீட்டிலே ஆயிரமாயிரம் கவலைகள் இருந்தபோதிலும், இங்கே கடற்கரையில், இத்தனை ஜனங்களும் எத்தனை சந்தோஷமாக இருக்கிறார்களே !' — தன்னைச் சுற்றிலும் மொய்த்துக் கிடந்த மனிதக் கும்பலைப் பார்த்துவிட்டு, முதலில் அவன் இப்படித்தான் நினைத்தான்.

'மேலெழுந்த வாரியாகப் பார்த்துவிட்டு அதற்குள் முடிவுக்கு வந்து விட்டேனே ! என்னைப் போலவும், என்னைவிட மோசமாகவும் இந்த ஜனத்திரளிலும் எத்தனை பேர் வேதனைப்பட்டுச் சாகிறார்களோ......!' — அவனுள்ளேயே இப்படி ஒரு நினைப்பும் சுழித்துப் புரண்டது. இந்த நினைப்பில் ஏதோ திருப்தியைக் கண்டதைப் போல அவன் நெஞ்சம் நீண்மூச் செறிந்தது.

திரும்பி, தன்னைச் சுற்றிலும் ஒருமுறை பார்த்தான். யாரோ கணவனும் மனைவியும் தங்கள் அருமை மகளிடம் என்னென்னவோ கொஞ்சிக் கொண்டு அவனுக்குச் சற்றுத் தள்ளி உட்கார்ந்திருந்தனர். அந்தக் குழந்தை, தன் பொக்கை வாய்ப் புன் சிரிப்பினாலே அவர்களது கொஞ்சுதல்களுக்குப் பதிலளித்தது.

அவனுக்கு அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது.

சரியாக, மத்தியானம் இரண்டு மணிக்கே அவன் வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டான். சட்டையை எடுத்துப் போட்டுக்கொண்டு இரண்டடி நடந்திருப்பான். அதற்குள் அவன் மனைவியின் குரல் அவனை அழைத்தது.

"வரும்போது ஞாபகமாக ஹார்லிக்ஸ் வாங்கிக் கொண்டு வாங்கோ. இன்னிக்கு ராத்திரி கரைச்சுப் போட்டலையானுக் குழந்தை தூங்கவே மாட்டான்."

"உம்" என்று தலையை அசைத்து விட்டு வெளியேறினான் அவன். போகும்போதே தன் சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். உள்ளே ஒரே ஒரு எட்டணா நாணயம் தான் பைக்குக் காவலாகக் கிடந்தது. அன்றைக்கு அவனது கையிருப்பு — மொத்தமே — அவ்வளவு தான். முதல் தேதி வருவதற்கு இன்னும் ஒரு வாரம் இருந்தது. அதுவரைக்கும் இந்த எட்டணாவைக் கொண்டு சமாளிக்க முடியுமா ... ? — அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

கடனுக்காக அன்று முழுவதும் அலைந்து பார்த்து விட்டான். அவன் கண்பார்க்க எல்லாருமே அவனைப் போன்ற குமாஸ்தாக்கள் தான். மாதக் கடைசியில் அவனுக்குப் பண உதவி செய்ய இவர்களால் எங்கே இயலப் போகிறது ! அலைச்சலும், அதனால் விளைந்த அலுப்பும்தான் மிஞ்சின. அவனுக்குக் கலியாணம் ஆகி, நான்கு வருடங்கள் ஆகப் போகின்றன. இதுவரை, இன்று போலப் பணத்தட்டு ஏற்பட்டதே கிடையாது. இத்தனைநாளும் இல்லாத அனுபவம் இப்பொழுது புதிதாக ஏற்படும்பொழுதுதான் அதன் பயங்கரம் அவனுக்குப் படுகோரமாய்த் தெரிந்தது.

இந்தச் சங்கடம் கூடத் தானாக வந்து சேர்ந்த இல்லை. அவனே வரவழைத்துக்கொண்டதுதான்.

எரிச்சல் அவன் இதயத்தைப் பொத்துக் கொண்டது.

கடற்கரையில் முன்னைவிடக் கூட்டம் வலுத்தது. கடலின் ஓலத்தை அமுங்க அடித்துக் கொண்டு ஜனக் கும்பலின் கலகலப்பு எழுந்து நிறைந்தது.

தலையைக் குனிந்து, வேதனை தோய்ந்த சிந்தனையில் மூழ்கி விட்டான் அவன்.

★

அவன் அப்போது இருபத்தி ஐந்து வயதை எட்டிப் பிடித்திருந்தான். அவன் தாய்க்கு அவன் ஒரே பிள்ளை. செல்வத்தில் புரளா விட்டாலும் தாயின் செல்லத்தில் புரண்டு வளர்ந்தவன். அன்

னையின் விருப்பத்துக்கு எதிராக எதுவும் செய்யத் துணியாத அவனும் ஒரு விஷயத்தில் அவன் ஆசையை நிறைவேற்றத்தான் இல்லை. அவன் அந்த ஒரு ஆசையையும் மனமுவந்து நிறைவேற்றி வைக்கத்தான் இருந்தான்; ஆனால் அது விஷயத்தில் அவன் கொணர்ந்த ஒரு சின்ன நிபந்தனையின் காரணமாய் நாட்கள் நகர்ந்து கொண்டே போயின.

அன்றொரு நாள் இரவு வெகுநேரம் கழித்து, ஆபீஸிலிருந்து வரும்படி ஆகிவிட்டது. ஆபீஸ் கணக்கில் ஏதோ தகராறு காரணமாகத் திரும்பத் திரும்ப மண்டையை உடைத்துக் கொண்டதில் நேரம் போனதே தெரியாமல் ஆபீஸில் உட்கார்ந்திருந்து விட்டான். கணக்குகளெல்லாம் சரியாகிக் கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டு வெளி வந்த பின்புதான் மணி பத்துக்கு மேலாகிவிட்டது அவனுக்குத் தெரிந்தது. அவன் வீட்டுக்கு வந்தபோது, வாசற் கதவைத் திறந்து போட்டு விட்டு, தெருவைப் பார்த்திருந்த நடையில் சுவரில் சாய்ந்து உட்கார்ந்தவாறே தூங்கிக் கொண்டிருந்தாள் அவன் தாய்.

வாசலையடுத்து நின்ற தெருவிளக்கின் மங்கலான ஒளியில், வாழ்க்கையின் வெப்பத்தில் வதங்கித் தளர்ந்து சுருக்கங்கள் கண்டிருந்த அவள் முகம் அவன் மனத்தின் வேதனையைத் தூண்டி விட்டது.

'பாவம், நான் வரும்வரை விழித்துக்கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணித்தான் நடையிலே வந்து உட்கார்ந்திருக்கிறாள். அயர்ந்து போய் அப்படியே தூங்கிவிட்டாள்' என்று எண்ணிக் கொண்டான் அவன். அம்மாவை எழுப்புவதா வேண்டாமா என்ற சிந்தனையுடன் அவன் சட்டையைக் கழற்றிக் கொண்டிருக்கும் போதே, அந்தச் சின்ன அரவத்தைக்கூட உணர்ந்து அவன் அம்மா கண்ணை விழித்துக் கொண்டாள்.

"அப்பவே வந்துட்டயாடா சீனு! தூங்கக் கூடாதுன்னு நெனைச்சுண்டுதான் வந்து உட்கார்ந்தேன். வயசென்ன கொஞ்சமாவா ஆகிறது, நாம நெனைச்சபடிக்கு உடம்பு நடக்க! எனக்குத் தெரியாமலே கண்ணைச் சுழற்றிடுத்து!" என்று கூறிக் கொண்டே சிரமப்பட்டு எழுந்திருந்து தெருக் கதவைச் சாத்தி விட்டு உள்ளே நுழைந்தாள் அம்மா. தூக்கக் கலக்கமும், பிரயாசையும் தடுத்து நிறுத்த, அவற்றுடன் போட்டியிட்டுச் சமாளித்துக் கொண்டு எழுந்து வரும் தாய்ப் பாசத்தை அவன் பரிவுடன் பார்த்தான். அவன் கண்களில் ஏனோ நீர் முட்டி நின்றது.

"நான் சாப்பிட்டாச்சு, அம்மா. நீ பேசாமல் போய்ப் படுத்துக்கோ!" என்றான் அவன். உண்மையில் பசி அவன் வயிற்றைச் சுரண்டிக் கொண்டுதானிருந்தது. தாயின் தள்ளாத நிலையைக் கண்டு அவன் மனத்திலே சுரந்த இரக்கம் தானாகவே வார்த்தைகளாய் வடிந்தது.

"பொய் சொல்லாதேடா, சீனு! நீ எங்கேயும் சாப்பிட்டிருக்க மாட்டாய், எனக்கு நன்றாகத் தெரியும். அம்மாவுக்குச் சிரமம் கொடுப்பானேன் என்றுதான் அப்படிச் சொல்கிறாய். அதுக்காக ராத்திரி பட்டினியாய்ப் படுத்துக்கலாமாடா!" என்று சொல்லிக் கொண்டே சமையலறையில் புகுந்த அவள், அவன் பதிலை எதிர் பாராமலேயே இலை போட்டுப் பரிமாறிவிட்டாள். அவன் பேசாது வந்து சாப்பிட உட்கார்ந்தான்.

"சீனு, எனக்கு மாட்டுப் பெண் ஒருத்தி வந்துட்டாளானால் உனக்கு இந்தமாதிரி பொய் சொல்லவேண்டிய அவசியமெல்லாம் ஏற்படாது, இல்லையா!" என்றாள் பரிமாறிக் கொண்டே.


அவனுக்கு மட்டும் அந்த நினைப்பு இல்லையா, என்ன! ஆனால் கலியாணம் என்று நினைத்தாலே அவனுக்கு ஏனோ கொஞ்சம் பயமாகத்தானிருந்தது. அவனுக்கு அப்போது எழுபது ரூபாய் சம்பளம் வந்து கொண்டிருந்தது. வீடு, வாசல், சொத்து என்று எதுவுமே பிதுரார்ஜிதமாய் அவனுக்குக் கிடைக்கவில்லை. தன் சம்பளத்தைக் கொண்டுதான் அவன் காலத்தை வெல்ல வேண்டும். கஷ்டத்தை அதிகம் உணராமல் அவன் இதுவரை வாழ்ந்து விட்டான். சமீபத்தில், இரண்டு வருஷத்திற்கு முன்பு, அவன் நண்பன் ஒருவனுக்குக் கலியாணம் ஆயிற்று. இப்போது அவன் ஒரு குழந்தைக்குத் தகப்பன். இன்னொரு குழந்தையும் பிறக்க இருக்கிறது. கலியாணத்துக்கு முன்னால் ஆபீஸிலேயே அவன் மாதிரி குஷிப் பேர்வழி இருந்திருக்க முடியாது. இப்போது என்னடா என்றால், கவலையும் சிந்தனையும் சேர்ந்து மனிதன் குடும்பப் பொறுப்பைத் தனது குறைந்த சம்பளத்தைக் கொண்டு வகிக்க முடியாமல் விழி பிதுங்குகிறான். அந்த நிலை தனக்கும் ஏற்படுவதைச் சீனு விரும்பவில்லை.

மணவாழ்வு — உண்மையில், மகிழ்ச்சி தருவதாக இருக்க வேண்டும். அதற்கு நம்மைத் தயார் செய்து கொண்டால் தான்......

"என்னடா சீனு, சாதத்தைப் பிசைஞ்சுட்டு அப்புறம் யோசி!" என்றாள் தாய் மோரை ஊற்றிக் கொண்டே.

தாயின் முகத்தை ஏறிட்டுப் பார்த்து விட்டு சாதத்தைப் பிசையத் தொடங்கினான் அவன்.

'வாழ்க்கையைத் துவங்கும்போதே முணு முணுத்துக் கொண்டா துவங்குவது! கலியாணத்தினாலே என் வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படுவதைக்



தான் நான் விரும்ப முடியும். அதன் காரணமாய் விளையும் பந்தங்களுக்கு ஈடுகொடுக்கத் திறனில்லாமல் திணறும் அவல நிலையை என்னால் கற்பனை செய்யக்கூட முடியாது. ஆனால், இப்படி அர்த்தமற்று யோசித்துக் கொண்டே யிருந்தால்......'—அவன் சிந்தனை கணநேரம் தானாகவே தடைப்பட்டது.

"கலியாணப் பேச்சு எடுத்தாலே மௌனியாகப் போயிடறயே! அப்புறம் யோகியாவே ஆயிடுவியோ...!" என்றாள் அம்மா கேலியாக.

"நீ என்னமோ லேசாகச் சொல்லி விடுகிறாய் அம்மா! கலியாணத்தைப் பண்ணிக் கொண்டு அப்புறம் குடும்பத்தைப் பெரிசா வளர்த்துக் கொண்டு இந்த எழுபது ரூபாய் சம்பளத்தோடு திணறும்போது தானே கஷ்டம் புரியும்!"

"அட அசடே! இப்படிப் பயந்து, பிரம்மசாரியாகவே இருந்துடப் போறயா! வேணுமானா படிச்ச வேலை பார்க்கிற பொண்ணாகப் பார்த்துக் கலியாணம் பண்ணிக்கோயேன். ரெண்டு பேர் சம்பாத்தியமுமா குடும்பம் ஜாம் ஜாமின்னு தானாகவே நடக்கிறது!"—சிரித்துக் கொண்டே ஏதோ தமாஷாகத்தான் அவன் தாய் இதைச் சொன்னாள்.

அவன் மனத்திலே இந்த வார்த்தைகள் பட்டென்று உண்மை வடிவில் ஒட்டிக் கொண்டு விட்டன.

"படித்து வேலை பார்க்கும் பெண்...!"—விநாடிகள் ஒவ்வொன்றையும் இந்தக் கனவிலேதான் அதன்பின் அவன் கழித்தான். 'கலியாணம் செய்து கொள்வதானால் இந்த மாதிரி படித்து வேலை பார்க்கும் பெண்ணைத்தான் செய்துகொள்ள வேண்டும்' என்று அந்த நிமிஷத்திலேயே அவன் உறுதி செய்துகொண்டு விட்டான்.

அவன் ஆபீஸிற்குச் சங்கரன் என்று ஒரு புது குமாஸ்தா வந்து சேர்ந்தான். வேலை யேற்றுக் கொண்ட நாளிலேயே சீனுவும் அவனும் நண்பர்களாக ஆகிவிட்டார்கள். சங்கரனின் தங்கை சுகந்தி பள்ளிக்கூட ஆசிரியையாக அந்த ஊருக்கே மாற்றிக் கொண்டு வந்து சேர்ந்தாள். அப்புறம் விஷயம் வளர்வதற்கு என்ன வேண்டும்?

அவன் கனவும், தாயின் ஆசையும் ஒரே சமயத்தில் நிறைவேறின. சுகந்தி—அவன் வாழ்க்கைத் துணைவியானாள்.

இதுவரை நகர்ந்த நாட்கள் அப்புறம் ஓடத்தான் செய்தன. என்ன அவசரம்...!

அவள் வருவாயும், அவன் சம்பளமும் சேர்ந்து அவனது புது மண வாழ்க்கையை மணம் கமழச் செய்தன. பணத்தைக் கையில் கண்டதும் கேளிக்கைகளிலும், விநோதக் காட்சிகளிலும் இயல்பாக மனித மனத்துக்கு உள்ள நாட்டங்கள் உருப்பெறத் தொடங்கியது. 'நன்றாக வாழ்க்கையை ரஸித்து மகிழத்தானே சம்பாதிக்கிறோம்' என்று அவர்கள் அந்தரங்கம் முணங்கியது. அப்புறம்......! வரவும் செலவும் ஒன்றாகச் சரி நிகர்த் தராசில் எடை போட்டன.

இப்படியும் நாட்கள் ஓடின. அவன் தாய்க்குப் பக்கவாத நோய் வந்து எழுந்திருக்க முடியாமல் படுத்த படுக்கையாகக் கிடந்தாள். சாதாரண வீட்டுச் செலவுகளோடு வைத்தியச் செலவும் வளர்ந்தது. ஆனாலும் அவன் கவலைப்படவில்லை. பணம் கையில் தாராளமாகவே புரண்டது. படித்து வேலை பார்க்கும் பெண்ணைப் பார்த்து மணம் செய்து கொண்ட தன் லட்சிய நோக்கை நினைத்து அவன் பெருமைப் பட்டான்.

அவள் கூடிய சீக்கிரம் தகப்பனாக இருந்தான். சுகந்தி கருத்தரித்து இருந்தாள். வாழ்க்கை அவனுக்கு இனித்திருந்தது.

அதிகச் சிரமமின்றி விசேஷங்களை யெல்லாம் மகிழ்ச்சியோடு நடத்தினான். எழுந்து நடக்க முடியாத அவன் தாய், கட்டிலில் படுத்துக் கொண்டே அவற்றைப் பார்த்து மகிழ்ந்தாள்.

தலைப் பிரஸவத்திற்குச் சுகந்தி பிறந்தகம் போய் வந்தாள். அவனது அவதாரம் போல 'ஒரு ராஜாக் குட்டியை'க் கையிலேந்தி மூன்று மாதங்களில் திரும்ப வந்து சேர்ந்தாள். குழந்தையின் அழகில் அவன் சொக்கிப் போனான்.

"சுகந்தி, அந்தக் கண்ணிலே இருக்கிற குறுகுறுப்பு—உன்னைப் போலவே அப்படியே......!" என்று தன் மனைவியை விஷமமாகப் பார்த்துக் கொண்டே கூறினான் அவன்.

"வீணா என்னை வம்புக்கு ஏன் இழுக்கணுமாம்! உங்களைத்தான் அப்படியே உரிச்சு வச்சிருக்கு!"

"அப்படின்னா, நான் அழகுதான்னு சொல்லு!" என்று கூறிக் கன்னைச் சிமிட்டி விட்டு அவன் சிரித்தான்.

இரவு சாப்பாடு முடிந்து, அவன் படுக்கையில் வந்து உட்கார்ந்ததும் அவள் சொன்னாள்.

"நாளையோடே என் லீவு முடிஞ்சு போயிடறது தெரியுமில்லையோ......!"

வெற்றிலையை மடித்துக் கொண்டே வெகு அமைதியாக இந்த விஷயத்தைத் தெரிவிக்கும் அவளை நிமிர்ந்து பார்த்தான். பக்கத்திலே தொங்கிய தூளியில் குழந்தையையும் பார்த்தான்.

"லீவை 'எக்ஸ்டெண்டு' பண்ணிவிடேன்!"

அதற்குள் அவன் மனைவி வேலைக்குப் போவதை அவன் மனம் ஏனோ விரும்பவில்லை.

"அழகாத்தான் இருக்கு. இருந்த லீவையெல்லாம் எடுத்தாச்சு. இன்னும் பதினைஞ்சு நாள் லீவுதான் என் 'கிரடிட்'டிலே இருக்கு. முட்டினாத் தட்டினா, அது உபயோகப்படும். அதையும் இப்பவே வீணாக்கிவிட்டால்......!"

அவள் மடித்துக் கொடுத்த வெற்றிலையை வாயில் போட்டு மென்று கொண்டே அவன் யோசனையில் ஆழ்ந்து விட்டான்.

குழந்தைக்கு இப்போதுதான் இரண்டு மாதம் பூர்த்தியாகி இருக்கிறது. சரியாக இன்னும் வளர்ந்து கொள்ளவில்லை. ஒரு நாள் முழுதும் தாயை மறந்து எப்படி இருக்க முடியும்......!

"சுகந்தி, குழந்தை பாடு ரொம்பக் கஷ்டமாகப் போயிடுமே!" என்றான் அவன் கவலை தோய்ந்த குரலில்.

"பள்ளிக்கூடத்துக்குப் போறப்போ, வேலைக்காரி குப்பிகிட்டே சொல்லிவிட்டுப் போறேன், அம்மா கட்டிலுக்குப் பக்கத்திலேதான் 'புட்டிப் பால்' எல்லாம் இருக்கு. குழந்தை அழுதுன்னா, குப்பி கரைச்சுக் கொடுக்கிறாள்" என்றாள்.

என்னென்ன நடக்க வேண்டும் என்பதையெல்லாம் முன் கூட்டியே திட்டமிட்டு வைத்துக் கொண்டிருந்ததைப் போல அவள் பேசினாள். இருந்தாலும் அவனுக்கென்னவோ மனசு சமாதானமாகவில்லை.

"எதுக்கும் இன்னம் ஒருமாசம் லீவு போட்டுடு!" என்றான் அவன், கீழே குனிந்து கொண்டே.

"ஒரு மாசமா......! அப்புறம் சம்பளம் இல்லாத லீவுதான் கிடைக்கும். வீட்டிலே இருக்கிற செலவுக்கு......! முதல்லே எல்லாம் கஷ்டமாத்தான் தோணும். பழகப் பழக எல்லாம் சரியாப் போயிடும்."

அவள் சமாதானமாகக் கூறிவிட்டாள். அவனுக்கென்னவோ வேதனையாகத்தான் இருந்தது. இருக்



வெண்மையாக வைத்துக் கொள்ளுங்கள்

இன்று துணிகளின் விலை அபரிமித மாக உயர்ந்திருக்கின்றன. எனவே அவைகளை நீடித்த காலம் உபயோ கிக்க முதலிலேயே நல்ல கவனம் நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். அதே சமயத்தில் துணிகள் வெண்மை யாகவும் சுத்தமாகவும் இருந்தால் தான் நல்ல தோற்றத்தை அளிக்கும்.



நீடித்தகாலம் உபயோகப் படுத்துங்கள்

ஸ்வஸ்திக் தொடர்ந்து சோப் தயாரிக்கும் மெஷினில் 777 வாஷிங் சோப் தயாராகிறது. நவீன யந்திரங்கள், அடிப்படை உபகர ணங்களை தக்க விகி தத்தில் கலக்கின்றன. ஆசியாவிலேயே இம் மாதிரி நவீன யந்திரம் இது ஒன்றுதான்.

ஸ்வஸ்திக் 777 வாஷிங் சோப்புகளில் நல்ல பொருள் நிறைந்துள்ளன. அலைப்பதற்கு சௌகரி யமானது. துணியும் தூய வெண்மை படைகிறது.



SOH. 162

777

வாஷிங் சோப்புகளையே
இப்பொழுது கேட்டு வாங்குங்கள்
எப்பொழுதும் கேட்டுவாங்குங்கள்

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., வடாலா, பம்பாய்

தாலும் கண்டிப்பாக "லீவு போட்டுவிடு!" என்று அவளை அவன் சொல்லவே யில்லை.

அதற்கு மறுநாள் கழித்து சுகந்தி உத்தியோகத்துக்குப் போகத்தான் செய்தாள்.

குழந்தை வளர்ந்தது.

பகலிலே குப்பியின் அரவணைப்பிலும், இரவிலே தாயின் அரவணைப்பிலுமாக. இருந்தாலும் தாயை விடக் குப்பியிடம் அது அதிகம் ஒட்டிக் கொண்டது.

சுகந்தியைப் பிரிந்து இருப்பதைக் குறித்து அது உருந்தவில்லை. ஆனால் வேலைக்காரி குப்பி அதைத் தனியே விட்டு விட்டால் அவளுக்காக அழுது கரைந்தது.

இந்த நிலையைக் கண்டபோது சுகந்திக்கு வேதனையாக இருந்த போதிலும், அவள் அதை அவ்வளவாகக் காட்டிக் கொள்ளவில்லை.

பெற்ற தாயை விட்டுக் குழந்தை எவ்வளவு விலகிப் போய்விட்டது! இது இப்படியே போய்க் கொண்டிருந்தால்...... !—இதை நினைத்தபோது அவன் தான் வருந்தினான். இத்தனை நாளும் கவலையே காணாத அவனும் ஏதோ ஒரு வழியாய் அந்தக் கொக்கியில் மாட்டிக் கொள்ளத்தான் செய்தான்.

சுகந்தி மறுபடியும் கருத்தரித்தாள். நிறை மாசமும் ஆயிற்று. பள்ளிக்கூடத்துக்கு லீவு போட்டு விட்டு, பிரஸவத்திற்குப் பிறந்தகம் போக அவள் புறப்பட்டாள்.

அவள் பெற்றிருந்த மகன், இப்பொழுது இரண்டு வயது நிரம்பியிருந்த ராஜு அவளுடன் வர முடியாது என்று மறுத்து விட்டான். அவள் வண்டியில் ஏறும் போது முகத்தை வேறு புறம் திரும்பி, குப்பியின் தோளோடு தோளாய் ஒட்டிக் கொண்டிருந்த அவனைக் கண்கலங்கப் பார்த்தாள் அவள்.

அந்தக் காட்சி சீனுவின் மனத்தைப் பிசைந் தெடுத்து விட்டது.


"போயிட்டு வரட்டுமாடா, ராஜு!" என்றாள் சுகந்தி, வண்டியில் உட்கார்ந்து. குழந்தை அவளைத் திரும்பிக்கூடப் பார்க்காமல், வேலைக்காரி குப்பியின் கன்னத்தைக் கிள்ளி ஏதோ விஷமம் செய்து கொண்டிருந்தான்.

குழந்தை தாயை விட்டு எவ்வளவு தூரம் விலகிப் போய் விட்டான் என்பதை நினைத்த போது சீனுவுக்குச் சொல்ல முடியாத விசனம் மனத்தைக் குடைந்தெடுத்தது. இந்த நிலைமைக்குக் காரணம்?

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்' என்ற பழமொழி அவன் நினைவில் எழுந்தது. குப்பி குழந்தையோடு சதா உறவாடுகிறாள். சுகந்திக்கு அவள் வேலைக்குத்தான் பொழுது சரியாக இருக்கிறது. குழந்தையுடன் கொஞ்சிக் கொண்டிருக்க அவளுக்கு நேரமேது?—அவன் சிந்தனை மேலும் கீழுமாக இப்படிப் புரண்டு கொண்டிருக்கும் போதே, அவனுள் ஒரு தீர்மானம் உருவாகிக் கொண்டிருந்தது.

இனிமேல் அவள் உத்தியோகத்துக்குப் போகக் கூடாது. எத்தனை பேர் ஐந்தும் பத்தும் சம்பாதித்துக் கொண்டே காலத்தைத் தள்ளவில்லை. என் சம்பாத்தியத்தைக் கொண்டு மட்டும் இந்தக் குடும்பத்தை நடத்த முடிகிறதா, இல்லையா என்று தான் பார்த்து விடுவோமே என்று அவன் நினைத்தான். நினைப்பு வலுத்துத் தீர்மானமாக உயர்ந்து விட்டது.

அவளுக்குப் பெண் பிறந்தது. சுகந்தி சௌக்கியமாய்க் குழந்தையும் கையுமாக வந்து சேர்ந்தாள்.



"என் குழந்தைகள் சாதாரணமாக யாரோடும் நெருங்கிப் பழகுவதில்லை. அதென்னமோ உங்களிடம் இவ்வளவு நெருங்கிப் பழகுகிறார்களே!"

காலம் வளர்ந்து சுகந்தியின் லீவும் முடியும் தருணம் வந்தது. ஒருநாள் அவன் சுகந்தியிடம் சொன்னான்:

"பேசாமல் வேலையை ராஜிநாமா செய்து விடு, சுகந்தி. நீ பெத்த குழந்தைகளுக்கு உங்கிட்டவே ஒட்டுதலில்லாமல் போற இந்தச் சங்கடத்தை என்னால் பொறுக்கவே முடியவில்லை. எல்லாக் குடும்பங்களும் புருஷனும் மனைவியும் சம்பாதித்துத்தானா நடக்கிறது...!"

சுகந்தி வெறுமனே சிரித்தாள்.

"என்ன இப்படி திடீர் என்று! வீட்டுச் செலவுகளெல்லாம் மலையாட்டமா வளர்ந்து கிடக்கிற போது வருமானமும் குறைஞ்சு போனா, ரொம்ப நன்னாத்தான் இருக்கும். நாமா ஒரு நிலையை வரவழைச்சுண்டுட்டோம். அப்புறம் அதைத் திடீர்னு தகர்க்கணுமின்னா அத்தனை எளிசா முடிஞ்சுடுமா...!"


அவள் வேதாந்தம் அவனுக்குப் பிடிக்கவில்லை. தன் சம்பாத்தியம் இல்லாவிட்டால் குடும்பமே மூழ்கி விடும் என்ற கர்வத்தில் தான் அவள் அப்படிப் பேசுகிறாளோ என்று கூட அவன் ஒரு கணம் நினைத்து விட்டான்.

"உன் சம்பாத்தியம் இல்லேன்னா குடும்பம் ஒன்றும் மூழ்கிப் போயிடாது...!" என்று இரைந்தான் அவன்.

"நான் அப்படி ஒண்ணும் சொல்லலையே! எல்லாருக்கும் அனாவசியமான சில செலவுகளையெல்லாம் நமக்கு அவசியமா நாம் இப்போ ஆக்கிக் கொண்டுவிட்டோம். அதை யெல்லாம் 'டக்'கென உதறிடவும் முடியாது."

"இப்படிப் போய்க் கொண்டே யிருந்தா உன் குழந்தைகள் உன்னை 'அம்மா' என்று கூட நினைக்காத நிலைமை வந்தாலும் ஆச்சரியமில்லை" என்றான் அவன். அந்த விசனம் அவனை எவ்வளவு அலைக்கழிக்கிறது என்பதை அவள் புரிந்து கொண்டாள்.

"இந்தத் தடவை லீவை இன்னும் ரெண்டு மாசம் 'எக்ஸ்டெண்ட்' பண்ணி விடுகிறேன்.



"எப்போதும் குஷியாகப் பாடிக் கொண்டிருப்பவர்களைக் கண்டால் தான் எனக்குப் பிடிக்கிறது!"

"அப்படியானால் உங்களுக்குக் கொசுவைக் கண்டால் 'ரொம்பப் பிடிக்கும் போலிருக்கிறது!"

அதற்குள்ளே குழந்தையும் கொஞ்சம் வளர்ந்து விடும் இல்லையா!" என்றான் அவன்.

அவளும் அதற்குச் சம்மதித்து விட்டாள்.

பிரசவத்திற்கான விசேஷ லீவு முடிந்ததும் அவளுக்குச் சம்பளம் இல்லாத லீவுதான் கிடைத்தது.

அதன் பலன் அந்த இரண்டு மாதங்களும் அவன் வருவாயை மட்டும் வைத்தே குடும்பச் செலவுகளையெல்லாம் சமாளிக்கும்படி நேரிட்டது. சுகந்தி வேலைக்குப் போகாமல் வீட்டோடு இருந்தும் கூட வேலைக்காரியை நிறுத்த முடியவில்லை. அவளுடைய சகாயம் அத்யாவசியமானதாகத்தான் பட்டது. குழந்தைக்கு 'ஹார்லிக்ஸ்' போன்ற உபகரணங்கள் நோய்ப் படுக்கையில் உழலும் தாய்க்குச் சிகிச்சைச் செலவு ஆகியவை சேர்ந்து முதல் மாசத்திலே அவன்பாடு மிகவும் சங்கடமாக்கி விட்டது. அங்கும் இங்குமாகப் பணம் புரட்டி எப்படியோ நிலைமையைச் சமாளித்து விட்டான்.

இரண்டாம் மாதத் துவக்கத்தில் சம்பளம் வாங்கி வரும்போதே முந்தைய மாதம் வாங்கிய கடனுக்குப் பாதிப்பணம் இரை போய் விட்டது. கையில் மீந்த பணம் பதினைந்து நாட்களுக்குக் கூடப் போதவில்லை. வீட்டுச் செலவுகளையெல்லாம் கூடியவரை குறைத்துவிட வேண்டும் என்று நினைத்தான் அவன். ஆனால் எதை நிறுத்துவது! தாயின் சிகிச்சையை நிறுத்திவிடலாமா...! குழந்தையின் போஷாக்கைக் குறைத்து விடலாமா! வேலைக்காரியைத்தான் வேண்டாமென்று சொல்லி விடலாமா! இருக்கும் வீட்டு வேலைகளைச் சுகந்தியையே கவனிக்கச் செய்து விடலாம். ஆனால் அவன் மகன் ராஜு குப்பியை விட்டு அரைக் கணமும் பிரிந்திருக்க மாட்டானே!

கடைசியில்......

வீட்டுச் செலவு நிலையில் எந்த விதமான மாறுதலும் ஏற்படவில்லை. என்ன செய்வது என்று புரியாமல் அவன் திணறினான்.

★

யாரோ ஒரு சிறுவன் அவன் காலைத் தட்டிக் கொண்டு ஓடினான். சிந்தனைக் கயிற்றை அறுத்தெறிந்து விட்டுச் சுற்றிலும் பார்த்தான் அவன்.

கூட்டம் குறைந்து விட்டது. எங்கும் இருள் அடர்ந்து கிடந்தது. தொலைவிலே கடல் ஆரவாரம் செய்வது ஒலமாக ஒலித்தது.

ஒன்றுமே புரியாத குழப்ப நிலையில் அவன் எழுந்து நின்றான். 'ஹார்லிக்ஸ்' வாங்கக் கையிலே பணமில்லை. இப்படியே ஒவ்வொரு மாசமும் கழிக்க முடியுமா......! இந்த வறட்சி நிலை அவனைப் பொருத்த மட்டில் முற்றிலும் புதிய விஷயம். தலையைக் குனிந்து கொண்டே மெதுவாக நடந்தான் அவன்.

அவனுக்குப் பக்கத்திலே இரண்டு முதியவர்கள் பேசிக் கொண்டு வந்தார்கள்.

"என்னதான் நினைக்கப் பார்த்தாலும் ஒரு செலவையும் மட்டுப்படுத்தவே முடியவில்லை. எல்லாம் அவசியம் போலத்தான் தோன்றுகிறது. யோசித்துப் பார்த்தா எத்தனையோ அனாவசியங்கள்தான். ஆனால், அதையெல்லாம் விட்டுடவும் முடியவில்லை!" என்றார் ஒருவர்.

உலகத்தில் எல்லாருக்கும் இதே பிரச்னைதானா! அவன் சற்று உன்னிப்பாகக் கவனித்தான்.

"'கப்பல் காகம்' அப்படின்னு கேள்விப்பட்டிருக்கிறீரா! இப்போ நாமெல்லாம் அந்த நிலைமையில்தான் இருக்கிறோம். ஒரு காக்கை துறைமுகத்தில் வந்து நின்ற கப்பலிலே கூட்டைக் கட்டி விட்டது. சில நாட்களில் கப்பல் கடலில் பிரயாணத்தைத் தொடங்கி விட்டது. கடலில் மிதந்து செல்லும் கப்பலில் தன் கூட்டைக் கட்டி விட்ட பெருமிதத்தில் அது மகிழ்ந்து போய்விட்டதாம். ஆனால் நடுக் கடலுக்குக் கப்பல் போய்ச் சேர்ந்த பின்புதான் அதற்குத் தன் தனிமை புரிந்தது. பறந்து சுற்றி வரப் போனாலும் நாற்புறமும் கண்ணெட்டின மட்டும் நீலமே நீரைத் தவிர ஒரு மண்ணுமில்லை. காக்கையால் ஒரு சிறிது தூரம் தான் சேர்ந்தாற்போல் பறக்க முடியும். ஆகவே நடுக் கடலில் சென்று கொண்டிருக்கும் அந்தக் கப்பலை ஒண்டிய காகமும் எவ்வளவு தூரம் பறந்து சென்றாலும் திரும்பவும் அந்தக் கப்பலை வந்து தான் அடையவேண்டும். அதைப் போல நாம் ஒரு செலவு நிலையை ஏற்படுத்தி அதை ஸ்திரமாக்கிக் கொண்டு விட்டோம். அந்த நிலையிலிருந்து மீள எப்படி எப்படிச் சுற்றினாலும் முடிவு என்னவோ ஸ்திரமாகத்தான் இருக்கிறது."

அவர்கள் இருவரும் தங்கள் பேச்சைத் தாங்களே ரஸித்துக் கொண்டு, உரக்கச் சிரித்துக் கொண்டே போனார்கள்.

அந்தக் 'கப்பல் காகம்' கதையை நினைத்ததும் அவனுக்கும் சிரிப்பு வந்தது. இப்போது அவன் நிலையும் அப்படித்தானே!

அவன் மேலே யோசிக்கவில்லை.

"லீவு முடிவதற்கு முன்பே சுகந்தியை வேலை ஒப்புக்கொள்ளச் சொல்ல வேண்டியதுதான்...!" என்று அவன் அந்தரங்கம் திடமாகத் தீர்மானம் செய்து கொண்டது.

தன் மனத்தின் முடிவை அவன் எதிர்க்கவில்லை.

அதைப் பரிபூரணமாக ஆமோதித்துக் கொண்டே மேலே நடந்தான்.

இம்மாத ரிலீஸ்



அசோகா பிக்சர்ஸ்

என் தங்கை

டைரக்ஷன்: CH. நாராயணமூர்த்தி
M. K. R. நம்பியார்.

அசோகா பிக்சர்ஸ் மதராஸ்.4

BHARAT STUDIO



உயர்ந்த ரக கடிகாரங்கள்
ஒரு பவுண்டன்பேனா இலவசம்

உறுதியான மிஷின். சரியான மணி காட்டும். விசித் தயாரிப்பு. 3 ஜுவல் க்ரோமியம் கேஸ் ரவுண்டு & சதுர வடிவம் விலை ரூ. 15/8 உயர் ரகம் ரூ. 17/- ஜெனல் வாச் ரூ. 20/- ரோல்டுகோல்டு ரூ. 22/- நீண்ட சதுரம் க்ரோமியம் கேஸ் 7 ஜுவல் ரூ. 30/- ரோல்டு கோல்டு (15 வருஷ உத்தரவாதம்) ரூ. 32/- உயர் ரகம் ரூ. 34/- ஸ்பெஷல் 15 ஜுவல் ரூ. 40/- உயர் ரகம் ரூ. 42/- அலாரம் டைம்பீஸ் ரூ. 16/- பாக்கெட் வாட்ச் ரூ. 11/- *தபால் செலவு அணா 14.*



சிகரெட் லைட்டர் ரூ. 2/-


சிகரெட் பிடிப்பவர்களுக்கு அத்யாவசியமானது. பார்ப்பதற்கு அழகாகவும் நீண்ட நாள் உழைக்கக் கூடிய நிக்கல் கேஸ். இது இருந்தால் தீப்பெட்டி அவசியமில்லை. சாதாரணம் ரூ. 3/8/- சிறந்தது ரூ. 7/- மிக உயர்ந்தது ரூ. 12/- 1 டஜன் கற்கள் ரூ. 1/- பாக்கிங், தபால் செலவு அணா 14. ஒரே சமயத்தில் மூன்று வாங்குபவர்களுக்கு பாக்கிங், தபால் செலவு இலவசம். கோல்டு கேப் உள்ள 51 மாடல் பார்க்கர் பேனா ரூ. 6/- சிறந்தது ரூ. 9/- தபால் செலவு தனி. மூன்று வாங்குபவர்களுக்கு தபால் செலவு இலவசம்.

வீட்டில் அச்சடிக்கக் கூடிய பாக்கெட் பிரஸ்
(ரப்பரால் செய்யப்பட்டது) பெயர், விலாசம், கவர், லேபல், கேஷ்மெமோ முதலியவைகளை வீட்டிலேயே அச்சடிக்கலாம். சாதாரணம் ரூ. 3-8-0. உயர் ரகம் ரூ. 5-0-0. சிறந்தது ரூ. 7-0-0. தபால் பாக்கிங் செலவு அணா 14.
கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

CALCUTTA WATCH COMPANY (Sec. 73)
POST BOX No. 12203, CALCUTTA - 5

அமெரிக்கன் மாடல் ரோல் பிலிம்

பாக்ஸ் காமிரா



பிலிம் நெ. 120-ல் நீண்ட காலம் திருப்தி அளிக்கும் 2¼ x 3¼" சைஸ் போட்டோக்கள் எடுக்கலாம். திருஷ்டி உபகரணத்துடன் உயர்ந்த லென்ஸ்கள் பொருத்தப்பட்டது. விலை ரூ. 11-8-0. வி. பி. பி. சார்ஜ் ரூ. 1-8-0. தோல் கேஸ் ரூ. 3.

தூர திருஷ்டிக் கண்ணாடி



தூரத்திலுள்ள இயற்கைக் காட்சிகளையும், மலைக் காட்சிகளையும் கண்டு களியுங்கள். தூரத்திலுள்ள காட்சிகளும், கண்ணுக்குப் புலப்படாத சிறிய வஸ்துக்களும் சுலபமாக புலப்படும். குதிரைப் பந்தயம், மலையில் பிரயாணம் இவைகளுக்கு இன்றியமையாதது. விலை ரூ. 5. பாக்கிங், தபால் செலவு ரூ. 1-8-0 தனி.

ரூ. 18-ல் ரேடியோ

15 அணா செலவு பாட்டரி செல் உதவியினால் இதை இயக்கலாம். எலக்ட்ரிக் கரண்ட் தேவையில்லை. இனிமையான ரேடியோ நிகழ்ச்சிகளை இதன் மூலம் கேட்கும்பொழுது நீங்கள் மிகவும் ஆச்சரியப் படுவீர்கள். விலை ரூ. 18. வி. பி. பி. சார்ஜ் ரூ. 5-0-0 தனி.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதப்படல் வேண்டும்

INDRA TRADING CO., (K. M.)
Rangmahal, Aligarh U. P. (India)

கொலம்பியா புதிய வெளியீடு





குலமங்கலம் சகோதரிகள்

ஆர். ஜெயலக்ஷ்மி
&
ஆர். ராஜலக்ஷ்மி


பாடிய

GE. 22027

பஜகோவிந்தம்

2 பாகங்கள்

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்-2



வீச்சுவும் விநாயகரும்!

சீதர்

ஊரிலுள்ளவர்கள் எல்லோரும், "இந்த வருஷத்து வெய்யில் ரொம்ப அதிகம்... போன வருஷத்தைவிட அதிகம்......தாங்க முடியவில்லை...உஸ்......அப்பா!" என்றெல்லாம் சொல்லிப் பெருமூச்சு விடுகிறார்கள். ஆனால் விச்சுவுக்கு மட்டும் அப்படியொன்றும் வெய்யில் கடுமையாக இருப்பதாகத் தெரியவில்லை. ஏன், அவன் வரைக்கும் வெய்யில் வெய்யிலாக இருக்கவில்லை; நிலவாகத்தான் இருக்கிறது.

ஒரு நாள் அவன் அப்பா கடைக்குப் போய் ஏதோ ஒரு சாமான் வாங்கிவரச் சொன்னார். அப்போது மணி பதினொன்றிருக்கும். வெய்யில் தகித்துக் கொண்டிருந்தது. அவன் அப்பா, "டேய், குடையை எடுத்துக் கொண்டு போ" என்று கட்டளையிட்டார்.

"வேண்டாம், அப்பா! எனக்கொன்றும் வெய்யில் தெரியவில்லை. சும்மாவே போய் விட்டு வந்து விடுகிறேன்" என்றான்.

அவன் அப்பா கேட்டால்தானே? "முட்டாள், சொல்கிற பேச்சைக் கேளடா, அதிகப் பிரசங்கி! குடையை எடுத்துக் கொண்டு போ" என்றார்.

அப்பா, கோபத்துடன் அவ்வாறு கூறியது அவனுக்குப் பிடிக்கவில்லை. என்ன செய்வது? முணு முணுத்துக் கொண்டே குடையைப் பிடித்துக் கொண்டு போனான்.

அந்த முணு முணுப்பெல்லாம் கொஞ்ச தூரம் வரைதான் இருந்தது. கடைத் தெருவை அடைந்ததும் அப்பா கோபித்துக் கொண்டது, கையில் இருந்த குடை எல்லாம் மறந்து போனான். கடைத் தெருவில் மாட்டியிருந்த பொம்மைகளும், வருவோர் போவோர்களும், வியாபார வேகமும் எல்லாம் அவன் கவனத்தைக் கவர்ந்தன. அதில் ஈடுபட்டவாறே அவன் வழக்கமாக வாங்கும் சாமான் கடைக்குப் போனான். குடையை மடக்கிக் கையில் பிடித்துக் கொண்டு, கடைக்காரரிடம் அப்பா கேட்ட சாமானைக் கேட்டான். பிறகு கொஞ்ச நேரம் கடைக்காரருடன் பேரம் பண்ணிவிட்டு, சாமானை வாங்கிக் கொண்டு உற்சாகமாக வீட்டுக்குத் திரும்பினான். அவன் உற்சாகத்துக்குக் காரணம், அவன் பேரம் பண்ணிய சமத்காரத்தினால் விலைக்கு இரண்டணா குறைத்துக் கடைக்காரர் அவன் கேட்ட சாமானைக் கொடுத்திருக்கிறார் என்பதுதான். அதைப் பற்றி அவன் தன் அப்பா அம்மாவிடம் பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம் அல்லவா?

ஆனால் பாதி தூரம் வந்ததும், விச்சு தேள் கொட்டினாற் போல் கையை உதறினான்! வேறொன்றுமில்லை—கடையில் பேரம் பேசிய உற்சாகத்தில், திரும்பி வரும்போது குடையை எடுத்து வர மறந்து போய் விட்டான்! அது இப்பொழுதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது.

குடை, இன்னும் வைத்த இடத்தில் இருக்குமோ, இருக்காதோ? கடைக்குத் தான் நிமிஷத்துக்குப் பத்துப் பேர் வருகிறார்களே, அவர்கள் எல்லோரும் யோக்கியமானவர்கள் என்று எப்படிக் கருத முடியும்? யாராகிலும் ஒருவர் எடுத்துப் போயிருக்கலாம். அல்லது கடைக்காரரே எடுத்து வைத்துக் கொண்டு 'குடை இருந்த சமாசாரமே எனக்குத் தெரியாதே...' என்று சொல்லலாம். குடையைத் தொலைத்ததினால் அப்பா வெகு கடுமையாகக் கோபித்துக் கொள்ளலாம், திட்டலாம், அடிக்கலாம். என்ன வேண்டுமானாலும் செய்யலாம்! ஆகவே, என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தான் விச்சு.

கடைசியில், எதற்கும் கடைக்குப் போய்ப் பார்த்து விட்டு வரலாம் என்று நினைத்துத் திரும்பிச் சென்றான்.

அப்படிப் போகும் போது ஒரு பிரார்த்தனை செய்து கொண்டே போனான் விச்சு.

அந்த ஊர்க் கடைத் தெருவுக்கு மேல்புறம் ஒரு பிள்ளையார் கோவில் இருந்தது. அந்தப் பிள்ளையாருக்கு ரொம்பவும் வரப்

பிரசாதி என்று பெயரும் புகழும் உண்டு. தனக்கு ஒரு புதுப் பென்ஸில் வாங்கித் தருவதாக அப்பா ஒப்புக் கொண்டால், பிள்ளையாருக்குப் பத்துத் தோப்புக்கரணம் போடுவதாக வேண்டிக் கொள்வான் விச்சு. அவன் பிரார்த்தனை கைகூடி விடும். இந்த மாதிரி எத்தனையோ சமயங்களில் பிள்ளையார் கை கொடுத்திருக்கிறார்; தாம் ஒரு வரப் பிரசாதி என்பதை நிரூபித்திருக்கிறார்.



அந்த வழக்கப்படியே இந்தத் தடவையும் விச்சு பிரார்த்தனை செய்து கொண்டான். "குடை கிடைத்து விட்டதானால் நூறு தோப்புக் கரணம் போடுகிறேன். தொந்திக் கணபதியே, எனக்குக் குடை கிடைக்கச் செய்து, அப்பாவின் கோபத்திலிருந்து காப்பாற்றும்" என்று வேண்டிக் கொண்டான்.

விக்ன விநாயகர் காதில் விச்சுவின் பிரார்த்தனை விழுந்ததோ என்னமோ தெரியவில்லை. விச்சு தான் கடையில் வைத்த இடத்திலேயே குடை யிருப்பதைக் கண்டான். விச்சுவுக்கு உண்டான சந்தோஷம் சொல்லி முடியாது. விக்ன விநாயகருக்குத் தான் வாக்களித்த நூறு தோப்புக் கரணங்களையும் அளித்து விடத் தீர்மானித்து நேரே பிள்ளையார் கோவிலுக்குப் போனான் விச்சு.

விநாயகர் சன்னிதியில் நின்று கொண்டு, கண்களை மூடி, மிகுந்த பக்தி சிரத்தையுடன் இரண்டு காதுகளையும் பொத்திக் கொண்டு ஒன்று, இரண்டு என்று எண்ணி நூறு தோப்புக் கரணம் போட்டான். சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தான். பிறகு ஞாபகமாகக் குடையை எடுத்துக் கொள்ளப் போனான். ஐயோ, இது என்ன?—குடையைக் காணவில்லையே!

அவனுக்கு இப்பொழுது உண்டான வருத்தம் கொஞ்ச நஞ்சமில்லை. முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வீட்டுக்குப் போனான். அப்பாவிடம் திட்டும் அடியும் நிச்சயம் என்று தீர்மானித்து விட்டான். மகா கணபதி வேறு தன்னை ஏமாற்றி நூறு தோப்புக்கரணம் வாங்கிக் கொண்டதாகத் தீர்மானித்தான் — பொல்லாத பிள்ளையார்!

இப்படி ஏதெல்லாமோ எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டே வீட்டுக்குள் அடி எடுத்து வைத்தால், என்ன ஆச்சரியம், அங்கே குடை யிருந்தது!

இந்தக் குடை எப்படி இவ்வளவு சீக்கிரம் தனக்கு முன்னால் இங்கு வந்தது? 'பாப்பா மலர்' கதைகளில் வருவது போல் குடைக்குக் கால் கீல் முளைத்து விட்டதா? அல்லது பறக்கும் இறக்கைகள் முளைத்து விட்டனவா? எப்படி அது அங்கே வந்தது என்று தெரியாமல் விழித்தான்.

"என்னடா, விச்சு! கடைக்குப் போய்ச் சாமான் வாங்கி வாடா என்றால், சாமானையும் வாங்கிக் கொண்டு கோயிலில் தோப்புக் கரணம் போட்டுக் கொண்டிருக்கிறாயே! அவசரம் என்று ஒரு காரியம் உன்னிடம் சொன்னால் சீக்கிரத்தில் நடக்காது போலிருக்கிறதே!" என்று கடிந்து கொண்டார் விச்சுவின் அப்பா.

இதிலிருந்து விச்சுவுக்கு எல்லா விஷயங்களும் 'பளிச்' சென்று புரிந்து விட்டன. சாமான் வாங்கி வரப் போனவன் வர நாழிகையாகவே, அவரே அவனைத் தேடிக்கொண்டு புறப்பட்டிருக்கிறார். யாரோ வழியில் விச்சு கோவிலில் இருப்பதாகச் சொல்லி யிருக்கிறார்கள். கோவிலில் அவன் தோப்புக் கரணம் போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, அப்பா குடையையும் சாமானையும் எடுத்துக்கொண்டு திரும்பி யிருக்கிறார்.

ஆனால் விச்சுவுக்கு இப்பொழுதுதான், தான் சாமான் வாங்கி வரப் புறப்பட்டது ஞாபகம் வந்தது! குடையை முதல் தடவை மறந்து ஞாபகப்படுத்திக் கொண்டதிலிருந்து தான் எதற்காகப் புறப்பட்டான் என்பதே அவனுக்கு மறந்து போய் விட்டது.

கடையிலே அப்பா குடையை எடுத்துக் கொண்டு வந்ததுடன், சாமானையும் எடுத்துக் கொண்டு வந்து விட்டார் என்று அறிந்ததும் அவன் மனம் சாந்தி அடைந்தது. விக்ன விநாயகருக்கு அவர் இருந்த திசையை நோக்கி ஒரு கும்பிடு போட்டான் விச்சு.

அட்டைப்பட விளக்கம்

அவன் இந்தியன். ஆனால் அவன் தன்னை இந்தியன் என்று சொல்லிக் கொள்ளவே வெட்கப்பட்டான். ஆங்கிலேய மோகத்துக்கு அடிமையாகி அவன் தன் பெயரையும் மாற்றி வைத்துக்கொண்டான். அதுமட்டும் அல்ல; ஸ்டெலா என்னும் ஆங்கிலேயப் பெண்ணைக் காதலித்தான். அவனுடைய காதலுக்காக அவன் தன் சொத்து, சுகம், சுதந்திரம் அனைத்தையும் அர்ப்பணம் செய்தான். ஆயினும் அவன் உள்ளத்தில் ஏதோ ஒன்று, அவன் 'இந்தியன், இந்தியன்' என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது. பாரதப் பண்பாட்டின் பெருமையைக் கூறிக் கொண்டிருந்தது.

'அருவிக்கரை ஆசிரமம்' என்னும் தலைப்பில் 'கல்கி'யில் இரண்டு வாரங்களாக வெளியாகிக் கொண்டிருக்கும் அற்புத நவீனத்தில் வரும் கதாநாயகி தன் காதலனை மனத்தில் எண்ணியபடி அலங்கரித்துக் கொள்ளும் காட்சியைத்தான் சந்திரா இந்த இதழ் அட்டைப்படமாக சித்திரித்திருக்கிறார்.



அருணோதயம் முதல்
நட்சத்திரம் உதிக்கும்
வரையில் – நாள்முழுவதும்
இனிய வாசனையோடிருப்பீராக
டால்கம் பவுடர்
பள பள
வென்று ஜொலிக்கும்
புதுமைக்கு காஷ்மீர் புக்கே
டால்கம் பவுடரை உங்கள்
மேல் தாராளமாகத் தூவுங்கள்.
அது அதிகக் கசிவை உறிஞ்சுகிறது...எரிச்சலையும்
அரிப்பையும் அடங்கச் செய்கிறது ... உங்களைக்
குளிமையுடனும் இனிய வாசனையுடனும், நாள
முழுவதும் புதுமையுடனும் இருக்கச் செய்கிறது.
காஷ்மீர் புக்கே
மானிடர்கள் விரும்பும் பரிமளத்துடன்



3. மனப் புண்ணுக்கு மருந்து

டிஸம்பர் மாதம் பிறந்தது. ஸ்டெலா கிறிஸ்துமஸுக்காகப் புது நகைகள் செய்யக் கொடுத்திருந்தாள். புத்தாடைகள் தைக்கக் கொடுத்திருந்தாள். அவள், தான் வாங்கும் ஒவ்வொரு பொருளையும் என்னிடம் கொண்டு வந்து காட்டி, தான் செய்யப் போகும் ஒவ்வொரு காரியத்தையும் என்னிடம் சொல்லிப் போவதைக் காணும் பொழுது, 'அப்பப்பா! அவளுக்கு நம்மிடம்தான் எவ்வளவு பிரியம்! என்னிடம் வந்து சொல்லாவிட்டால் அவளுக்கு மனம் கேட்காது; பொழுது போகாது போலிருக்கிறது. அன்பு என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும்!' என்று எண்ணி எண்ணி மனம் மகிழ்வேன்.

'நம்மிடம் உயிரையே வைத்திருக்கும் இவளுக்கு நாமும் ஏதாவது பரிசு வழங்க வேண்டாமா?' என்ற எண்ணம் என் உள்ளத்திலே ஒரு நாள் எழுந்தது. ஆனால் என்ன பரிசு வழங்கலாம் என்று யோசித்தேன், யோசித்தேன்: அப்படி யோசித்தேன். உணவை மறந்து உடையை மறந்து, உறக்கத்தை மறந்து, பல நாட்கள் யோசித்தேன். இவ்வளவு யோசனைக்குப் பின் கடைசியாக, அவளுக்குப் பரிசு வழங்குவதற்காக ஒரு முத்து மாலையைத் தேர்ந்தெடுத்தேன். அந்த மாலை மிக மிக அழகாக இருந்தது. அதன் அழகைக் கண்டதும் நான் பூமியிலிருந்து ஒரே தாவாகத் தாவி வான வெளிக்கே பறந்து விட்டேன்.

பக்கத்திலே ஸ்டெலா முகத்திலே முத்து முறுவல் தாண்டவமாட நின்றுகொண்டிருப்பதுபோன்ற பிரமை ஏற்பட்டது. அப்படியே அவள் கழுத்தில் அந்த முத்து மாலையை அணிவித்து அவள் அழகை மனக் கண்களாலேயே பருக முயன்றேன். 'அவள் அணிந்ததனால் அந்த முத்து மாலையின் அழகு உயர்ந்ததா அல்லது அந்த முத்து மாலையை அணிந்ததனால் அவள் அழகு அதிகரித்ததா?' என்னும் பிரச்னையில் என் மனம் ஈடுபட்டது.

ஆனால் அதன் விலையைக் கேட்டபின் மண்ணுலகை மறந்து வான வீதியிலே பறந்து கொண்டிருந்த என் மனம் சிறகு ஒடிந்த பறவையைப் போல மறுபடியும் மண்ணிலே வந்து விழுந்தது. அப்பா! இவ்வளவு விலையா? ஒரு பவுனா, இரண்டு பவுனா? நூற்றிருபது பவுன் அல்லவா? இவ்வளவு பவுன் கொடுத்துப் பரிசு வாங்கி அவளுக்கு அளிக்க வேண்டியது அவசியந்தானா?

அதைக் கையிலேயே வைத்துக் கொண்டு வேறு மாலைகளைப் பார்க்கலானேன். ஆனால் அவற்றில் ஒன்றும் என் கண்களுக்குப் பிடிக்கவில்லை. கடைசியில் பணத்தைப் பிரேமை வெற்றி கொண்டு விட்டது. நான் அதே மாலையை வாங்கி ஸ்டெலாவுக்கு அன்பளிப்பாக அளித்து விட்டேன். அதைப் பார்த்த ஸ்டெலா அயர்ந்து போய் விட்டாள். பெருமை பூரிக்க என்னைப் பார்த்து, "இந்த அன்பளிப்புக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்?" என்றாள்.

"நீ இதை அணிந்து கொள்ளுவதுதான் எனக்கு நீ செய்யும் பெரிய கைம்மாறு!" என்றேன் நான்.

"அது போகட்டும், இதன் விலை என்ன?"

"இதன் விலைதானே! உன் கடைக்கண் பார்வைதான்!"

"அதைக் கேட்கவில்லை. இதன் உண்மை விலையைக் கேட்கிறேன்!"

"உண்மை விலை உனக்கு எதுவாயிருந்தால் என்ன? இதைக் கிறிஸ்துமஸ் பண்டிகை அன்றைக்கு அணிந்து கொள். இது உன் கழுத்தில் ஏறிவிட்டால் இதன் மதிப்பு இன்னும் உயர்ந்துவிடும்!" என்றேன்.

ஸ்டெலாவின் உள்ளத்திலே அன்பும் ஆனந்தமும் ஏக காலத்தில் கரை புரண்டு பொங்கிப் பெருகவே, ஆவேசம் வந்தவள் போல என்னை இறுகத் தழுவிக் கொண்டாள். அப்பொழுது அவள் காட்டிய அன்பு எவ்வளவு உண்மையானதாகத் தோன்றியது. தெரியுமா? நான் மகுடி வசப்பட்ட நாகம் போல் அவள் அன்பின் அரவணைப்பில் கட்டுண்டு மதி மயங்கி நின்றேன். அதுவரை நான் என்னை எப்படித்தான் அடக்கி ஆண்டு வந்தேனோ, தெரியாது. அவள் அரவணைப்பில் கட்டுண்ட பின் என் இருதயம் என் வசம் இழந்து அவள் வசமாகி விட்டது. நான் இன்ப போதையில், காதல் வெறியில் என் நிலையை மறந்து விட்டேன்.



அடுத்த நிமிஷம் நான் ஸ்டெலாவின் இரு மென் கரங்களையும் என் கரங்களில் ஏந்திக் கொண்டேன். அப்புறம் என்ன? நாங்கள் இருவரும் எங்களை மறந்து இன்ப லோகத்துக் கேளிக்கைகளில் ஈடுபட்டு விட்டோம். இதுவே கடைசியில் என் பாக்கியத்தை நிர்ணயிக்கும் பரிக்ஷையாகவும் முடிந்து விட்டது. எனக்கு இது வரை பிரசங்கம் செய்து பழக்கம் இல்லை. அவ்வாறு பிரசங்கம் செய்ய வேண்டிய அவசியமும் ஏற்பட்டதில்லை. ஆயினும் அப்பொழுது என் வாயிலிருந்து வெளிவந்த சொற்களில் எங்கிருந்துதான் அந்தத் தேனின் இனிமை வந்து கலந்ததோ, தெரியவில்லை. ஸ்டெலா அதைக் கேட்டு அசந்து போய் அப்படியே மெய்ம்மறந்து உட்கார்ந்து விட்டாள். நான் அவளிடம் கல்யாணத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். அவள் அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. இலேசாக ஒரு புன்னகையை வீசி விட்டுத் தலை குனிந்து கொண்டாள். அப்புறம் என் ஆனந்தத்தைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? எதிர்பார்த்த பதில்தான் எனக்குக் கிடைத்து விட்டதே! நாணம் கலந்த மௌனம் சம்மதத்துக்கு அறிகுறிதானே? காதல் பரிக்ஷையில் தேறிவிட்ட மகிழ்ச்சியில் என் உடல் புல்லரித்தது; உள்ளம் உவகை எய்தியது. காரியம் கை கூடி விட்டால் மனத்தில் மகிழ்ச்சி ஏற்படுவது இயல்பே அல்லவா?

அன்று கிறிஸ்துமஸ் பண்டிகை. அந்தி நேரம். மக்கள் தங்கள் தங்களுக்குக் கிடைத்த பரிசுப் பொருள்களைச் சுமந்து கொண்டு வீட்டை நோக்கிப் போய்க்கொண் டிருந்தனர். அப்பொழுது அவர்களுடைய முகத்தில் தாண்டவமாடிய மகிழ்ச்சியையும் உதடுகளிலே தெளிந்த புன்முறுவலையும், விழிகளிலே பளிச்சிட்ட ஒளியையும் பார்க்கப் பத்தாயிரம்



ஜோடிக் கண்கள் கூடப் போதாதுதான். அன்றைக்கென்று உலகத்தில் உள்ள துக்கங்களும் தரித்திரங்களும், இந்த உலகத்தை விட்டு ஓடி ஒளிந்து கொண்டு விட்டனவோ என்றுதான் தோன்றியது. மக்கள் அவ்விதம் மகிழ்ச்சிக் கடலில் மிதந்து கொண்டிருந்தனர். 'ஏழைக்கு ஏது இன்பம்?' என்று கேட்கத் தோன்றவில்லை. ஏழை பணக்காரன் என்று அன்றைய இன்பம் ஒருவேளை பாரபட்சம் பார்க்கவில்லையோ, என்னவோ? ஆனால்......ஆனால் என் மனம் மட்டும் மிகவும் வாட்ட முற்றிருந்தது. அதற்குக் காரணம் என்ன என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. பொழுதோ போய்க் கொண்டிருந்தது. ஆனால் அவளைக் காணோம். நான் வழிமேல் விழிவைத்த வண்ணம் அவள் வருகையையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். எதிர்பார்த்து எதிர்பார்த்து என் கண்கள் பூத்துப் போயினவே ஒழிய, ஷீலா வரும் வழியாயில்லை. நான் அடிக்கடி அலுத்துக் கொண்டேன்.

'அவள் நம்மை ஒரு பொருட்டாக மதித்தால்தானே? மதித்திருந்தால் இத்தனை நேரம் எட்டு ஊருக்கு வந்திருக்க மாட்டாளா? இத்தனை நேரம் நம்மைத் தவிக்க விடுவாளா?' என்று ஒரு சமயம் எண்ணுவேன். இன்னொரு சமயம், 'அவளுக்கு என்ன வேலையோ? நம்மிடம் உயிரையே வைத்திருக்கும் அவள் வராமல் இருப்பாளா? கட்டாயம் வருவாள்! பெண்களுக்கு அலங்காரம் செய்து கொள்வதென்றால் அதிக நேரம் பிடிக்கும் என்று சொல்வார்களே! ஒருவேளை அவள் அலங்காரம் செய்துகொள்வதில் ஈடுபட்டிருக்கலாம் அல்லவா?' என்று எண்ணி மனத்தைச் சமாதானப்படுத்திக் கொள்வேன். அது மட்டும் அல்ல; அவள் அலங்காரம் செய்து கொள்ளும் அழகை மனக் கண்களால் கண்ணுற்று ரசிக்கவும் தொடங்கிவிடுவேன்.

இப்படிச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த பொழுதுதான், 'இனிமேல் அவள் வந்தால்கூட அவளுடன் முகங்கொடுத்துப் பேசக்கூடாது' என்று முடிவும் கட்டினேன். இதே சமயம் யாருடைய காலடி ஓசையோ கேட்டது. நம்பிக்கை இழந்திருந்த இருதயம் படபடத்தது. கண்கள் வாசற்புறம் ஓடி, 'யார் வருகிறார்கள்?' என்று பார்த்தன. அவள்! ஆம், அவளேதான் வந்திருந்தாள்! ஆனால் இது என்ன? நான் எதிர்பார்த்தபடி மலர்ந்த முகத்துடனும் சிரித்த உதடுகளுடனும் அவள் வரவில்லையே, ஏன்? உள்ளம் உடைந்து போன, வருத்தமே உருவான ஏமாற்றச் சிலையாக அல்லவா அவள் வந்திருந்தாள்! இதற்குக் காரணம் என்னவாக இருக்கலாம்?

அவளுடைய அந்த நிலைமையைக் கண்ணுற்றதும் என் கோபம் - தாபம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து ஓடி விட்டன. இருதயத்தின் ஆழத்திலே அக்ஞாத வாசம் செய்யப் புகுந்திருந்த அன்பு அந்தக் காட்சி



யைக் காணப் புழுங்கியது. அதற்கு மேல் என்னால் அவளைப் பார்த்துக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை. நான் ஓடிப் போய் அவளை அணைத்துக் கொண்டேன். பிறகு பதற்றமுற்ற குரலில் "ஸ்டெலா!" என்று அழைத்தேன்.

அவள் ஒன்றும் பதில் பேசவில்லை. ஆனால் அவளுடைய கண்களிலிருந்து நீர் பொலபொலவென்று உதிர்ந்தது.



"ஆச்சரியமாயிருக்கிறதே! இன்றைக்கு என்னிடம் வந்து நீ இப்படி அழுகிறாயே, காரணம் என்ன? விஷயத்தைச் சொல்லு!" என்று அவளைக் கைப்பிடியாக அறைப்பக்கம் அழைத்து வந்தவாறு கேட்டேன்.

அப்பொழுதும் அவள் பேசவில்லை.

"உன் மௌனம் என் நெஞ்சைப் பிளக்கிறது. என்னிடம் கூட என்ன விஷயம் என்று சொல்ல மாட்டாயா?" என்று கேட்டேன்.

ஸ்டெலா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு, "என்னத்தைச் சொல்ல? வாய் திறக்க வழி இருந்தால் தானே? நீங்கள் வாங்கித் தந்த மாலை காணாமற் போய் விட்டது!" என்றாள்.

சகோதரா! அதைக் கேட்டதும் என் இருதயத்தில் இரும்பைக் காய்ச்சி ஊற்றியது போலிருந்தது. அந்த மாலையின் அழகைச் சொல்லி முடியாது; அது அவ்வளவு அழகாயிருந்தது! அதன் விலைதான் என்ன குறைச்சலா? அன்புக்கு விலை மதிக்க முடியுமா? அதன் விலையுடன் மதிப்புக்கு அப்பாற்பட்ட என் இருதயத்து அன்பையும் அல்லவா சேர்த்துப் பரிசாக அளித்திருந்தேன்! 'கிறிஸ்துமஸ் எப்பொழுது வரப் போகிறது? ஸ்டெலா அந்த முத்துமாலையை அணிந்து கொண்டு என்னெதிரே தன் முத்து முறுவலை அள்ளி வீசிக்கொண்டு எப்பொழுது காட்சி அளிக்கப் போகிறாள்?' என்று நாட்களை, நாழிகைகளை எண்ணிக் கொண்டிருந்தேன். அந்த மாலையை அணிந்து கொண்டு அவள் நம்மெதிரே வரும்பொழுது எவ்வளவு அழகாகக் காட்சி அளிப்பாள்! சௌந்தரிய தேவதையே உருவெடுத்து வந்தாற்போலிருக்கும்' என்றெல்லாம் கனவுக் கோட்டை கட்டிக் கொண்டிருந்தேன்; கற்பனைப் புரவியில் பறந்து கொண்டிருந்தேன். என் உள்ளத்தில் என்ன என்ன ஆசைகள், என்ன என்ன ஆவல்கள் எல்லாம் இடம் பெற்றிருந்தன, தெரியுமா? ஆனால் என் மனக் கோட்டை இப்படியா தகர்ந்து மண்ணாக வேண்டும்? ஆனால் எனக்கு மனம் பொறுக்கவில்லை. துக்கத்தினால் தலை குனிந்து கொண்டேன். நான் வருத்தப்படுவதைக் கண்ட ஸ்டெலாவின் வருத்தமுற்ற முகம் இன்னும் வருத்தமுற்று விட்டது. அவள் கண்களிலிருந்து கிளம்பிய நீர் கன்னங்கள் வழியே வழிந்தோடிற்று.

"இனி அழுவதனால் என்ன பிரயோஜனம்? போனது போனது தானே? இனி திரும்பி வரப் போகிறதா? கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுவது சகஜம்தானே? இம்மாதிரிப் பொருள்கள் தொலைந்து போவது என்பது நமக்குப் புதிதல்லவே!" என்றேன்.

என் இந்தச் சமாதானச் சொற்கள் ஸ்டெலாவின் விசிப்புக்கு எதிரே என்ன செய்ய முடியும்? இலேசான இரும்பு ஆணிகளைத் தண்ணீரில் விட்டெறிந்தால், அவை ஆழத்தில் அமுங்கித்தானே போகின்றன? அதேபோல் என் ஒவ்வொரு சொல்லும் அவள் விசிப்பின் ஆழத்திலே அடங்கி விட்டன. அதனால் எவ்விதப் பிரயோஜனமும் உண்டாகவில்லை; அவளுடைய கண்ணீர்ப் பெருக்கில் எவ்விதமான மாற்றமும் ஏற்படவில்லை. இதைப் பார்த்ததும் என் உள்ளம் இன்னும் வாட்டமுற்றது. நான் அவள் அருகில் சென்று எவ்வளவோ சமாதானப்படுத்த முயன்றேன். ஆனால் கிடைத்த பலன் பூஜ்யம்தான்.

பெண்கள் தங்கள் நகைகள் கெட்டு விட்டால், அந்தத் துயரத்தைத் தாங்க மாட்டார்கள் என்று நான் பிறர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஸ்டெலாவின் வருத்தமும் அழுகையும் எனக்கு அது முற்றிலும் உண்மை என்பதைப் புலப்படுத்தின. அவளுடைய அந்தத் துயரத்தைப் போக்க எனக்கு அப்பொழுது ஒரே ஒரு வழிதான் புலப்பட்டது. உடனே கடைத் தெருவுக்கு ஓடி அதே போன்ற ஒரு மாலையை வாங்கிக் கொண்டு வந்தேன். அது ஸ்டெலாவின் மனப் புண்ணுக்கு மருந்து வைத்துக் கட்டினாற்போலாயிற்று. அப்புறம்தான் அவள் கண்களிலிருந்து ஆறாகப் பெருகிக் கொண்டிருந்த நீர் குறைந்தது. அவள் மனப்புண் குறையக் குறைய என் இருதயத்துக்குச் சாந்தியும்



எப்பொழுதும்
உபயோகியுங்கள்

காஸ்ட்ரால்

பரிசுத்தமான
ஆமணக்கெண்ணெயில்
தயாரித்தது.

நறுமணத்துடன் கூடி
யது. கவர்ச்சிகரமான
பாட்டில்களில் உள்ளது



CASTOROL

A Calchemico
Product

C.C. 4/51-52

மதராஸ் ஆபீஸ் :

5/149, பிராட்வே


ஜி. டி., மதராஸ்

மீண்டும் பாதி விலைக்குக் குறைவான சலுகை !

15 நாட்களுக்கு மட்டும்


புகழ் வாய்ந்த ஸ்விஸ் பாக்டரியில் தயாரித்த
கைக் கெடிகாரங்கள்.

ஒவ்வொன்றும் நூறு வருட
உத்திரவாதம் கொண்டவை.



	ஒரிஜினல் விலை	தற்போது விலை
ஜெர்மன் பாக்கெட் வாட்ச்	24/-	11/-
,, உயர் ரகம்	28/-	13/-
இங்கிலீஷ் அலாரம் டைம்பீஸ்	40/-	19/-


No. 525



Size 6½'''

15 ஜுவல் ரோல்டு கோல்டு	96/-	45/-
15 ஜுவல் 20 மைக்ரோன்ஸ்	100/-	48/-

No. 526



Size 10½'''

15 ஜுவல் ரோல்டு கோல்டு	98/-	48/-
15 ஜுவல் 20 மைக்ரோன்ஸ்	110/-	52/-

No. 527



Size 5¼'''

5 ஜுவல் க்ரோம் கேஸ்	45/-	22/-
5 ஜுவல் ரோல்டு கோல்டு	52/-	25/-

இரண்டு கடிகாரங்கள் ஆர்டர் செய்பவர்களுக்கு
தபால் செலவு இலவசம்.

PIONEER WATCH Co
POST BOX NO 11428 CALCUTTA



"நான் இப்போது குடியிருக்கும் தெரு பிற்காலத்திலே பாடல் பெற்ற ஸ்தலம் ஆகும் போலிருக்கிறது, ஸார்!"

"ஏன், அப்படி சொல்கிறீர்கள்?"

"பக்கத்து வீட்டுக்காரர் ஓயாமல் பாடிக்கொண்டே யிருக்கிறார்!"

இன்பமும் கிட்டின. மூழ்கப் போகும் படகுக்குக் கரை தட்டுப்பட்டு விட்டால், அதில் இருப்போர்க்கு மகிழ்ச்சி உண்டாவது இயல்புதானே? அதே போல என் காதல் படகு காப்பாற்றப் பட்டதை எண்ணி நான் மட்டற்ற மகிழ்ச்சியுற்றேன்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு வழி திறந்து விட்டது. ஸ்டெலா சங்கோசத்தை விட்டு என்னிடம் நேர்த்தி நேர்த்தியான பொருள்கள் எல்லாம் கேட்கத் தொடங்கி விட்டாள். ஆரம்ப காலத்தில் இதை யெல்லாம் கண்டு நான் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தேன். அப்பொழுதெல்லாம், இம்மாதிரிக் கேட்டு வாங்கிக் கொண்டு அவள் என் மீது பேருபகாரம் செய்வதாகவே எனக்குத் தோன்றியது. ஆனால் பிற்காலத்தில் அந்த உபகாரங்களே, அபகாரங்களாக உருத் தரித்து விட்டன.

சகோதரா! அந்தக் காலத்தில் நாங்கள் நாள் முழுவதும் ஒன்றாகவே இருப்போம்; ஒரு கண நேரம்கூட இணைபிரிய மாட்டோம். காலை வேளைகளில் கை கோத்துக் கொண்டு உலாவச் செல்வோம். காலை இளஞ் சூரியனின் கனகக்கிரணங்கள் இயற்கையின் எழில் மிக்க காட்சிகளுடன் இன்பமாக விளையாடுவதைக் கண்டு ரசிப்போம்; புள்ளினங்கள் பாடும் பிரேம கீதத்தைக் கேட்டு இன்புறுவோம். பகல் வேளைகளில் எங்கள் காதலை வளர்த்து வளமுறச் செய்யும் பேச்சுக்களிலே பொழுதைப் போக்குவோம். மாலை வேளைகளில் மஞ்சள் வெய்யில் இருக்கும் பொழுது கடற்கரைக்குச் சென்று காதல் தம்பதிகள் கைகோத்துக் கொண்டு போவதைக் கவனிப்போம். கடல் அலைகள் சுருள் சுருளாக மிதந்து வந்து ஒன்றை ஒன்று தழுவிக் கொள்ளும் காட்சியைக் காணக் காண எங்கள் உள்ளம் தெவிட்டாது. இரவு வேளைகளில் இன்பம் பயப்பதற் கென்றேதான் தியேட்டர்கள் இருக்கின்றனவே! நான் தவறினாலும் தவறலாம்; நாங்கள் தியேட்டர் செல்வது தவறாது. இப்படியாக இன்ப போதையில் மயங்கிய நான் கடை வியாபாரத்தை அறவே மறந்து விட்டேன். சிறுகச் சிறுக, என் கவனம் குறையக் குறைய, கடை வியாபாரமும் மந்தமாயிற்று. ஆனால் அதையெல்லாம் நான் சிறிதும் பொருட்படுத்த வில்லை. மேல் நாட்டு நாகரிக மோகத்தில் மூழ்கி, மனத்தை மகிழ்விப்பதிலேயே பொழுதைப் போக்கி வந்தேன். அதன் பலனாகக் கடைசியில் ஒரு நாள் கடை அடைக்கப் பட்டு 'ஸீலு'ம் வைக்கப் பட்டது. அப்புறம் என்ன? நான் ஒன்றுக்கும் உபயோகமில்லாதவனாக, உதவாக் கரையாக ஆகி விட்டேன். சொத்துச் சுதந்திரம் பறி போன பின் யார் நம்மைச் சீந்துவார்கள்? அச்சமயத்தில் ஸ்டெலாவின் மனம் கூடக் கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருவதாகத் தோன்றியது. 'சேச்சே! ஸ்டெலாவின் மனமாவது, மாறவாவது? இதெல்லாம் உன் வீண் பிரமை. ஸ்டெலா அப்படிப்பட்டவள் இல்லை!' என்று நானே என் மனத்தைத் தேற்றிக் கொண்டேன். இம்மாதிரியாக எண்ணி எண்ணி நான் மண் சுவர் அல்ல; மணல் சுவரைத்தான் எழுப்பியிருந்தேன். மணல் சுவரை எவ்வளவு தூரம்தான் உயர்த்திக் கொண்டு போக முடியும்? ஆனால் இன்ப லாகிரி என்னை இதை யெல்லாம் பற்றிச் சிந்திக்க விட்டால் தானே? (தொடரும்)

"ஐயா, நான் சாப்பிட்டு மூன்று நாளாகிறது. காலணா இருந்தால் போடுங்கள்!" என்று ஒரு பிச்சைக்காரன் தெருவில் போகிறவர் வருகிறவர்களிடம் கேட்டுக் கொண்டிருந்தான்.

ஒரு தர்மப்பிரபு, பிச்சைக்காரனைப் பார்த்து, "சாப்பிட்டு மூன்று நாளாகிறது என்கிறாய். ஆனால் காலணா போட்டால் போதும் என்கிறாயே? பசிக்குக் காலணாச் சாப்பாடு போதுமா?" என்று கேட்டார்.

"ஐயா, நான் சாப்பாடு வாங்கிக்கொள்ளக் காலணா கேட்கவில்லை. மூன்று நாள் பட்டினி கிடந்த பிறகு என் எடை எவ்வளவு இருக்கிறது என்று பார்க்கத்தான் கேட்கிறேன்!" என்றான்.



குடை மனிதன்

நீங்கள் பிரயாணம் செய்யும் போது படத்திலே காணப்படுவது போன்ற மனிதன் ஒருவனைப் பார்த்திருப்பீர்கள். இந்தப்படம் பர்மா-ஷெல் ரிபைனரி ஸ்தலத்தில் எடுத்த ஒரு போட்டோ படத்திலிருந்து எழுதப்பட்டதாகும். இந்த இடத்திலே இப்போது ஸர்வே வேலை நடைபெற்றுவருகிறது. குடை பிடித்துக்கொண்டு நிற்கும் மனிதன் வெய்யிலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளுகிறான் என்றுதான் நீங்கள் நினைப்பீர்கள். இந்த குடை அந்த ஒரு காரியத்திற்குத் தான் பயன்படுகிறது என்று நீங்கள் எண்ணக்கூடும். ஆனால் உண்மை என்ன தெரியுமா? (Theodolites) தியோடலைட்டுகள், மற்றும் இதர ஸர்வே உபகரணங்கள் ஆகியவற்றை உபயோகிப்பவர்களுக்கு, இந்தக் குடை ஸர்வே உபகரணங்களில் அதி முக்யமானதொன்றாகும். ஸர்வேயரை வெய்யில் கடுமையினின்று காப்பாற்றுவதற்காக குடை பிடிக்கவில்லை. ஸர்வேகருவிகளை சூரியக்கிரணங்களினின்றும், உஷ்ணத்தினின்றும் பாதுகாக்கத்தான் உதவுகிறது. அக்கருவிகள் சூடு தாங்காதவை, நிழலில்தான் அவற்றை நான் முழுவதும் இயக்க வேண்டும். வெய்யில் பட்டு அவை கெட்டுப்போவதைத் தவிர்க்கவே குடை பிடிக்கப் படுகிறது.

பர்மா-ஷெல்...

பாரத நாட்டின் வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறது

BURMAH-SHELL ... IN INDIA'S LIFE AND PART OF IT



காளியின் கோபம்

மலையாளக் கதை: டி.கே.சி. வடுதலா

மொழிபெயர்ப்பு: வாஞ்சி

அன்று கிழக்கு வெளுப்பதற்கு முந்தியே மிராசுதார் மாத்துவின் வயலுக்கு ஆட்கள் வந்து விட்டார்கள். அறுவடை காலமானதால் வழக்கம் போல் விடியற்காலத்தில் வேலை ஆரம்பமாகி விட வேண்டும் அல்லவா?

ஆடவர்களும் பெண்களும் வரிசையாக நின்று கொண்டு அறுவடைக்கு ஆயத்தமானார்கள். எல்லாரும் போட்டிப் பந்தயம் ஒன்றில் கலந்து கொள்பவர் போல் மிகவும் உற்சாகமாக இருந்தனர். மிராசுதார் மாத்துவும் வயற் கரையில் நின்று அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

அறுவடை ஆரம்பமாயிற்று. சிறிது நேரம் வரையில் சகல தொழிலாளர்களும் தேர்ச்சி பெற்ற பயில்வான்களைப் போல வரிசை கலையாமல் அரிவாளால் நெற்கதிர்களை அறுத்துக் கொண்டு சென்றனர். அதன் பிறகுதான் அவர்களுடைய வரிசை கலையத் தொடங்கியது.

அது பெரிய வயல் ஆனதால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் தங்க நிறமுள்ள நெற் கதிர்கள் சிரசைச் சாய்ந்து கிடந்தது அற்புதமான காட்சியாக இருந்தது.

சூரிய வெப்பம் அதிகமாக ஆக அரிவாள்கள் அதிவேகமாக வேலை செய்யத் தொடங்கின. அன்று வழக்கம் போல் எல்லாரையும் காட்டிலும் சாத்தானே யாரையும் லட்சியம் செய்யாமல் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தான்.

சாத்தானுக்கு வயது இருபத்தைந்து தான். ஆனால் அவன் வஜ்ரம் போன்ற தேகம் படைத்தவன். ஊக்கத்திலும் உழைப்பிலும் அவனை மிஞ்சுவோர் அந்தக் கிராமத்தில் யாருமில்லை எனலாம். அநுபவசாலிகளான தொழிலாளர்கள் கூடப் பொறாமை காரணமாக, ''அவன் சாத்தான் அல்ல, சைத்தான்'' என்று கூறுவது உண்டு!

அவனது குடும்பம் பரம்பரையாக மிராசுதார் மாத்துவின் பண்ணையிலேயே வேலை செய்து வந்தது. எனவே, மிராசுதார் மாத்து சாத்தான் விஷயத்தில் அன்பும் ஆதரவும் காட்டி வந்தார்.

அன்று மாலை சாத்தான் திரும்பிப் பார்த்த போது மற்றவர்கள் யாவரும் வயலில் தனக்குப் பின் வெகு தூரத்தில் இருப்பதைக் கண்டு அவனுக்கு மகிழ்ச்சி பொங்கியது. ஆனால் மற்றவர்கள் அவனைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தார்கள்.

அவர்கள் சிரிப்பதற்குக் காரணம் என்ன! சாத்தானுக்கு அந்தக் காரணம் புலப்படுவதற்குச் சிறிது நேரம் ஆயிற்று. வயலின் மற்றொரு கோடியில் அவனுக்குச் சரியாக நீலி நின்று கொண்டிருந்தாள். அவனைப் போல் அவளும் அவ்வளவு தூரம் அறுவடை செய்து கொண்டு வந்து விட்டாள்!

இதைக் கண்ட மிராசுதாரும், மற்ற ஆட்கள் கேலியாகச் சிரித்த போது, கூடச் சிரிக்கவே சாத்தானுக்கு அவமானம் தாங்க முடியவில்லை. அதுவும் பதினெட்டு வயதுகூட நிரம்பாத ஒரு பெண் தனக்குச் சரியாக அறுவடை செய்தாள் என்றால் அதைச் சாத்தான் எப்படிச் சகித்துக் கொண்டிருக்க முடியும்!

அவன் நீலியையும் மற்றவர்களையும் சுட்டெரித்து விடுபவன் போல் பார்த்தான். பிறகு தலை குனிந்த வண்ணம் வயலை விட்டு வெளியேறிக் கூலி நெல்லைக்கூடப் பெற்றுக் கொள்ளாமல் வீட்டுக்குச் சென்று விட்டான். நீலி மீது அவனுக்கு அளவிட முடியாத வெறுப்பு ஏற்பட்டது.

அன்றிரவு நீலி சாத்தானையே நினைத்துக் கொண்டிருந்தாள். அவளுக்குத் தூக்கமே வர வில்லை. வயலில் சாத்தானுக்குச் சரியாகத் தன் திறமையைக் காட்டியது பெரும் தவறு என்று அவள் மனம் வருந்தியது.

மறுநாள் காலையில் மிராசுதார் மாத்து, நீலியின் தந்தையை அழைத்து வரும்படி சொன்னார். தகப்பனையும் தாயையும் இழந்த சாத்தானையும் அழைத்து வரச் சொன்னார்.

''சாத்தான், உனக்குத் தகுந்த ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து வைக்க வேண்டுமே என்று நான் பல மாதங்களாகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். நீலிதான் உனக்கு ஏற்ற மனைவி. அடுத்த மாதமே கல்யாணத்தை முடித்து விடப் போகிறேன்'' என்றார்.

நீலியின் தந்தைக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. சாத்தானோ தலையைக் குனிந்த வண்ணம் பேசாமல் நின்றான். மிராசுதாரின் கட்டளையை மீறும் துணிச்சல் அவனுக்கு ஏது!

சாத்தானுக்கு எப்போதுமே நீலிமீது ஒரு கண் உண்டு! அதனால்தான் முதல் நாள் தனக்குச் சமமாக வயலில் வேலைசெய்த நீலிமீது அவனுக்கு வெறுப்பு ஏற்பட்டது. ஆனால் மிராசுதார் கூறி

யதைக் கேட்டதும் அவனுக்கு நீலிமீது ஏற்பட்டிருந்த வெறுப்பெல்லாம் அன்பாக மாறிவிட்டது. கரும்பு தின்னக் கூலியா என்றது அவன் மனம்!

சாத்தான்—நீலி திருமணத்தை மிராசுதார் மாத்துவே பெரும் தொகை செலவழித்து மிகவும் விமரிசையாக நடத்தி வைத்தார். அதைக் கண்டு மற்றத்தொழிலாளர்கள் பொறாமை கொண்டனர். மிராசுதாரின் சொந்தக்காரர்கள் கூட, "ஏதோ உங்களுடைய பிள்ளையின் கல்யாணத்துக்குச் செலவழிப்பதைப் போலச் சாத்தானின் கல்யாணத்துக்குச் செலவழிக்கிறீர்களே!" என்று அவரைப் பரிகாசம் செய்தார்கள்.

ஆனால் அவர்களுக்கு மிராசுதார் மாத்து அளித்த பதில் இதுதான்:

"சாத்தான் குடும்பத்தினர் தலைமுறை தலைமுறையாக நமது குடும்பத்தில் வேலை செய்து வருகிறார்கள். நமது வயல்களுக்கு எருவும் தண்ணீரும் எவ்வளவு அத்தியாவசியமோ அது போல் சாத்தானின் உழைப்பும் அத்தியாவசியம். சிறுவயதில் தகப்பனையும் தாயையும் இழந்த சாத்தானின் கல்யாணத்துக்கு நான் செலவழிக்கா விட்டால் பிறகு நான் ஆண்டவனின் தண்டனைக்கு ஆளாக நேரும்" என்று சொல்லி விட்டார்.

இவ்விதம் மிராசுதார் மாத்து கூறிய போது அவரது கண்கள் கலங்கின.

சாத்தானுக்கு அவனது பரம்பரை வழக்கத்தை அனுசரித்து மிராசுதார் மீது ஏற்கெனவே இருந்த பக்தியும் விசுவாசமும் கல்யாணத்துக்குப் பிறகு பன்மடங்கு அதிகமாயின.

* * *

காதல் என்றால் என்ன! ஊடல் என்றால் என்ன! இதை யெல்லாம் சாத்தானோ நீலியோ சிறிதும் அறியார்கள்.

எனினும் அவ்விருவருடைய வாழ்க்கையும் பட்டணங்களில் உள்ள நாகரிக மனிதர்களின் வாழ்க்கையைக் காட்டிலும் அன்னியோன்னியமாகவும் ஆனந்தமாகவும் நடந்து வந்தது. உருவும் நிழலும் போல, பாலும் நீரும் போல அவர்கள் ஒருமித்துச் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள்.

நீலி சாத்தானையும் சாத்தான் நீலியையும் பார்த்துப் பார்த்துப் பரவசம் அடைந்தனர்.

அவர்களுடைய பரஸ்பர அன்பும் ஆனந்தமும் உருவெடுத்து வந்தது போலவே அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. சாத்தான் அதற்குக் காளி என்று பெயர் வைத்தான். சாத்தானின் தாயாருடைய பெயர் காளி அல்லவா!

அந்தக் குழந்தைக்குப் பரிசாக மிராசுதார் மாத்து ஒரு பட்டுச் சட்டை வாங்கிகொடுத்த போது சாத்தானுக்கும் நீலிக்கும் உண்டான மகிழ்ச்சியைஅளவிட்டுச் சொல்ல முடியாது.

"சாத்தான், இதென்னடா! இந்தக் காளி வயல் வேலையில் இப்போதே உங்கள் இருவரையும் தோற்கடித்து விடுவாள் போலிருக்கிறதே!" என்று மிராசுதார் மாத்து கூறியதைச் சாத்தானும் நீலியும் எல்லோரிடத்திலும் சொல்லிச் சொல்லி ஆனந்தப் பட்டனர்.

சந்தோஷக் கடலில் சென்று கொண்டிருந்த அவர்களுடைய வாழ்க்கைப் படகு திடீரென நொறுங்கிவிடப் போகிறது என்று அவர்கள் சிறிதும் எதிர்பார்க்கவே இல்லை.

மிராசுதார் மாத்து திடீரென்று மாரடைப்பால் மாண்டார். மத்தியானம் சாப்பிட்டு விட்டுச் சாய்மான நாற்காலியில் படுத்துக் கொண்டவர், பிறகு எழுந்திருக்கவே இல்லை.

சாத்தானுக்குத் தன் ஹிருதயம் வெடித்து விட்டது போல் தோன்றியது. அவன் சிறு குழந்தையைப் போல் விம்மி விம்மி அழுதான். நீலியும் 'கோ' வென்று கதறினாள். அதற்குப் பிறகும் சாத்தானும் நீலியும் வெகுகாலம்வரையில் தங்கள் எஜமானர் மாத்துவின் நற்குணங்களை எண்ணி எண்ணிக் கண்ணீர் விடாத நாள் கிடையாது.




மாத்துவின மரணத்துக்குப் பிறகு அவரது புதல்வனும் இளைஞனுமான வர்க்கி வயல்களின் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டான். அவன் உயர்ந்த குணம் படைத்த தன் தந்தைக்கு நேர் மாறானவன். எனவே, அவனை அந்த ஊரில் உள்ள எல்லோரும் வெறுத்தனர்.

பிராகதார் மாத்துவும் அவரது முன்னோர்களும் தங்களுடைய பண்ணை ஆட்களுக்கு உதவி புரிவதிலே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். ஆனால் வர்க்கியோ தன் ஆட்களுக்குத் துன்பம் விளைவிப்பதையே தன்னுடைய கடமையாகக் கொண்டிருந்தான்! உடல் உருக உழைக்கும் வேலையாட்களின் சம்பளத்தைக் குறைத்து அவர்களுடைய வயிற்றில் அடிக்க முற்பட்டான். ஏழைக் குடும்பங்களைத் தன் நிலங்களில் உள்ள குடிசைகளிலிருந்து விரட்டவும் ஆரம்பித்தான்.

* * *

அறுவடை முடிந்து களத்தில் நெல்லும் அடித்துக் குவித்து விட்டார்கள். களத்தின் நாற்புறத்திலும் சிந்திக்கிடக்கும் நெல்லைக் குறிப்பிட்ட பண்ணையாள் பொறுக்கி எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது தலைமுறை தலைமுறையாக அனுஷ்டிக்கப்பட்டு வரும் சம்பிரதாயமாகும். அதை அனுசரித்து, நீலி சிதறிக் கிடந்த நெல்லைப் பொறுக்கித் தன் கூடையில் எடுத்துக் கொண்டாள்.

பிறகு அவ்விருவரும் வர்க்கிக்கு அருகில் வந்து தயக்கத்துடன் நின்றனர். சாத்தான் மெதுவாக ஏதோ சொன்னான்.

"என்ன சொல்லுகிறாய்!" என்று அதட்டினான் வர்க்கி.

"அறுவடை முடிந்து இன்று கடைசி நாள்!" என்று சொன்னான் சாத்தான் நடுங்கிக்கொண்டே.

"அதற்கு என்ன!"

"கடைசி நாள் அன்று எனக்கு ஏதாவது கொடுப்பது வழக்கம்" என்றான் பணிவுடன்.

"நீ தினந்தோறும் கூலி வாங்கிக் கொள்கிறாய். அதற்குமேல் கொடுப்பதற்கு என்ன இருக்கிறது!"

"பெரிய எஜமான் இருந்த போது ஏதாவது கொடுப்பது உண்டு."

"அந்தக் காலம் எல்லாம் மலையேறி விட்டது. பேசாமல் போ!" என்று சொன்ன வர்க்கி, சிறிது தூரத்தில் வைக்கப்பட்டிருந்த நீலியின் கூடையைத் தற்செயலாகப் பார்த்தான்.

"அந்தக் கூடையில் இருக்கும் நெல் ஏது!" என்று கேட்டான்.

"களத்தில் சிந்திக் கிடந்த நெல்லை வழக்கம்போல் நீலி சேகரித்து வைத்திருக்கிறாள்" என்றான் சாத்தான்.

"இனி நீங்கள் கூலிக்கு மேல் ஒரு மணி நெல்லைக்கூடத் தொடக்கூடாது, தெரியுமா!" என்று வர்க்கி ஆத்திரத்துடன் உரக்கக் கத்தினான். நீலியின் கூடையை எடுத்து அதிலிருந்த நெல்லைக் களத்தில் குவிக்கப்பட்டிருந்த நெல்லுடன் கொட்டி விட்டான்.

காலஞ்சென்ற பெரிய பிராகதாரின் நற்குணங்களையும் அவரது புதல்வனின் துர்க்குணங்களையும் எண்ணி எண்ணிச் சாத்தானும் நீலியும் கண்ணீர் விட்டுக்கொண்டே வீட்டுக்குச் சென்றனர்.

இரவு பகல் என்று பாராமல் உழைத்து வந்த சாத்தானுக்கு வர்க்கியின் இரக்கமற்ற வார்த்தைகள் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது போல் இருந்தன. அவன் தன் குழந்தை காளியைக்கூடக் கொஞ்சுவதற்கு நேரமின்றி வர்க்கியின் குடும்பத்துக்காக உழைத்து வந்தான். கடைசியில் களத்தில் சிதறிக் கிடக்கும் நெல்லைப் பொறுக்குவதற்குக்கூட அவனுக்கு உரிமையில்லை! இதை நினைத்தபோது அவனுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது. அவனால் வெகுநேரம் பேசவே முடியவில்லை.

ஒரு நாள் பெருமழையைக் கூட லட்சியம் செய்யாமல் வயலுக்குச் சென்று வேலை செய்து



விட்டு வந்த சாத்தானுக்குக் குளிர் ஜுரம் ஏற்பட்டது. நீலி பதைபதைத்துப் போனாள். தன் வாழ்க்கையின் ஊன்றுகோலாக விளங்கும் சாத்தானுக்கு எவ்வித ஆபத்தும் நேரக்கூடாது என்று தெய்வத்தைப் பிரார்த்தித்தாள். ஆனால் அவளது பிரார்த்தனை கடவுளின் காதில் விழுவதற்கு முன்பே சாத்தான் கண்ணை மூடிவிட்டான்.

காளியைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இராவிட்டால் நீலியும் சாத்தானுடன் உயிரை விட்டிருப்பாள். சாத்தானைப்போல் காளியும் இளம் வயதில் தாய் தந்தையை இழந்து நிர்க்கதியாகிவிடக் கூடாது என்ற எண்ணமே நீலிக்கு மகத்தான மேற்படி துக்கத்தைச் சகித்துக் கொள்ளும் சக்தியைக் கொடுத்தது.

* * *

நடு நிசி இருக்கும். காளி, "அம்மா!" என்று மெதுவாகக் கூப்பிட்டான்.

நீலி பதறிப் போய்விட்டாள். "ஏன் அம்மா! ஏன் நீ இன்னும் தூங்கவில்லை! உன் உடம்புக்கு என்ன!" என்று பரபரப்புடன் கேட்டான்.

சாத்தான் இறந்ததிலிருந்து நீலி துரும்பாக இளைத்து விட்டாள். நாற்பது வயதான அவள் அறுபது வயதான கிழவியைப் போல் தோன்றினாள். காளிக்காகவே அவள் தன் உயிரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தாள்! சாத்தானின் வஜ்ரம்போன்ற தேகக் கட்டும் நீலியின் அழகும் காளியிடம் பொருந்தியிருந்தன.

"ஏன் என்னைக் கூப்பிட்டாய்!" என்று கேட்டாள் நீலி.

"உன்னிடம் பல நாட்களாக ஒரு விஷயம் சொல்ல நினைத்துக் கொண்டிருக்கிறேன்."

"என்ன விஷயம்! தாராளமாகச் சொல்லு. என்னிடம் சொல்லுவதற்கு நீ ஏன் தயங்க வேண்டும்!"

காதல், கல்யாணம் என்று ஏதாவது சொல்லப் போகிறானோ என்று நீலி எண்ணினாள்.

"வர்க்கி இருக்கிறான் அல்லவா!" என்று ஆரம்பித்தான் காளி.

"ஐயோ! அப்படிச் சொல்லாதே. சின்ன எஜமான் என்று சொல்லு" என்றாள் நீலி.

"சில நாட்களாக அவன் என்னைச் சுற்றிக் கொண்டு திரிகிறான்."



"உண்மையாகவா! என்னால் நம்ப முடியவில்லையே!" என்றாள் நீலி.

"பல நாட்களாக அவன் என்னை ஹிம்சித்து வந்தான். நான் உடன்பட மறுத்து விட்டேன். நேற்று மாலை நான் வீட்டுக்குத் திரும்பி வந்த போது மாந்தோப்பில் ஒளிந்து கொண்டிருந்த அவன் என் அருகில் வந்து என் கையைப் பிடித்தான். உடனே ஆத்திரத்துடன் என் அரிவாளை ஓங்கினேன். அவன் பயந்துபோய் என் கையை விட்டு விட்டு ஓடிவிட்டான்."

"என்ன காரியம் செய்து விட்டாய்! நமது குடும்பத்துக்கு இன்னும் என்ன ஆபத்து நேரப் போகிறதோ! சின்ன எஜமான் நம்மை இந்த ஊரிலிருந்தே விரட்டிவிடப் போகிறார்" என்று நீலி புலம்பத் தொடங்கினாள்.

அதே சமயம் அவர்களுடைய குடிசைக்கு அருகில் ஏதோ பேச்சுக் குரல் கேட்கவே நீலியும் காளியும் மெதுவாக எழுந்து வெளியே வந்தார்கள் அப்போது குடிசையிலிருந்து பத்து கெஜத்துக்கு அப்பால் இருவர் இரகசியமாக ஏதோ பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தனர்.

அதைக் கண்டு காளி சிறிதும் கலங்கவில்லை. சாத்தானின் மகள் பேயைக் கண்டு கூடப் பயப்பட மாட்டாள் என்பதுதான் அந்த ஊராருக்குத் தெரிந்த விஷயமாயிற்றே!

காளி மறுபடியும் குடிசைக்குள் சென்று நீண்ட அரிவாளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். பிறகு நேராக அந்த மனிதர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்துக்குச் சென்றாள்.

இருவரில் ஒருவர் அந்த ஊரில் வர்க்கிக்கு ஜன்ம விரோதியான மற்றொரு பிராகுதார் என்பதைத் தெரிந்து கொண்டாள்.

நீலியையும் காளியையும் கண்டுங்கூட அவர் சிறிதும் பரபரப்பின்றி, "நீலி! காளி! நீங்கள் இருவரும் வந்தது நல்லதுதான். உங்கள் சின்ன எஜமானர்தான் உங்களை இந்த ஊரிலிருந்தே விரட்டப் போகிறாரே! ஆகையால் நீங்களும் எங்களுக்கு உதவி செய்வீர்கள் என்று நினைக்கிறேன்" என்றார்.

பணக்காரரான ஒரு பெரிய பிராகுதார் ஏழைகளான தங்களுடைய உதவியைக் கோருவதன் மர்மம் என்ன என்பதை நீலியினால் அறிந்து கொள்ள முடியவில்லை. எனவே, அவள் வாயடைத்துப் போய்ப் பேசாமல் நின்றாள்.

"விஷயத்தை விவரமாகச் சொல்லுங்கள்" என்றாள் காளி. அரிவாளைக் கையில் வைத்துக் கொண்டு நிர்ப்பயமாகவும் ஒய்யாரமாகவும் நிற்பதைக் கண்டு பெரிய பிராகுதாரின் ஹிருதயம் கூடப் பயத்தினால் படபட வென்று அடித்துக் கொண்டது!

"வர்க்கி உங்கள் குடும்பத்தை என்ன பாடு படுத்திவருகிறான்! உன்னையும் வர்க்கியையும் பற்றிக்கூட ஊரார் பல விதமாகப் பேசிக் கொள்கிறார்களே, தெரியுமா! ஆகையால் வர்க்கியின் கொட்டத்தை அடக்குவதற்காக என் ஆளுடன் வந்திருக்கிறேன். இன்று கடைசி நாள் அறுவடையானதால் களத்தில் ஏராளமாக நெல்பட்டறைகளும் வைக்கோல் போர்களும் இருக்கின்றன. அவற்றுக்குத் தீவைக்கப்போகிறோம்" என்றார் பெரிய பிராகுதார்.

லிப்டன்ஸ்

ஹிமாலயன் கோல்டன்

டஸ்ட் டீ





'சிறந்த
தங்க
நிற
பானம்'

Nimmi

அம்மாவின் குணம் !

மாலை ஐந்து மணி யிருக்கும். ஜகந்நாதன் காரியாலயத்திலிருந்து நேராக வீட்டுக்கு வந்து சேர்ந்தார். அவர் வந்ததும் வராததுமாக அவருடைய பெண் ஓடிவந்து, "அப்பா! மத்தியானம் ஒரு மணிக்கு அம்மா அடுத்த வீட்டுக்குப் போனாள். இன்னும் வரவில்லை. எனக்கு டிபன் கூடப் பண்ணித் தரவில்லை" என்று கண்ணைக் கசக்கிக் கொண்டே கூறினாள்.

"உன் அம்மா இன்று பூராவும் அடுத்த வீட்டிலேயேதான் இருப்பாள் என்று எனக்குத் தெரியும்" என்று சாவதானமாகப் பதிலளித்தார் ஜகந்நாதன்.

"எப்படி அப்பா தெரியும்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் அவள்.

"எனக்கு இதுகூடத் தெரியாதா, என்ன? நேற்று ராத்திரி ஒரு பட்டுப் புடவை வாங்கிக் கொடுத்தேனல்லவா?......" என்று ஜகந்நாதன் கூறிக் கொண்டிருக்கும்போதே அவர் பெண் குறுக்கிட்டு, "ஆமாம், அப்பா! அம்மா அடுத்த வீட்டு மாமியுடன் தன் புடவையைப் பற்றித்தான் பெருமை யடித்துக் கொண்டிருக்கிறாள்......நீங்கள் எப்படி அப்பா கண்டு பிடித்தீர்கள்?" என்று கேட்டு விட்டுத் திகைப்புடன் அவரைப் பார்த்தாள்.

"பெண்களின் சுபாவம் எனக்குத் தெரியாதா? நீயும் பெரியவளாகி விட்டால் உன் அம்மாவின் குணம் உனக்கும் படிந்துவிடும்" என்றார் அவர் சிரித்துக்கொண்டே. —பீ. என்.

"ஐயா! நாக்கை அடக்கிப் பேசுங்கள். பேசாமல் வந்த வழியே திரும்பிவிடுங்கள். களத்தின் பக்கம் காலடிவைத்தால் உங்கள் இரண்டு பேரையும் வெட்டிப் போடுவேன்" என்று அரிவாளை ஒரு சுழற்றுச் சுழற்றினான் காளி.

அவ்வளவுதான்! பெரிய மிராசுதாருடன்கூட வந்த ஆள் தன் கன்னத்தை மெதுவாகத் தடவிக் கொண்டான். பல வருஷங்களுக்கு முன் ஒரு தடவை சாத்தான் அவன் கன்னத்தில் பேய் அறைவது போல் அறைந்ததை அவன் இன்னும் மறக்கவில்லை. சாத்தானின் மகளிடம் விளையாடுவது ஆபத்தாக முடியும் என்று அவனுக்குத் தோன்றியது. அந்தக் காலத்தில் சிறு பெண்களைக் கண்டால் கேலியாகப் பேசும் சில இளைஞர்கள் கூட நீலியிடம் வம்புக்குப் போக மாட்டார்கள் என்பதையும் அவன் ஞாபகப்படுத்திக் கொண்டான்.

இந்த விஷயமெல்லாம் பெரிய மிராசுதாருக்கு எப்படித் தெரியும்!

"உன்னை லட்சியம் செய்து உன்னுடன் நான் பேசியதே தவறு. அற்ப நாய்களுக்குக் கௌரவம் கொடுத்தால் அதை வகிக்கத் தெரியுமா?" என்று சொல்லி விட்டு மிராசுதார் 'விடு விடு' என்று களத்தை நோக்கிப் புறப்பட்டார்.

"என் தேகத்தில் உயிர் இருக்கும் வரையில் நீங்கள் களத்துக்கு அருகில் கூடச் செல்ல முடியாது" என்று கூறிய காளி, காளி தேவியாகவே மாறி விட்டாள்! அடுத்த கணம் அரிவாளை வீசிய வண்ணம் மிராசுதாரின் மீது பாய்ந்தாள்.

"ஐயோ, காளி! நம் குடி கெட்டு விட்டது" என்று நீலி அலறினாள்.

அதே சமயம் தோப்பில் ஒளிந்து கொண்டிருந்த மிராசுதார் வர்க்கியும் அவனது ஆட்கள் இருவரும் ஓடி வந்தனர்.

"நீலி! நீ சிறிதும் பயப்படாதே! இனிமேல் காளி என் பண்ணையாட்களில் ஒருத்தி அல்ல. அவள் என் தங்கை. நீங்கள் தூங்கிக் கொண்டிருக்கும் போது உங்கள் குடிசையைக் கொளுத்தி விட வேண்டும் என்று எண்ணி வந்த என் வெறி தணிந்து விட்டது. இப்போது நான் கண்ட காட்சி என் கண்களைத் திறந்து விட்டது. உங்களுடைய நன்றிக்கும் என் நன்றி கெட்ட தனத்துக்கும் எவ்வளவு தூரம்! உனக்கு என் தந்தை தகுந்த கணவனைக் கல்யாணம் செய்து வைத்தார் அல்லவா! அதுபோல் காளிக்குத் தகுந்த புருஷனைப் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கவேண்டியது என் கடமை. களத்தில் கிடக்கும் நெல்லில் பாதியை விற்று, கிடைக்கும் பணத்தை உங்கள் குடும்பத்துக்கே இனாமாகக் கொடுக்கப் போகிறேன்" என்றான் வர்க்கி உணர்ச்சி பொங்க.

"சின்ன எஜமான்! எங்கள் உழைப்பு வீண் போகவில்லை. நீங்கள் க்ஷேமமாக இருக்க வேண்டும். பெரிய எஜமானின் தங்கமான குணம் உங்களை விட்டு எப்படிப் போகும்!" என்றாள் நீலி.

சாத்தான் இறந்த பிறகு அன்றுதான் முதன் முதலாக நீலியின் மனத்தில் மகிழ்ச்சி பொங்கியது.

காளியோ 'இது என்ன கனவா, அல்லது உண்மையா!' என்று கேட்பவள் போலப் பிரமித்துப் போய்ப் பேசாமல் நின்றாள்!

திருச்சூர் "லோகப்பிரகாசம்" ஆசிரியர் ஸ்ரீ டி. எஸ். வைத்தீஸ்வரய்யர் அவர்களது குமாரர், மெஸர்ஸ். கமானி பிரதர்ஸ் விளம்பர இலாகாவைச் சேர்ந்த சிரஞ்சீவி டி. வி. பரமேஸ்வரனுக்கும், கும்பகோணம் சப்ரிஜிஸ்திரார் ஸ்ரீ டி. ஆர். கிருஷ்ணமூர்த்தி, பி. ஏ. அவர்களது குமாரத்தி சௌபாக்கியவதி சாவித்திரிக்கும் சென்ற 20-4-1952 ஞாயிறு அன்று கும்பகோணத்தில் விவாகம் சிறப்பாக நடந்தேறியது. மணமக்களுக்கு அநேக வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன. வாழ்க பரமேஸ்வரன் - சாவித்திரி!







பியர்ஸ் டால்கம் பௌடர் உபயோகியுங்கள்
முகத்திற்கு — இளம் சிவப்பு நிறம், மிருதுவானது, மிக நேர்த்தியான
உடலுக்கு — வியர்வையை உறிஞ்சுகிறது, ஆறுதலளிக்கிறது,
புத்துணர்ச்சியைத்தருகிறது
குழந்தைக்கு — போரிக் பௌடர் சேர்ந்தது, சருமத்தில் புண், எரிச்சல்
ஏற்படாமல் தடுக்கிறது
பியர்ஸ்
டால்கம்
பௌடர்
ஒன்றில் 3 பௌடர்கள் சேர்ந்தது
மகிழ்ச்சிதரும் நறுமணம் கொண்டது
பியர்ஸ்
அழகுதரும்
அசல் கிளிசரின் சேர்ந்த சோப்
PEARS
TALCUM
POWDER
PTP. 5-50 TM

குல தெய்வம்

அம்பு

நிர்மலமான வான வெளியில் வெள்ளித் தகடு போல் பூரண சந்திரன் மிதந்து கொண்டிருந்தான். நாகம்மாள் தன் வீட்டுக் குடிசையின் பின்புறம் திண்ணையில் தலைப்பை உதறிப் போட்டுக் கொண்டு படுத்திருந்தாள். அவள் தம்பி தங்கைகள் அவளுக்கு அருகில் படுத்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர். நாகம்மாளின் மனோவேதனையில் அவர்கள் பேசுவது சந்தைக் கூச்சலாக அவள் காதைத் துளைத்தது. வழக்கமாக நிலா காயும் நாட்களில் அவளும் தம்பி தங்கைகளுடன் சேர்ந்து கொட்டமடிப்பாள். அவர்களுக்குச் சின்னச் சின்ன கதைகள் சொல்வாள்; தெரிந்த பாட்டுக்களைப் பாடிக் காண்பிப்பாள். ஆனால் இன்று அவளுக்கு எல்லாமே மிகுந்த வேதனையை அளித்து வந்தது.

சாமிநாதனின் சிநேகம் ஏற்பட்டதிலிருந்து நிலா நாட்கள் அவள் உள்ளத்தை—உடலை வாட்டும் நாட்களாகி விட்டன. அந்தச் சாமிநாதன் பொல்லாதவன்! நாகம்மாள் துள்ளி ஓடும் மான் கன்று போல் எவ்வித கவலையும் ஏக்கமுமில்லாமல் இருந்து வந்தாள். இன்று சாமிநாதன் இல்லாமல் வாழ முடியாத பெண்ணாகி விட்டாள். நிலவு நாட்களில் மாந்தோப்பு; குளத்தங்கரை ஆகிய இடங்களில் நாகம்மாளும் சாமிநாதனும் சந்திப்பார்கள். அப்படிச் சந்திப்பதற்கு எவ்வளவு சாக்குப் போக்குச் சொல்லிவிட்டு வெளியே வரவேண்டும்! பெற்றோர்களின் கண்டிப்புக்குப் பயந்து அநேக தினங்கள் நாகம்மாளால் வீட்டை விட்டு வர முடியாது. அவள் வரவை எதிர்பார்த்துக் குளத்தங்கரையில் காத்துக் கொண்டிருப்பான் சாமிநாதன். நாகம்மாள் துடிப்புடன் வீட்டிலேயே தவித்துக் கொண்டிருப்பாள். வானத்தைப் பார்த்தவாறு உட்கார்ந்திருக்கும் சாமிநாதன் நாகம்மாளின் வரவை எதிர்பார்த்து ஏமாந்து வீட்டுக்குத் திரும்புவான்.

* * *

இரு எதிரிகளின் மக்களாகிய அவர்கள் எல்லாக் காதலர்களையும் போல் தங்கள் காதலை மறைமுகமாக வளர்த்தார்கள். பெற்றோர்களுக்குத் தெரியாது பல இடங்களில் சந்தித்துப் பேசினார்கள். இரு குடும்பத்துக்கும் வெட்டுப் பழியும் குத்துப் பழியுமாக இருக்கும்போது எப்படிக் கல்யாணம் செய்து கொள்வது! பெரியவர்கள் சம்மதிப்பார்களா என்று இருவரும் தவித்துக் கொண்டிருந்தனர். ஏதோ ஓர் அற்ப விஷயத்தில் சண்டை ஆரம்பித்து அனர்த்தத்தில் முடிந்து இரு வீட்டாருக்கும் முகாலோபனம் இல்லாமல் ஆகிவிட்டது.

சிறு வயதில் நாகம்மாள், அப்பா—அம்மா சொல்படி சாமிநாதன் வீட்டுக்குப் போகாமலும் அவர்களுடன் பேசாமலும்தான் இருந்து வந்தாள். இருந்தாலும் அவளுக்குச் சாமிநாதனுடன் விளையாட முடியவில்லையே என்ற ஏக்கம் இருந்து கொண்டுதான் இருந்தது. நாளடைவில் அந்த நினைவும் மறந்து விட்டது.

காலையிலும் மாலையிலும் தண்ணீர் எடுத்துக் கொண்டு வருவதற்காகத் தோட்டத்து வழியே குளத்துக்குச் சென்று வருவாள் நாகம்மாள். இப்படி அவள் போய் வந்து கொண்டிருக்கும் பொழுதுதான் எதிர் பாராமல் ஒருநாள் சாமிநாதன் கண்ணில் பட்டாள். அவள் பருவமடைந்த பெண்ணான பிறகு சாமிநாதன் முதன் முதலாக இப்பொழுதுதான் அவளைப் பார்த்தான். அடாடா! அவளிடம் தான் என்ன கவர்ச்சி! எப்படி வளர்ந்து விட்டாள்! பழைய அழுக்கு நாகம்மாளா! சாமிநாதன் நாகம்மாளைப் போல் தன் மனத்தை அவளிடம் பறிகொடுத்துச் சொக்கி நின்றான். அவன் தன்னையே பார்த்துக் கொண்டு நிற்பதைக் கடைக் கண்ணால் பார்த்த நாகம்மாள் மிகுந்த மகிழ்ச்சியோடு வீடு சென்றாள்.

அன்று முதல் சாமிநாதன் குளக் கரையில் குறிப்பிட்ட நேரத்துக்கு வருவதும் நாகம்மாள் தண்ணீர் எடுக்க வருவது போல் வந்து சாமிநாதனுக்குத் தரிசனம் கொடுப்பதுமாக அவர்கள் காதல் நாடகம் ஆரம்பமாயிற்று. பிறகு இருவரும் ஒருவர் மனத்தை ஒருவர் அறிந்து கொண்டனர். சின்னக் குழந்தையிலிருந்து பேசாதிருந்த அவர்களைப் பருவம் பிணைத்து விட்டது.

இருவரும் தனியே சந்தித்துக் காதல் மொழிகள் பேசி இன்புற்றனர். நாகம்மாள் எப்படியாவது தன் பெற்றோர்களைச் சரிப்படுத்திச் சாமிநாதனைத் தான் மணந்து கொள்வது என்று தீர்மானித்தாள். அதே போல் சாமிநாதனும் நினைத்தான். ஆனால்,



"சென்ற வாரம் என் கையில் இருந்த வலிக்காக நீங்கள் பிளாஸ்திரி போடச் சொன்னீர்களல்லவா?"

"ஆமாம், அதை நீங்கள் உபயோகப் படுத்தினீர்களா? வலி போய் விட்டதா?"

"வலி போய் விட்டது. ஆனால் அந்தப் பிளாஸ்திரிதான் போகமாட்டேன் என்கிறது. அதற்கு ஏதாவது கொடுங்கள்!"



ஒருவர் (ஹோட்டலில் தூங்கிக் கொண்டிருப்பவரிடம்) :— சார், சார், எழுந்திருங்கள்! ஹோட்டல் தீப்பிடித்துக் கொண்டு விட்டது......!

தூங்குபவர் :—அடே! பெரிசா செய்தி சொல்ல வந்துவிட்டான். போ ஐயா! நான் காலையில் பத்திரிகையைப் பார்த்துத் தெரிந்து கொள்கிறேன்.

இந்தத் தீர்மானம் காரியத்தில் நிறைவேற மிகவும் சிரமப் பட்டது. ஆமாம் அது வழக்கம்தானே!

இவர்கள் காதலை ஜாடைமாடையாக அறிந்து கொண்ட இருவருடைய பெற்றோர்களும் தங்கள் பிள்ளையையும் பெண்ணையும் கண்டித்து வைத்தனர். நாகம்மாளின் தாயும் தகப்பனும் ஒருபடி முன்னேறிச் சென்றனர். அவளுக்குச் சீக்கிரம் ஒரு கலியாணத்தைச்செய்து வைத்து விட்டால் இந்தத் தொந்தரவு நீங்கிவிடும் என்று நினைத்தனர். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்யத் தொடங்கினர்.

நாகம்மாள் இதைப் பார்த்துத் துடித்தாள். தன் தாயிடம் தன் உள்ளக் கிடக்கையைத் தெரிவித்துக் கதறினாள். அவள் நாகம்மாளின் உண்மைக் காதலை உணராது கண்டித்தாள்.

அன்று சாயங்காலமே தன் கணவரிடம் இதற்கு ஒரு முடிவு காணத் தீர்மானித்து விட்டாள் நாகம்மாளின் தாயார். "இன்னும் நாளை ஒத்திப் போட்டுகிட்டே போகக் கூடாது! 'சீக்கிரம் முடித்து விடணும்!" என்று கூறினாள்.

"நான் இனிமேல் தாமதிப்பேனா! அந்தச் சாமிநான் என் மகளைக் கண்ணெடுத்தும் பார்க்கலாமா! போக்கிரிப் பயல் என் மகளைப் பொடி போட்டல்லவா மயக்கி விட்டான்!" என்று தகப்பன் கத்தினான்.

நாகம்மாள் இந்தச் சர்பாஷணைகளைக் கேட்டு என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தாள். படுத்தபடியே கண்ணீர் விட்டாள். தன் மனத்திற்கு விருப்பமில்லாத ஒருவனை எப்படி மணப்பது என்று அவளுக்குப் புரியவில்லை. தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தாள்.

நாகம்மாளின் தந்தையின் பெற்ற 'மனம் நாகம்மாளின் காதலுக்கு விரோதமாக அவளை வேறு ஒருவனுக்கு மணம் செய்து கொடுப்பதை எதிர்த்தது. அவனுடைய உதட்டுப் பிடிவாதம் 'சீச்சீ! நாகம்மாளைச் சாமிநாதனுக்குக் கொடுப்பதா! ஒருகாலும் கூடாது' என்று கூறியது. அவன் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்து அப்படியே கண் அயர்ந்து விட்டான்.

2

யாரோ "நாகம்மா! நாகம்மா!" என்று மெதுவாகக் கூப்பிடுவது போலிருந்தது.

தூக்கமின்றிப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்த நாகம்மாள் திடுக்கிட்டு எழுந்தாள். பூனை போல் மெதுவாக நடந்து வெளியில் சென்றாள்.

தூரத்தில் யாரோ நிற்பதைப் பார்த்துச் சற்றுத் தயங்கினாள். அது யார்! யோசித்தவாறு அங்கிருந்த சுவருக்குப் பின்னால் ஒரு கணம் மறைவாக நின்றாள். அந்த உருவம் நெருங்கி நெருங்கி வந்தது. அருகில் வந்ததும் யார் என்று நாகம்மாள் அறிந்து கொண்டாள். சாமிநாதன் தான் தன்னைக் கூப்பிட்டிருக்கிறான். சுவர் மறைவிலிருந்து வேகமாக நாகம்மாள் அவனை நோக்கிச் சென்றாள்.

"நாகம்மா! நான் கூப்பிட்டது உன் காதில் விழுந்ததா!" என்று கேட்டான்.

"விழாமல் என்ன அத்தான்! இத்தனை நேரம் உங்களை நினைத்துத் தானே அழுது கொண்டிருந்தேன்...!" என்றாள்.

சாமிநாதன் அவளை அன்போடு அணைத்துக் கொண்டு நடந்தான். நாகம்மாள் வாய் பேசாமல் சென்று கொண்டிருந்தாள். குளத்தங்கரைக்குச் சென்று அங்கிருந்த அரச மரத்தின் வேரின் மீது இருவரும் அமர்ந்தனர்.

தனக்குக் கலியாணம் நிச்சயம் செய்யப் போவதைப் பற்றித் தாங்கொணாத் துயரத்துடன் நாகம்மாள் கூறினாள். "உடனே நிச்சயம் செய்து விடுவார்கள் போலிருக்கிறது! இதற்கு நான் என்ன செய்வேன், அத்தான்!" என்றாள்.

"அவர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதை அறிந்துதான் நான் இன்று இங்கு வந்தேன். நாகம்மா! என் உயிருக்கு உயிரான உன்னை என்னிடமிருந்து அவர்களால் பிரிக்க முடியுமா! நீ இல்லாமல் வாழ்க்கை நடத்துவது எப்படி! நம் பெற்றோர்கள் நம் இஷ்டத்துக்குச் சம்மதிக்க மாட்டார்கள். அவர்கள் நம்மைப் பிரித்து அழ விடுவார்களே தவிர ஒன்று சேர்த்துச் சந்தோஷமாக வாழ வைக்க மாட்டார்கள்! இதற்கு நாம் தான் வழி தேடிக்கொள்ள வேண்டும்!" என்றான்.

"அத்தான்! நீங்கள் என்ன வழி வேண்டுமானாலும் சொல்லுங்கள்! நான் அந்த வழியிலே உங்களைப் பின் பற்றி நடக்கச் சித்தமாயிருக்கிறேன். உயிரை உங்களிடம் ஒப்படைத்துவிட்டு உடலை இன்னொருவனிடம் ஒப்புவிப்பது என்னால் முடியாத காரியம். நீங்கள் எப்படிச் செய்யச் சொன்னாலும் செய்கிறேன்! அவர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கும் கலியாணம் நடக்காதவாறு நீங்கள்தான் செய்யவேண்டும்...!" என்று புலம்பினாள். கண்ணீர் விட்டுக் கதறினாள்.

"நாகம்மா! நாம் இருவரும் மனது வைத்தால் எந்த விஷயமும் பிரமாதமில்லை. உன்னைக் காப்பாற்ற எனக்குச் சக்தியுண்டு! உன்னை என்றும் நான் கைவிட மாட்டேன்! என் சொற்படி மாத்திரம் நீ நடந்தால் என்றும் நமக்கு இன்பம்தான்!




பாதி விலை

சமீபத்தில் ஸ்விட்ஜர்லாந்திலிருந்து ஏராளமான கடிகார சரக்குகளை வரவழைத்து அவைகளை பாதி விலைக்கு குறைவாக வழங்குகிறோம் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். ஒவ்வொரு கடிகாரமும் 3 வருஷ உத்திரவாதம் கொண்டவை. ஒவ்வொரு கடிகாரத்துடனும், ஒரு காரண்டி சர்டிபிகேட்டும், ஒரு நேர்த்தியான ஸ்ட்ராப், ஒரு வெல்வெட் பெட்டியும் இனாமாகக் கொடுக்கப்படும். பாக்கிங், தபாற் செலவு இலவசம்.

இலவசம்

புது வருஷ காலண்டரும், மடக்கக் கூடிய சீப்பும் இணைக்கப்பட்ட தையல் இல்லாத அமெரிக்கன் பிளாஸ்டிக் மணிபர்ஸ் ஒன்றும் ஒவ்வொரு கடிகாரத்துடனும் இலவசமாக அனுப்பப்படும்

குறைந்த விலைகளின் விவரம் கீழ்க்காணுமாறு:




வாடர் ப்ரூப், ரேடியம் சைஸ் 10½

நெ. ரூ.
1 க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 49/-
2 ரோ.கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 51/-



சிறிய ரவுண்டு சைஸ் 9¾

நெ. ரூ.
3 க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 39/-
4 ரோ.கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 41/-



சென்டர் செகன்ட் சைஸ் 9¾

5 க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 39/-
6 ரோ.கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 41/-




வளைவு சைஸ் 7¾

7 க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 39/-
8 ரோ.கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 41/-



டன்னோ சைஸ் 6¾

9 க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 39/-
10 ரோ.கோ. ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ் 41/-



லேடீஸ் சைஸ் 5¼

11 ரோ.கோ. ஸ்டீல்பேக், ஸில்க் ஸ்ட்ராப், பேன்ஸி டயல் 15 ஜுவல்ஸ் 50/-

PEARL WATCH CO., P. B. No. 6514, BOMBAY - 26

எவராலும் நம்மைப் பிரிக்க முடியாது!'' என்று உணர்ச்சியுடன் கூறிய சாமிநாதன் நாகம்மாளின் காதோடு இரகசியமாக ஏதோ சொன்னான்.

நாகம்மாள் "அப்படியே செய்கிறேன், அத்தான்! உங்கள் அன்பு நிரந்தரமாக இருந்தால் எனக்கு அதுவே போதும்'' என்று கூறி அவன் தோளில் சாய்ந்தாள். நேரம் போவது தெரியாமல் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்த இருவரும் கடைசியில் பிரிய முடியாமல் பிரிந்து சென்றனர்.

* * *

மறுநாள் இரவு ஒருமணி இருக்கும். நாகம்மாள் வீட்டில் எல்லோரும் படுத்து உறங்கி விட்டனர். தூங்குவதாகப் பாவனை செய்து கொண்டிருந்த நாகம்மாள் எழுந்து உட்கார்ந்து நாற்புறமும் பார்த்தாள். எல்லோரும் கட்டை போல் கிடந்தனர். முதல் நாளிரவு சாமிநாதன் கூறிய ரகசியக் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் சரியான நேரம் இதுதான் என்று எண்ணிப் படுக்கையை விட்டு எழுந்தாள். ஒரு பழம் போர்வையை எடுத்து நன்றாகப் போர்த்திக் கொண்டு பின்புறக் கதவைத் திறந்துகொண்டு வெளியேறினாள். முன்பின் திரும்பிப் பாராமல் வெகு வேகமாக நடந்தாள். பல தோப்புகளையும், குறுக்கு வழிகளையும் தாண்டிச் சாமிநாதன் குறிப்பிட்டிருந்த காளி கோயிலை அடைந்தாள். ஊருக்கு வெகு தூரத்திலிருந்த அந்தக் காளி கோயிலுக்குப் பகலில் செல்லவே யாரும் பயப்படுவார்கள்.

தைரியமாக வீட்டிலிருந்து கிளம்பிய அவள் காளி கோயிலை அடைந்தபொழுது தன்னையறியாமல் பீதி அடைந்தாள். அவள் இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. ஒரு தூண் மறைவில் ஒண்டிக்கொண்டு நின்றாள். "காளியாயி! அத்தானைச் சீக்கிரம் கொணர்ந்து விடேன்!'' என்று வேண்டிக் கொண்டாள்.

அவள் வந்து சிறிது நேரம் ஆயிற்று. சாமிநாதன் வரவில்லை. நாகம்மாள் துடித்தாள்.

தூரத்திலிருந்து ஓர் காட்டு நரி ஊளையிட்டது. பயங்கரமான அந்த இருட்டு வேளையில் நரி ஊளையிட்டது நாகம்மாளின் குடலைக்கலக்கியது. காட்டு நரியைப் பற்றி அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். அது இரவு வேளைகளில் காளி கோயிலில் வந்து கத்துமாம். மனிதர்களைக் கண்டால் கொன்று விடுமாம். இதை நினைத்த நாகம்மாள் பயத்துடன் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்தாள். அவள் மனத்தில் பல சந்தேகங்கள் எழுந்தன. இன்னும் அத்தான் ஏன் வரவில்லை. இத்தனை நேரம் தோன்றாத எண்ணங்களெல்லாம் தோன்றி வதைக்கத் தொடங்கின. ஒருவேளை தன்னை ஏமாற்றி விட்டாரோ! அவர் வராமலேயே இருந்துவிட்டால்! அவள் உடல் நடுங்கியது.

நாகம்மாள் மூளை குழம்பிப் போனாள். ஏன் வீட்டை விட்டு வந்தோம் என்று தன்னையே நொந்து கொண்டாள். என்னதான் அவள் மனத்தில் சந்தேகம் வலுவடைந்திருந்த போதிலும் சாமிநாதன் கூறிய அன்பு மொழிகளையும் உறுதி மொழிகளையும் அவளால் மறக்க முடியவில்லை. "அவ்வளவு அன்புடன் பேசியவர் நான் நினைப்பதுபோல் மோசக்காரராகவா நடந்து கொள்வார்?'' என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

அவள் இப்படித் திணறிக் கொண்டிருக்கும் பொழுது காட்டு நரி ஒன்று இன்னொரு மிருகத்துடன் சண்டை போட்டுக்கொண்டு ஊளையிட்ட வண்ணம் காளி கோயிலின் முன் பிரகாரத்துக்கு ஓடிவந்தது. நாகம்மாள் தூண் மறைவில் நின்று கொண்டிருந்தவள் நடுங்கிப் போனாள். இரண்டு மிருகங்களும் ஒன்றின்மேல் ஒன்று பாய்ந்து சண்டையிடும் காட்சி மிகப் பயங்கரமாக இருந்தது. அதற்குமேல் அவளால் அங்கு நிற்க முடியவில்லை. தன்மேல் போர்த்தியிருந்த போர்வை கீழே விழுந்ததைக்கூடக் கவனியாமல் அவ்விடத்தை விட்டு ஒரே ஓட்டமாக ஓடினாள். தலைதெறிக்க ஓடினாள். பொழுது விடிவதற்குள் தன் வீட்டுக்குப் போய்விட வேண்டுமென்று ஓடினாள். ஆனால் பாதி தூரம் போவதற்குள் அவள் கால்கள் சோர்ந்து விட்டன. பயத்தினாலும் குழப்பத்தினாலும் அவள் சரீரம் தளர்ந்து விட்டது. மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. மேலும் அவளால் ஓடமுடியாமல் தொப்பென்று விழுந்தாள்.

விழுந்த அவள் எழுந்திருக்க முயற்சித்தபொழுது கால் சுளுக்கிக் கொண்டிருப்பதை உணர்ந்து தவித்தாள். "ஐயோ! பொழுது விடிவதற்குள் எப்படி வீட்டுக்குப் போய்ச் சேருவேன்! ஏ, காளியம்மா! உனக்குக் கருணை இல்லையா!'' என்று கண்ணீர் விட்டாள், கதறினாள். அப்படியே சோர்ந்து விட்டாள்.

அவள் கண் விழித்தபொழுது சாமிநாதன் மடியில் படுத்திருப்பதை அறிந்து திகைப்படைந்தாள். உண்மையிலேயே சாமிநாதன் தானா...! அல்லது...! கண்களைத் துடைத்துக் கொண்டு கூர்ந்து கவனித்தாள். ஆம்! ஆம்! சாமிநாதன் தான்! நாகம்மாள் கண் விழித்ததைக் கண்ட சாமிநாதன் அவள் முகத்தருகில் குனிந்து "நான் தான் சாமிநாதன்! உன் ஆசை அத்தான்! பயப்படாதே!'' என்று அன்புடன் கூறினான்.



"முன்பெல்லாம் என் அத்தை அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவாள். எங்களுக்கெல்லாம் ஒரே கொண்டாட்டமாயிருக்கும். இப்போது......''

"ஏன் இப்பொழுதெல்லாம் உன் அத்தை வருவதில்லையா?''

"இல்லை, அப்பா! இப்பொழுது அவள் எங்கள் வீட்டிலேயே இருக்கிறாள்!''

"நீங்கள் எப்படி வந்தீர்கள்...! என்னைக் காளி கோயிலில் அலையும்படி விட்டு விட்டீர்களே...!" என்று மேலும் அவள் புலம்பிக்கொண்டே போவ தற்குள் சாமிநாதன் அவள் வாயைத் தன் கரங் களால் பொத்தினான்.

"நீ ரொம்ப களைப்பாய் இருக்கிறாய், நாகம்மா! இந்தத் தண்ணீரைச் சாப்பிடு. சற்று நேரத்துக் கெல்லாம் சொல்கிறேன்!" என்றான். நாகம்மாள் தண்ணீரைச் சாப்பிட்டு விட்டுக் களைப்பாறி னாள். அவள் மீண்டும் பேச ஆரம்பிப்பதற்குள் சாமிநாதன் கூற ஆரம்பித்தான்.

"நாகம்மா! உன்னைக் காளிகோயிலில் வந்து சந்திக்கும்படி கூறிவிட்டு வீட்டுக்குச் சென்றேனா! அன்று முழுவதும் வீட்டில் வேலை இருந்து கொண்டே இருந்தது. மறுநாள் இரவு உன்னைச் சந்திப்பதற்கு முன் இரவெல்லாம் கண்விழித்த படி நடு இரவை எதிர்பார்த்துக் கொண்டிருந் தேன். என் துரதிர்ஷ்டம் என் அம்மாவைத் தேள் கொட்டி விட்டது. வீட்டில் எல்லோரும் தோப்பு வைத்தியர் வீட்டுக்குப் போகுமாறு என்னைத் துரத்தினர். எனக்கு ஒன்றும் புரிய வில்லை. நீ காளி கோயிலில் தனியாகக் காத்துக் கொண்டிருப்பாயே என்ற மனத்துடிப்பு. அம்மா வலியால் கதறிக் கொண்டிருக்கும் பொழுது அவளை எப்படிக் கவனிக்காமல் வருவது என்ற கடமை உணர்ச்சி இரண்டுக்குமாக தத்தளித்து விட்டு வைத்தியர் வீட்டுக்குப் போய் விட்டு வந்து விடுவது என்று ஓட்டமாக ஓடினேன். வைத்திய ரிடம் மருந்து வாங்கிக் கொண்டுவந்து வீட்டில் கொடுத்துவிட்டு வெகு வேகமாகக் காளிகோயி லுக்கு ஓடிவந்தேன். காளி கோவிலுக்கு வந்து பார்த்தபொழுது என் வயிறு பகீரென்றது. ஒரே ரத்த வெள்ளம். உன் போர்வை கீழே கிடந்தது. அதைப் பார்த்தபொழுது ஏதோ காட்டு மிருகம் உன்னைக் கொன்று விட்டது என்று எண்ணினேன். என் இருதயம் வெடித்து விடும்போல் இருந்தது. பைத்தியம் பிடித்தவனைப்போல் அங்கிருந்து கிளம்பி ஓடி வந்தேன். இந்த மரத்தடியில் யாரோ விழுந்து கிடப்பதைப் பார்த்து அருகில் வந்து பார்த்தேன். உன்னைக் கண்டதும் எனக்கு ஆச்சரியம் தாங்க வில்லை. இறந்து விட்டாய் என்று நான் நினைத்துக் கொண்டிருக்கும்பொழுது எதிர்பாராத இடத்தில் உன்னைக் காண்பது என்றால் என் கண்களையே முதலில் என்னால் நம்ப முடியவில்லை. பிறகு தண் ணீர் கொண்டு வந்து உன் முகத்தில் தெளித்தேன். நீ கண் விழித்தாய், நாகம்மா! நீ எப்படி இங்கே வந்தாய்! காளி கோவிலில் ரத்த வெள்ளமாகக் கிடந்ததே அதெல்லாம் என்ன...!" என்று சாமி நாதன் ஆவலுடன் கேட்டான்.



"நீ என்னுடைய கோட்டைப் போட் டுக் கொண்டிருக்கிறாய்! அது என்னு டைய கோட்டுதானென்று உனக்குத் தெரி யும் அல்லவா?"

"ஆகா! பேஷாய்த் தெரியும். உன்னு டைய புது ஷர்ட்டையும் நான்தானே போட்டுக் கொண்டிருக்கிறேன்? அது அழுக்காய்ப் போய் விடுமே என்பதற் காகத்தான் உன் கோட்டையும் எடுத்துப் போட்டுக் கொண்டேன்!"

நாகம்மாள் தனக்கு ஏற்பட்ட அநுபவங்களைக் கூறினாள். "காளி கோயிலில் நீங்கள் பார்த்த ரத்தம் இரண்டு பயங்கர மிருகங்களும் சண்டை போட்டுக் கொண்டு ஒன்றை யொன்று கடித்துக் கொன்று கொண்டதுதான். அந்தப் பயங்கரத் தைப் பார்த்துத்தான் ஓடி வந்து விட்டேன். நல்ல வேளையாக நீங்கள் இப்பொழுது வந் தீர்கள். இல்லையென்றால் எங்காவது ஆறு குளத் தில் விழுந்து உயிரை விட்டிருப்பேன்!" என்றாள் நாகம்மாள். "அந்தக் காளியாயி நம்மை ஒன்று சேர்த்து விட்டாள். நாகம்மா! இனி நமக்கு ஒரு குறைவுமில்லை!" என்று கூறிச் சாமிநாதன் காளி யம்மனைக் கையெடுத்துக் கும்பிட்டான்.

3

நாகம்மாளின் தகப்பன் திடுக்கிட்டு எழுந் திருந்தான். 'நாகம்மா! நாகம்மா!' என்று கூவிக் கொண்டே தன் மகள் படுத்திருந்த இடத்துக்கு ஓடினான். நாகம்மாள் நன்றாகத் தூங்கிக் கொண் டிருந்தாள். அதைப் பார்த்தவுடன்தான் தான் இது வரையில் கண்டது கனவு என்று அவனுக்குத் தெரிந்தது. அவன் ஒரு முறை தன்னைத் தேற் றிக் கொண்டான். அந்தச் சமயத்தில் நாகம்மாள் ஏதோ பிதற்றுவது போலிருந்தது. அருகில் சென்று கவனமாகக் கேட்டான்.

"அப்பா! என்னைச் சாமிநாத அத்தானைத் தவிர வேறு யாருக்காவது கல்யாணம் செய்து கொடுத்து விடாதீர்கள். அப்படி ஏதாவது நடந்து விட்டால் நாகம்மாளை நீங்கள் உயிரோடு காண முடியாது" என்று பிதற்றிக் கொண்டிருந்தாள்.

அது அவன் இதயத்தைத் தொட்டு விட்டது. தன் மகளை எழுப்பினான். நாகம்மாள் கண் விழித் துப் பார்த்தாள். 'அப்பா!' என்று அவனைப் பிடித் துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். "அப்பா! எனக்குக் கலியாணமே வேண்டாம். நான் கன்னி யாகவே இருந்து விடுகிறேன்" என்றாள்.

"நாகம்மா! நீ கவலைப்படாதே. உன் மனதை நான் நன்றாகத் தெரிந்து கொண்டேன். என் னுடைய வறட்டு நப்பாசையும் தெளிந்து விட்டது. நான் உன்னைச் சாமிநாதனுக்குத்தான் கலியாணம் கொடுக்கப் போகிறேன்" என்றான்.

"அப்பா! நீங்கள்தான் தெய்வம்" என்று அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

"எல்லாம் நம் குலதெய்வம் காளியின் கருணை தான்" என்றான் நாகம்மாளின் தகப்பன்.

இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு காளி கோயில் கற் சிலைபோல செயலற்று நின்று கொண் டிருந்தாள் நாகம்மாளின் அருமைத் தாயார்.



எந்த ஸ்திரீயும் விரும்புவது உடலிலுள்ளது போன்ற மிருதுவான அழகிய சருமங்கொண்டதும், மாசு மருவற்றதுமான வதனத்தையே. இது கனவாயிவிடாமல் நனவாகச் செய்யக்கூடியது டாகெட் & ராம்ஸ்டெல் வானிஷிங் கிரீம். இச்சிறந்த கிரீம் ஆடைகள் உடலை காப்பதுபோல, வெப்பம், மழை, காற்று, தூசி, இவைகளினின்றும் முகத்தை காப்பாற்றி சருமத்திலிருக்கும் குறைபாடுகளையும் மறைந்து விடுகிறது. முகப்பவுடர், அதை எண்ணெய்த்தனையும் சமமாக பற்றச் செய்து, நீடித்த புதுமையுடன் சோபிக்கிறது.



டாகெட் & ராம்ஸ்டெல்
உன்னத வானிஷிங் கிரீம்

வியோலா



எஸ்ஸென்ஸீம் கலர்களும்

ஐஸ்கிரீம், சோடாவாட்டர் சர்பத், கன்பெக்ஷனரி, பிஸ்கட்டுகள் செய்வதற்கு சிறந்தது

மோடி அண்ட் கோ.
கோவிந்ஸ்லஸ் தெரு
பம்பாய் 2

"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"



1 மண்டலம் (48 நாள்) பூஜை செய்தும்

ஆயுள் பூராவும் பலன் தரும் வெள்ளி ரக்ஷை

ரூ. 43—12—0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். டி தொகை, வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குமாக தொகை, மீதி ரூ. 38ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B. (1) ஆர்டர் கிடைத்த 9ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு பேர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்மூலம் அனுப்பவும். (3) V. P. கிடையாது. (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

★

கோட்டபருதூர்,
ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜ்யோதிஷ ஆபீஸ்,
அரகண்டநல்லூர் P.O. (S. A. Dt.)

வாழ்விக்க வந்தவள்

கௌரி

மார்க்கெட்டிலிருந்து அலுப்புடன் திரும்பிய நான் சாமான் பையைக் கீழே வைத்து விட்டுச் சோர்ந்து உட்கார்ந்தேன். பரபரப்புடன் ஓடி வந்த கமலா அன்றைய தினப் பத்திரிகையை என்னிடம் கொடுத்தவாறே "இதோ பார்த்தீர்களா! ஏதோ விமான விபத்து சமீபத்தில் ஏற்பட்டதாமே! அதில், நம் யசோதரா கூட இறந்து போய் விட்டாளாம்! படம்கூட போட்டு வந்திருக்கிறது. ஊரை விட்டுப் போகுமுன் என்னை 'வாழ்விக்க வந்தவளை' ஒரு தரம்கூடப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை" என்றாள்.

என் பதிலை எதிர்பாராததுபோல் கமலா மேலே சொல்லிக் கொண்டே போனாள். அவள் வழக்கம் அப்படி. ஆனால் அவை ஒன்றும் காதில் ஏறவேயில்லை. என் கண்கள் யசோதராவின் அழகிய போட்டோவின் மீதே லயித்திருந்தன!

கமலாவிடம் பத்திரிகையைக் கொடுத்து விட்டு நான் சிந்தனையில் ஆழ்ந்தேன். "வாழ்விக்க வந்தவள்!" என என் வாய் மெல்ல முணுமுணுத்தது.

பதினைந்து வருடங்கள் முன்பு நான் கலாசாலையில் வாசித்துக் கொண்டிருந்தேன். அப்போது என் பிற்கால வாழ்வை யொட்டிப் பல கனவுக் கோட்டைகள் கட்டியிருந்தேன். என்னுடன் கல்வி பயிலும் மாணவிகளைப் பார்க்கும்போது எனக்கும் அவ்வாறே படித்த நாகரிகமான முற்போக்குக் கொள்கையுடைய பெண்ணை மனைவியாகப் பெறவேண்டுமென்று கற்பனை செய்து கொள்வேன். அதை நினைத்து இன்புறுவேன்.

படிப்பு முடிந்து அதே கல்லூரியில் நான் ஆசிரியனாக வேலைக்கமர்ந்தேன். உடனே என் தந்தையின் விருப்பத்திற்கிணங்க விவாகத்துக்குத் தயாரானேன். இதில்தான் என் கனவு சிதறியது.

என் பிதாவின் வேண்டுகோள்படி நான் என் ஒன்றுவிட்ட ஏழை விதவை அத்தையின் இரு புதல்விகளில் மூத்தவளான கமலாவுக்கு மாலையிட நேர்ந்தது! தந்தையைத் தெய்வமாக மதித்துப் போற்றும் நான் எப்படி அவரது இச்சைக்கு விரோதமாக நடக்கத் துணிவேன்!

என் கற்பனை மனைவிக்கும் கமலாவுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள ஒற்றுமை தானிருந்தது. படிப்போ முதல் பாரம் வரைதான் படித்திருந்தாள் கமலா. நவ நாகரீகமாக உடை உடுத்தவோ நாலு பேர் வந்தால் கல கலவெனப் பேசி உபசரிக்கவோ கமலாவுக்குத் தெரியாது. இப்படிப்பட்ட மனைவியிடம் நான் கல்வி சம்பந்தமாக என்ன விவாதிக்க முடியும்!

கமலாவை மணந்து கொண்டதும் என் மனம் சலனமடைந்து கொண்டே யிருந்தது. என் கற்பனை மனைவியை எண்ணி எண்ணி ஏங்கித் தவித்துத் துடித்துக் கொண்டே யிருந்தது.

கமலா கண்ணைப் பறிக்கும் அழகி அல்ல. ஆனால் சிவப்பாக, அடக்க ஒடுக்கமாக யிருந்தாள். ஒன்றுமறியாப் பேதையவள்! அந்த அபலைக்குத் தான் என்மீது என்ன ஆசை தெரியுமா!

களங்கமற்ற அன்பை என்னிடம் வாரிச் சொரிந்தாள் கமலா. என் மனைவியை நான் நேசிக்கவில்லை என்று கூற முடியாது. ஆனால் நான் அவளிடம் வெறும் அன்பை மட்டுமா வேண்டினேன்!

கமலாவை நாகரீக மங்கையாகச் செய்ய நான் ஆரம்பித்துவிட்டேன். எனது முயற்சிகள் விழலுக்கிறைத்த நீராயின. கிராமத்திலே வளர்ந்த பெண்ணுக்கு நாகரீகம் எளிதில் பிடிபடவில்லை!

ஒரு வேளை நான் அவளை அதட்டிக் கோபித்துக் கொண்டிருந்தால் அவள் திருந்தி யிருக்கக் கூடும். ஆனால் அவள் வதனத்தில் நிலவிய சாந்தமும் கள்ளங் கபடற்ற தன்மையும் என்னை அவளிடம் கடுமையாக நடந்து கொள்ளாது தடுத்தன. அப்பேதைப் பெண்ணை, அன்புருவத்தை என்னால் கடிந்து கொள்ளவும் முடியவில்லை.

ஐந்து ஆண்டுகள் ஓடின. என் குழந்தையின் பிறப்பு இருண்டதாக நினைத்துக் கொண்டிருந்த என் வாழ்வில் சிறிது ஒளியை வீசியது. சுசீலாவின் மழலையில் எனது மனக் குறையை நான் சற்று மறந்தேன். ஆனாலும் என்னைதான் என்னைத் தேற்றிக் கொண்ட போதும் என் கற்பனை மனைவியை மட்டும் என்னால் சிறிதும் மறக்கவே முடியவில்லை. என் வாழ்வில் நிம்மதியும் இல்லை.

இச்சமயத்தில்தான் எதிர்பாராதொரு மாறுதல் என் வாழ்க்கையில் உண்டாகி என்னை மேலும் சலனமடையச் செய்துவிட்டது!

அவ்வருடம் என் கல்லூரியில் யசோதரா என்று ஒரு வட இந்தியப் பெண் வந்து சேர்ந்தாள். செல்வமும் செல்வாக்கும் கொண்ட ஓர் உயர்தர உத்தியோகஸ்தரின் ஏக புதல்வி! அதி ரூப சுந்தரி! நவநாகரீகத்தின் சிகரம்! சங்கீத மேதை! நடன ராணி! அறிவுக் களஞ்சியம்! இவைதான் யசோதரா! அவ்வளவுதான். மலரைக் கண்ட பல வண்டுகள் அதன் தேனைப் பருக ஆவலாயின!

மேலே வளர்த்துவானேன்? என் கற்பனை மனைவியின் பிரத்தியட்ச உருவமான யசோதராவிடம் நான் எனது உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டேன்! நான் பைத்தியமாகி விட்டேன்.

விந்தை! விதியின் செயலை என்னவென்பது! என்னிடமே மாணவியாக யிருந்த யசோதரா, அவளது முக தரிசனத்திற்காகப் பல இளைஞர்கள் தவமிருக்க என்னையே விரும்பியது அதிசயமில்லை! ஆம்! வகுப்பில் நான் அவளைக் கேள்வி கேட்டு விட்டால் போதும்! யசோதராவின் மதிவதனம் சிவப்பதைப் பார்க்க வேண்டுமே!

எனினும் யசோதராவோ நானோ வகுப்பு அறையைத் தவிர வேறு எங்கேயும் எப்பொழுதும் ஒரு முறைகூடத் தனித்துப் பேசிக்கொண்டறியோம்! அதற்கு முயற்சிக்கவுமில்லை.

இயற்கையிலேயே நல்ல குணம் படைத்த யசோதராவைப் பற்றி யாவரும் அறிய நேர்ந்தது. என் மனைவியின் காதிலும் தானே மோட்டார் ஓட்டிக் கொண்டு கல்லூரிக்கு வரும் யௌவன அழகி யசோதராவின் புகழுரைகள் விழலாயின.

பேதை கமலா! யசோதராவைப் பற்றி என்னிடம் விசாரிப்பாள். ஆனால் அவளுக்கு நான் சரியாக விடையளியாது மழுப்பி விடுவேன். குற்றமுள்ள நெஞ்சல்லவா! யசோதராவிடம் நான் கொண்டுள்ள காதல் எங்கேனும் வெளிப்பட்டு விடுமோ என்ற பயந்தான் காரணம்.



டிக்கட் பரிசோதகர்:—ஸார், நாடகம் ஆரம்பம் ஆகிவிட்டது. நீங்கள் தாமதமாக வந்திருக்கிறீர்கள்!

தாமதமாக வந்தவர்:—பாதகம் இல்லை. நான் ஒருவருக்கும் சிரமம் கொடுக்காமல் மெதுவாக உள்ளே போய் உட்கார்ந்து விடுகிறேன்.

பரிசோதகர்:—அது சரிதான், ஸார்! நான் உங்களுக்காகக் கதவைத் திறந்தால் உள்ளே யிருப்பவர்கள் வெளியே போய் விடுவார்களே!

வீட்டில் கமலா என்னிடம் காட்டிய அன்பும் எனக்குச் செய்யும் தொண்டும் என் மனச் சாட்சியை வசப்படுத்தி விட்டது. என் தவறை எடுத்துக் காட்டி என்னைக் குத்திச் சித்திரவதை செய்தது. அவளைக் காணும்போது என் துரோகச் செயலை எண்ணி எண்ணி உள்ளுக்குள் குமுறு வேன். தூங்கப் போகுமுன் யசோதராவை மறந்து விடுவது எனக் கங்கணம் கட்டிக் கொண்டு விடுவேன். ஆனால் மறுநாள் கலாசாலையில் யசோ தராவைப் பார்த்துவிட்டால் போதும்! எனது உறுதி தளர்ந்து போய்விடும். இவ்வாறு ஒவ் வொரு நாளும் மன அமைதியின்றி வாழ்க்கைப் படகைக் கஷ்டத்துடன் செலுத்தி வந்தேன்!

ஒரு முறை பஞ்ச நிவாரண நிதி ஒன்று திரட் டும் பொருட்டு எங்கள் கலாசாலையில் ஓர் நடன கச்சேரி தயாரிக்கப்பட்டது. பண வசூல்களைக் கவனிக்க நான் நியமிக்கப் பட்டிருந்தேன். மாண விகள் சார்பில் யசோதரா இதில் சம்பந்தப்பட் டிருப்பது எனக்கு மகிழ்வூட்டியது. யசோதரா வுடன் உரையாட ஒரு சந்தர்ப்பம் கிடைத்த தல்லவா! என்னதான் இருந்தாலும் நானும் மனிதன் தானே! சபலத்திற்கு அடிமையான வன் தெரிந்தே பாபக் கிணற்றில் விழுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை அல்லவா!

பணம் ஒப்படைக்க வேண்டிய தினம் மாலை நான் யசோதராவைக் கலாசாலையில் சந்தித்தேன். வகுப்புக்குப் போய்க் கொண்டிருந்த நான் அவ ளுக்காக நின்றேன். ஆனால் என்னைப் பார்த்தும் பார்க்காதது போல் யசோதரா நேரே போய்விட் டாள்! எனக்கு ஒருகணம் ஒன்றும் புரியவில்லை.

என்னுடன் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத் தும் அதனைப் பயன்படுத்தாமல் அவள் நழுவ விட்டது என்னை வியப்பூட்டியது. அதற்கு மேலே யோசிக்க அவகாச மில்லாததால் நான் வகுப்புக்குச் சென்று விட்டேன்.

மாலை நான் வீடு சென்றதும் கமலா என்னிடம் ஒரு காகிதப் பையைக் கொடுத்துவிட்டு "இன்று யசோதரா இங்கே வந்திருந்தாள். ஏதோ பணம் கொடுத்து உங்களிடம் கொடுக்கச் சொன்னாள். அவள் என்ன நல்லமாதிரி தெரியுமா! துளிக்கூட பணக்காரி என்ற கர்வம், படித்தவள் என்ற பெருமை இல்லாமல் இனிமையாகப் பேசுகிறாள். நம் வீடு வந்தாளே என்று காப்பி கொடுத்து உபசரித்தேன். கொஞ்ச நேரம் பேசிக் கொண் டிருந்தோம். போகுமுன் 'அம்மா! நீ நன்றாகப் பேசுகிறாய்! உனக்குத் தெரிந்த தமிழ் போதும்! பேசிக் கொண்டிருக்கலாம். தினம் ஒரு முறை வீட்டுக்கு வாயேன்' என்றேன். பாவம்! அவளுக்கு அழுகையே வந்து விட்டது! என்னையும் நம் குழந்தை சுசீலாவையும் மாறி மாறிப் பார்த்தாள். 'படிப்பதற்கே நேரம் போதவில்லை. இல்லா விட்டால் தினம் வருவேன்' என்று சொல்லிப் போய் விட்டாள். மிகவும் நல்ல பெண்!" என்றாள்.

கமலாவின் பேச்சைக் கேட்டு என் இதயம் விம்மியது. யசோதராவின் கண்ணீரின் உண்மைக் காரணத்தைப் பேதை கமலா எப்படி அறிவாள்! 'அம்மா தினம் ஒரு முறை வீட்டுக்கு வாயேன்' என்ற கமலாவின் கள்ளங் கபடற்ற அழைப்பும் உபசரிப்பும் அல்லவா யசோதராவின் இதயத் தைத் தொட்டு விட்டன! அவள் பெண்ணானை தால் கண்ணீரை அடக்க முடியவில்லை. கமலா வின் கபடமற்ற பேச்சு என்னை நிலை தடுமாற வைத்தாலும் மிகச் சிரமப்பட்டு நான் கண்ணீர் விடாமல் அடக்கிக் கொண்டேன்.

அன்றையிலிருந்து யசோதராவின் நடத்தையில் விசேஷ மாறுபாடு உண்டாயிற்று. கபடமற்ற, குழந்தையுள்ளம் படைத்த என் மனைவியின் களங்கமற்ற அன்பு நிறைந்த அழைப்பு அவளை ஒருங்கே மாற்றி விட்டன!

யசோதராவே தன்னை யடக்கிக் கொண்ட போது எனக்கு என்னை மீறத் துணிவு எங்கே! அன்று முதல் அவளை ஏறிட்டுப் பார்க்கவும் நடுங்க லானேன்! வகுப்பில் அவளைக் கேள்விகள் கேட் பதையும் விட்டு விட்டேன். அன்று முதல் யசோதரா எனக்குத் தேவி பராசக்தியின் அவ தாரம் போல் தோன்றலானாள்.

மாதங்கள் ஓடின. யசோதரா பரீட்சையும் எழுதி விட்டாள். காலேஜைவிட்டு, ஊரைவிட்டுப் போகுமுன் எல்லா ஆசிரியரிடமும் அவள் விடை பெற்றுக் கொண்டாள். நானும் அச்சமயம் அங் கிருந்தேன். காரில் ஏறிக் கொண்டதும் என்னிட மும் விடை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் என்னை அருகில் அழைத்தாள்.

யசோதராவிடம் ஏற்பட்ட மாறுதலுக்குப் பின் அன்று தான் முதல் முதலாக நான் அவளைத் தலை நிமிர்ந்து நேருக்கு நேர் நோக்கினேன்.

தலை குனிந்தவாறே யசோதரா "நான் போய் வருகிறேன். தங்கள் மனைவியிடம் எனது வணக் கத்தைத் தெரிவியுங்கள். கிடைத்தற்கரிய பொக் கிஷத்தைத் தாங்கள் பெற்றிருக்கிறீர்கள். எனது அன்பின் சின்னமாக என்னை 'வாழ்விக்க வந்த' உங்கள் உத்தம மனைவிக்கு இந்தச் சிறு பரிசை அளிக்கிறேன். ஏற்றுக் கொள்ள வேண்டும்" என மெல்லிய குரலில் கூறிவிட்டு என்னிடம் ஒரு பெட்டியைக் கொடுத்தாள். வாயடைத்துப்

போய் நின்ற நான் அதை மறுக்க மனமில்லாமல் பெட்டியை நடுங்கும் கரங்களோடு பெற்றுக் கொண்டேன். என்னைச் சமாளித்து கொண்டு மேலே ஏதும் கூறும் முன் கார் நகர்ந்துவிட்டது. யசோதராவின் அழகிய கண்களில் கண்ணீர் சுரந்து நின்றதைக் காண நான் தவறவில்லை.

யசோதரா பலருக்குப் பரிசு கொடுப்பதும், நன்கொடையளிப்பதும் சர்வ சாதாரணமானதால் கமலா குமார் ஐந்து பவுனுக்குக் குறையாத அந்த நெக்லேசைக் கண்டு சிறிதும் திகைக்கவில்லை. மேலும் அந்த நெக்லேஸ் அவளுக்கு அச்சமயம் அவசியம் தேவையாகவிருந்தது.

என் மைத்துனி சீதாவின் கல்யாணம் நிச்சயமாகி யிருந்தது. ஆனால் நான்கு பவுனில் ஒரு சங்கிலிக்காக அது நின்றுவிடும் போலிருந்தது. இச் சங்கிலிக்கு என்று ஏழை அத்தை என்னையே நம்பிக் கொண்டிருந்தாள். ஆனால் நான்கு பவுனுக்கு நான் எங்கே போவேன்! யசோதராவின் பரிசு அச் சங்கடத்தைத் தீர்த்து விட்டது! நெக்லேசைக் கண்ணுற்ற கமலா ஆனந்த மிகுதியால், "யசோதரா பெண்ணல்ல! தெய்வம்தான்! நம்மை, முக்கியமாக சீதாவை 'வாழ்விக்க வந்தவள்'" என்று வாய் விட்டுக் கூறினாள்.

சீதாவின் திருமணமும் எவ்விதமான தடையுமின்றி வெகு சிறப்பாக நடந்தேறியது!

யசோதரா அன்று போனவள் தான். அதன்பின் அவள் சென்னைக்கு வரவேயில்லை. கமலா மட்டும் அவளை ஒருமுறை பார்த்துத் தன் அன்பைக் காட்டத் துடித்துக் கொண்டிருந்தாள்.

சென்னையை விட்டுப் புறப்படும் தினம் அவள் காரில் உட்கார்ந்துகொண்டு கூறிய வார்த்தைகள் என் காதிலே ஒலித்துக் கொண்டே யிருந்தன. அமைதியற்று தவித்துக் கொண்டிருந்த எனது மனமும் அன்றே தெளிவடைந்தது. எண்ண அலைகள் கொந்தளித்துக் கொண்டிருந்த இதயக் கடலில் சலனம் நீங்கிச் சாந்தி நிலவியது.

என் கற்பனை மனைவி மக்கி மடிந்தாள். அவளது ஸ்தானத்தில் என் அன்பு மனைவி, என் தர்ம பத்தினி கமலா ஆட்சி புரியலானாள்!

இதெல்லாம் ஐந்து வருடங்களுக்கு முன்பு நடந்தவை. சென்னையை விட்டுச்சென்ற யசோதரா சீமைக்குப் பயணமானாள் என்று கேள்வியுற்றேன். சீமையிலிருந்து திரும்பிக் கல்கத்தா வந்தாளாம். அங்கிருந்து டெல்லி செல்லும்போதுதான் அகால மரண மடைந்தாள்! பாவம்! உத்தமி!

"என்ன! யசோதரா போய்விட்டாளே யென்று வருத்தப்படுகிறீர்களா! யசோதரா மறுபிறப்பு எடுத்திருக்கிறாள்" என்றாள் கமலா.

கமலாவின் குரல் கேட்டு நான் சிந்தனை உலகிலிருந்து விடுதலை யடைந்தேன். அவள் கையில் ஒரு கடிதம் இருந்தது. மைத்துனி சீதா பிரசவித்திருந்தாள். பெண் குழந்தை பிறந்திருந்தது. சீதா குழந்தைக்குத் தன்னை 'வாழ்விக்க வந்த' யசோதராவின் பெயரையே வைக்கத் தீர்மானித்திருக்கிறாள். வேறு எந்தப் பெயரை வைப்பது!

"நியாயம்தானே! 'வாழ்விக்க வந்தவ'ளின் பெயரைத்தானே வைக்கணும்!"

"ஆமாம் கமலா" என்றேன் அமைதியுடன்.

யசோதரா, கமலா தன்னை 'வாழ்விக்க வந்தவள்' என்று கூறினாள். கமலாவோ யசோதராவை 'வாழ்விக்க வந்தவள்' என்றாள். என்னை 'வாழ்விக்க வந்தவள் யார்! கமலாவா அல்லது யசோதராவா! அல்லது கமலா யசோதரா இருவருமே சேர்ந்து தானா!' என்று யோசித்துக் கொண்டே நான் அங்கிருந்து எழுந்திருந்தேன்!





A TATA PRODUCT

கேசத்தை நன்கு பராமரித்து வருவதன் மூலம் ஒவ்வொரு பெண் மணியும் தனது சௌந்தரியத்தை பன்மடங்கு அதிகரிக்கச் செய்ய முடியும். டாம்கோ பரிமள காஸ் டர் கேச தைலத்தைத் தவறாமல் தலையில் தடவி தேய்ப்பதுடன், வாரத்திற்கொருமுறை டாம்கோ ஷாம்பூவால் கேசத்தை அலசிக் கழுவியும் வந்தால் உங்களுக்கும் அது சுலப சாத்தியந்தான்.

டாம்கோ பரிமள
காஸ்டர் கேச தைலம்
மற்றும் ஷாம்பூ

ஸ்ரீ டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்



என். சுப்ரமணியம்

இரவு நேரம். மணல் மேட்டில், பனை மரங்களுக்கு ஊடாக உள்ள குடிசைக்குள், சிறிய மண்ணெண்ணெய் விளக்கின் ஒளி தவிர வேறு வெளிச்சமே இல்லை. சுவரில் மீன் பிடிக்கும் வலையும் கூடையும் இரண்டொன்று தொங்கின. சுவர் ஓரமாக கூட்டுக்குள் நெருங்கிக் கிடக்கும் குஞ்சுகளைப் போல ஐந்து குழந்தைகள் ஒண்டிக் கிடந்தன. அவைகள் அருகிலே தாய் படுத்திருக்கிறாள். வீட்டுக்கு வெளியே, கன்னங் கரிய கடல் வெண்ணிய நுரைகளைப் புகையவிட்டு அலை மோதுகிறது. கடலுக்கு மீன் பிடிக்கப் போனவன் இன்னும் வரவில்லை.

வலைஞன், சிறு பிள்ளை முதலே கடலோடு போராடி அன்றாட ஜீவனத்துக்கு மீன் கொண்டு வருகிறவன். மழையோ, பனியோ புயலோ, நாள் தவறாது கீழ்த் திசைக்குக் கட்டுமரம் புறப்படும். தனிமையில் கடலிலே யுத்தம் செய்து கொண்டிருக்கும்பொழுது அவன் மனைவி பொன்னி, மீன் விற்றும், வீட்டுக் காரியங்களைப் பார்த்தும், வலையைச் செப்பனிட்டும் காரியம் செய்து முடிக்கச் சரியாக இருக்கும். குழந்தைகள் ஐந்தும் தூங்கியதும் தொலைவில் தெரியும் முருகன் கோவில் வெளிச்சத்துடன் பிரகாசிப்பதை வந்து பார்த்து "முருகா! இருட்டிலும் கடலிலும் அகப்படாது என் புருஷனைக் காப்பாற்று" என்று வணங்கி விட்டு அவன் வரும்வரை விழித்துக் கொண்டிருப்பாள்.

இருள் தோய்ந்த கடலில் வைர வைடூரியம் போன்ற அலைகள் பாம்புகளாகச் சீறிக் கட்டு மரத்தைப் பரீட்சை பார்க்கும் அந்த வேளையில், அலைமோதி கஷ்டப்படும் வேளையில், மீன் பிடிக்கும் சமயம், பொன்னியை எண்ணிக் கொண்டே இருப்பான் வலைஞன்! பொன்னியோ, சின்னஞ் சிறு குடிசைக்குள்ளிருந்து கண்ணீர் வடித்த வண்ணம் அவன் நினைவாகச் சாம்பி இருப்பாள்!

இவ்வளவு கஷ்டம் இருந்தும் வயிறு நிறைய உணவு — கஞ்சிதான் — கிடைக்கும். அந்தப் பிராந்தியத்தில் அவள் வீடு தனி. மற்றும் கடலுக்குள் பிழைக்கப் போகிறவர்கள் ஒரு மைலுக்கு அப்பாலே இருந்தனர். "என் குழந்தைகள் பெரியவர்கள் ஆகி அப்பனோடு ஒத்தாசை செய்யும் காலம் வரும்போதுதான் வயிறார உண்ண முடியும்" என்ற இன்ப நினைப்பிலேயே மூழ்கி இருப்பாள் பொன்னி.

2

பொன்னி கை விளக்கை எடுத்துக் கொண்டு மணல் மேட்டை விட்டு இறங்கிக் கடலின் கோஷம் அடங்கி விட்டதா, வெண்மையாகப் பாய் மரம் தெரிகிறதா எனப் பார்க்க இறங்கினாள். பிசு பிசுவென மழை வேறு பிடித்துக் கொண்டு ஈர மண் காலில் ஒட்டி நசநசத்தது. பாதி தூரம் வந்துவிட்டவள் மழையின் வேகத்திற்குப் பயந்து கரிய பனைமரங்கள் அடியில் ஒண்டி நிற்க ஓடி வந்த சமயம், குடிசை ஒன்று தெரியவே அங்கு ஓடினாள். வீட்டுக்குள் விளக்கின் ஒளியோ மனிதர்களின் ஆரவாரமோ இல்லை. வீட்டுக் கதவு காற்றில் ஆடிக்கொண்டு நின்றது. கரையான் பிடித்திருந்த நிலையில் கை வைத்தாள் பொன்னி.

"அடடே! நேற்று ஜுரம் என்று அவர் சொன்னாரே, பாவம் எப்படி இருக்கிறது? அவளைப் போய்ப் பார்க்கலாம்" என்ற நினைப்பில் அக் கதவைத் தட்டினாள். தட்டி விட்டுப் பதிலை எதிர்பார்த்தாள். யாரும் பேசவில்லை. கடலிலிருந்து அடித்த 'ஜில்'லென்ற குளிர் காற்று உடலை வாட்டியது.

"பாவம், வீட்டுக்குள் ராமாயி ஜுரமாக இருக்கிறவளுக்கு மிகவும் கஷ்டம். விதவை. இரண்டு குழந்தையும் அவளும் எப்படிக் காலம் தள்ளுகிறார்களோ?" என்ற நினைப்பிலே ஓங்கிக் கதவை இடித்தாள். சாதாரணமாகத் தொடுக்கி வைக்கப் பெற்ற நாதாங்கி தானாகக் கழன்று கொடுத்தது.

"அம்மம்மா, என்ன தூக்கம் இவளுக்கு!" என்று நினைத்துக் கை விளக்கைத் தோளுக்கு நேராக உயர்த்திப் பிடித்துப் பார்த்தாள். ஓட்டைக் குடிசை வழியாக இரண்டொரு இடங்களைத் தவிர எங்கும் தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தன. சுவர் ஓரமாக ராமாயி நீட்டி நிமிர்ந்து கிடந்தாள். கைகள் தரையில் கிடந்தன. அவள் இறந்து போய்விட்டாள்! ஒரு காலத்தில் வலுவும் வனப்புமாக இருந்த கைகள் சோர்ந்து மெலிந்து விறைத்துக் கிடந்தன. அவளுக்குச் சற்று எட்டின தூரத்தில் இரு குழந்தைகள், ஆணும் பெண்ணுமாக தூக்கத்தில் சிரித்துக் கொள்ளும் முகத்தோடு அயர்ந்து தூங்குகிறார்கள். தனக்குப் போர்த்திக் கொள்ள வேண்டிய ஒரே ஒரு பழைய துணியைத் தன் இரண்டு குழந்தைகளுக்கும் நன்றாகப் போர்த்தி விட்டு ராமாயி அந்தக் கடுங் குளிரிலே விறைத்து விட்டாள்.

தாங்கள் அநாதை என்பதை அக் குழந்தைகள் கண்டனவா? வெளியே மழை சக்கையாக அடிக்கிறது. கடல் அலையின் பயங்கர இரைச்சல் காதைப் பிய்க்கிறது.

பொன்னி நெருங்கி, ராமாயியைக் கவனித்தாள். மழைத்துளி கூரைவழியாக விழுந்ததில் இரு துளிகள் அவள் முகத்தில் பட்டுக் கண் பக்கம் வடிந்தது. அழுவது போலிருந்தது.

பொன்னியின் உள்ளம் புழுவாகத் துடித்தது. அவள் இனம் கொஞ்சம் குமுறிற்று.

திரும்பிக்கூடப் பார்க்காமல் அங்கிருந்த ஏதோ ஒன்றை எடுத்து மறைத்துக் கொண்டு மழையிலும் காற்றிலும் இருளோடு மோதிப் பனை மரங்கள் நிறைந்த அந்த மணல் மேட்டிலே நடக்க முடியாமல் ஏன் நடக்கிறாள்? அவள் திருடச் சென்றதுதான் என்ன?

3

பரபரப்பாகத் தன் குடிசைக்குள் கொண்டு வந்து மறைவான ஒரு இடத்திலே ஒளித்து வைத்தவள், வீரனைக் கடலில் நினைத்தாள். பயம் நெஞ்சில் குடி கொண்டது. 'மச்சான் வந்துவிட்டால் என்ன சொல்வார்? என் மீது வருத்தப் படலாம்! ஐயையோ அடித்தால் என்ன செய்வேன்? அப்படியா? சேச்சே, கதவு திறக்கிறதே. வந்துவிட்டாரோ?' என்று எட்டிப் பார்ப்பாள். பிரமைதான். ஊதைக் காற்றும், கடும் மழையும் எட்டிப் பார்க்கும்.

தன் எண்ணக் கடலில் மூழ்கிய பொன்னி, கருங்கடலின் கோஷத்தையும் பேய்க்காற்றின் இரைச்சலையும் மழையின் தட தட சத்தத்தையும் மறந்து விட்டாள். கதவைத் தள்ளியதும் காலை நேரத்து ஒளி வீட்டுக்குள் புகுந்தது. அரை குறையாகக் கிழிந்த வலையும் சோர்வுற்ற உடலுமாக, ஆனால் உறுதியான உள்ளத்துடன் "வந்து விட்டார் மீன் ராஜா!" என்று உற்சாகமாகச் சொன்னான் வலைஞன்.

"மச்சான்!" என்று எழுந்து புதிதாகக் கல்யாணமான மணப்பெண் போன்று அவனைத் தாவி அணைத்துக் கொண்டாள்.

"ஏது இன்று இப்படி?" என்று கேட்டு விட்டுப் பின் "பொன்னி நமக்கு அதிர்ஷ்டமில்லை. இன்றைக்கு என் உயிர் பிழைத்ததே அபூர்வம். ஆண்டவன் செயல்!" என்றான்.

"கடலில் புயலா?" எனத் திடுக்கிட்டாள்.

"நீச்சல் அடித்து வர வேண்டியதாகப் போயிற்று. அது கிடக்கட்டும், நான் பிழைத்து வந்ததே அதைச் சொல்லு. இத்தனை நேரமும் நீ தூங்காமலா இருந்தாய்?"

புருஷனுக்கு ஏற்பட்ட ஆபத்தைக் கேட்டதும் காற்றிலும் மழையிலும் நனைந்த அவள் உடல் சற்று நடுக்கமுற்றது.

"தூங்காமலா விழித்துக் கொண்டிருந்தாய்?" என்றான் அவன் மீண்டும்.

"இல்லை வலை பின்னிக் கொண்டிருந்தேன். மச்சான் அடிக்கடி கடல் குமுறிச் சீறும் ஓசை கேட்கக் கேட்க..."

"விட்டுத் தள்ளு. நம் வாழ்க்கையில் இது ஒன்றும் புதிதில்லையே!"

கொலை செய்து விடப் போவதைப் போல நடுங்கியபடியே அவன் தோளைத் தொட்டு, "மச்சான்! ராமாயி செத்துப் போனாள். பாவம் அந்த இரண்டு குழந்தைகளும் அனாதை. ஒன்றுக்கும் பேசக்கூடத் தெரியாத பருவம்: மழலை மாறாத குழந்தைகள். பட்டினிதான் கொன்றிருக்கும் ராமாயியை" என்று சொல்லி நிறுத்தினாள்.

அவன் முகத்தில் துக்கச் சாயை படர்ந்தது. தலையிலிருந்த குல்லாயை எடுத்து மூலையில் எறிந்தான். இடுப்பில் கட்டிய கயிற்றை அவிழ்த்து விட்டான். "ஆண்டவனே! இதுவும் உன் சோதனையா? முருகா! எனக்கோ நாலு குழந்தைகள்; இவைகளுக்கு நான் ஆகாரம் போட்டாலே போதும். அந்தக் குழந்தைகளின் தாயை ஏன் அழைத்துக் கொண்டாயோ, ஆண்டவனே? சின்னஞ் சிறுசுகள்...பொன்னி உடனே போய் அவைகளை நம் குடிசைக்கு எடுத்துக் கொண்டு வா. இரு இரு. அவசரம் வேண்டாம்" என்று கண்ணீர் மல்க மோட்டுவளையைப் பார்த்தான். அங்கு ஆழ்ந்த அமைதி நிலவிற்று. அடுத்த கணம் "போ, பொன்னி! அவைகள் விழித்துப் பார்த்தால் தாயைக் கண்டு அலறும். ஓடு, ஓடு. தூக்கிக் கொண்டு வந்து விடு. இப்போது உழைப்பதை விட இன்னும் அதிகமாக உழைக்கிறேன். என் சாப்பாட்டையாவது அதுகளுக்குக் கொடு. உம், போய்க் கொண்டு வா பொன்னி. என்ன நிற்கிறாய்? உனக்கு மனசு இல்லையா?" என்று கேட்டான் வலைஞன்.



வீட்டின் ஒரு பக்கத்தில் தொங்கிய திரையை நீக்கினாள் பொன்னி. அங்கே இரு பச்சைக் குழந்தைகள் சின்னஞ் சிறு சிட்டுக் குருவிகளைப் போன்று ஒன்றின் அருகே ஒன்று ஒட்டிக் கொண்டு படுத்திருந்தன.

(பிரெஞ்சுக் கதையைத் தழுவியது.)

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD. No- M. 4392

Registered as a newspaper in Ceylon

